Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 95 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஏப்ரல் 15 2025

## ஈகைச்சுடர்
# அன்னை பூபதியின்
## 37ஆம் ஆண்டு நினைவில்...








மட்டு நகரிலே
மாமாங்க வீதியிலே
அன்னை பூபதி தவமிருந்தாள்
தமிழர் தம் வாழ்வுக்காய்
தலை நிமிர்ந்து நிற்பதற்காய்
உண்ணா நோன்பினிலே
போர் புரிந்தாள்
தன்னை எரித்தே
ஆகுதியானாள்.

உலகிலேயே உண்ணா நோன்பு போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் பெண்மணி

# அன்னை பூபதி கணபதிப்பிள்ளை

**(Annai Poopathy Kanapathipillai)**

கிரான், மட்டக்களப்பு- தமிழீழம்

தமிழீழத்தில்: 11.03.1932 | ஈகைச்சாவு: 11.03.1932

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

TOPSTARS RE/MAX ACE
வீடு வாங்க | விற்க | முதலீடு
BUY | SELL | INVEST
THRIVE FOR YOUR LIFE LONG HAPPINESS
Arul Amirthalingam
Realtor
Dir: 647-450-2479
Office: 416-270-1111 / 3-1286 Kennedy Rd, Toronto M1P 2L5

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing? Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you... Self Employed?
Temporary Resident? New Immigrant?
Not to Worry!
Please Call - THEVEN KANKESU
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
thevenk1.tk@gmail.com / theven.kankesu@mtgarc.ca

விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்:
437.345.4203



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."
தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

Sangathamil
சங்கத்தமிழ்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**அன்னை பூபதி தனிமனிதப் பிறவியாகச் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியகம் உன்னதம் அடைந்தது.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அறப்போர் தொடுத்த அன்னை பூபதி

அன்னையர் முன்னணியினரின் போட்டியைத் தீர்ப்பதற்கு அதிஸ்டச்சீட்டு குலுக்கப்படுகிறது. அன்னம்மா டேவிட் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

### *19ஆம் நாள் 2ஆம் மாதம் 1988 ஆம் ஆண்டு*

மாமாங்கக்கோவில் முன்றலில் அன்னம்மா டேவிட் சாகும் வரை உண்ணாவிரதத்தைத் தொடங்குகின்றார். அன்னையர்களின் மன உறுதிமிக்க போராட்ட உணர்வின் இறுக்கம் அதிகரித்துச் செல்வதைத் தடுக்கத் திட்டங்கள் தீட்டியது இந்தியப் படை.

சாகும் வரை உண்ணாவிரதம் அறிவிக்கப்பட்டதும் தென் தமிழீழம் முழுவதும் திரண்டனர் அன்னையர்கள். கிராமம் கிராமமாக ஆதரவு உண்ணாவிரதப்போர் தொடங்கியது. அணி அணியாக ஆதரவு ஊர்வலங்கள் நடந்தன. இந்திய அமைதிப்படை பெண்களுக்கு இழைத்துவந்த கொடுமைகளைத் தடுக்க, முக்காடுக்குள் முகம்புதைத்து, மூலைக்குள் முடங்கிக்கிடந்த முசுலிம் பெண்கள் வீதியில் திரண்டனர். மாமாங்கக் கோவிலை நோக்கி மாதர் அணி திரண்டது.

மாமாங்கக்கோவில் முன்றலில் உள்ள இந்தியப்படையின் முகாம் வெள்ளம்போல் திரண்ட பெண்களால் முற்றுகைக்கு உள்ளாக்கப்படுகிறது. உண்ணாவிரதப் போரை நிறுத்தவேண்டுமென ஆயுதந் தாங்கிய இந்தியப்படை அன்னையரை மிரட்டுகிறது. அன்னம்மா டேவிட் மரணிக்க நேர்த்தால், மக்கள் மீது கொலைக் குற்றஞ்சாட்டி, வழக்குத் தொடருவோமென அன்னையர் முன்னணியினரை மிரட்டுகிறார்கள் இந்தியப்படையினர்.

இந்தியப் படையினரின் மிரட்டல்களுக்குப் பணியாது, அன்னம்மா டேவிட்டின் உண்ணாவிரதம் தொடர்கிறது.

இந்த உண்ணாவிரதத்தை முறியடிப்பதற்குப் பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது இந்திய இராணுவம். அன்னம்மாவின் பிள்ளைகளைக் கைதுசெய்து, அவர்களுக்கு ஆசை வார்த்தைகூறி, அவர்களிடமிருந்து ஒரு கடிதத்தை எழுதி வாங்குகிறார்கள் இந்திய இராணுவ அதிகாரிகள். அந்தக் கடிதத்தில் அன்னம்மா டேவிட் பலவந்தமாக உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தப்பட்டார் எனப் பிள்ளைகள் கூறுவது போல எழுதப்பட்டது.

அந்தக் கடிதத்தை ஆதாரமாகக் காட்டி, உண்ணாவிரதமிருந்த அன்னம்மா டேவிட்டைப் பலவந்தமாகத் தூக்கிச்செல்கிறது இந்திய இராணுவம்.

இந்திய இராணுவத்தின் நயவஞ்சக நடவடிக்கை காரணமாக அன்னையர் முன்னணிக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கத்தைக் கண்டு ஆவேசமடைகிறாள் அன்னை பூபதி. அன்னையரின் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்க வேண்டுமென உறுதி பூண்ட அவர், சாகும்வரை உண்ணாவிரத்தைத் தான் தொடர்வதற்கு முன்வந்தார். அன்னம்மா டேவிட்டுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேர்ந்திவிடக்கூடாது என்பதற்காக ஒரு கடிதத்தை எழுதிக்கொடுத்தார்.

“நான் எனது சுயவிரப்பின் வேரிலேயே எனது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் நினைவிழந்துபோகும் நிலையிலும் என்னை எனது கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ தூக்கிச்செல்லவோ முடியாது” என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.






அன்னையர் முன்னணியினரின் ஆவேச நெருப்பை அணைத்துவிட்டோம், சாகும்வரை உண்ணாவிரத்தினைத் தடுத்துவிட்டோம். மக்கள் எழுச்சியை மழுங்கடித் தவிட்டோம் என இந்தியப் படை எக்காளமிட்டு, இரண்டு நாட்கள் கூட ஆகவில்லை. அன்னை பூபதி புயலாய்ப் புறப்பட்டு, மாமாங்க வீதியை வலம் வந்தாள். மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். இந்தியப் படைக்கு எதிரான கோசங் களை எழுப்பி வர வேற் றனர்.

### *19.03.1988 சனிக் கிழமை காலை 10. :45 மணி*

அன்னை பூபதியின் அகிம் சைப்போர் தொடங்கிய நேரம், மாமாங்க வீதியில் அகற்றப்பட்ட இந்தியப்படையின் முகாம் மீண்டும் அவசர அவசரமாக புனரமைப்புச் செய்யப்பட்டது. மேலதிக இந்தியச் சிப்பாய்கள் கொண்டவந்து குவிக்கப்பட்டனர். பாதுகாப்புப் பலப்படுத் தப்பட்டது. பயமுறுத்தல்களும் தொடர்ந்தன.

### *அலை அலையாகத்திரண்ட மக்கள்*

இந்தியப்படைகளின் மிரட்டல்களும் அடக்குமுறை நடவடிக்கைகளும் அன்னைபூபதியின் உறுதிமிக்க போராட்ட உணர்வுக்கு உரமூட்டிக்கொண்டிருந்தன.

“இந்தியப்படையே திரும்பிப் போ - அன்னைபூபதியைச் சாகடிக்காதே. புலிகளுடன் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண். தமிழீழ மண்ணை சுடுகாடாக்காதே”

இவ்வாறு பாடசாலைக்குச் சென்ற மாணவ மாணவியர்கள் கொளுத்தும் வெய்யிலிலும், கொடி பிடித்துக்கொண்டு கோசமிட்டவண்ணம் அலை அலையாக அணிதிரண்டு அன்னையவளுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதம் அனுட்டித்தனர்.

மட்டக்களப்பு எங்கும் ஊர்வலங்களும் அடையாள உண்ணாவிரதங்களும் நடாத்தப்பட்டன. அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுமா கோரி, வெகுசனப் போராட்டம் வியாபிக்கத் தொடங்கியது. இந்தியப்படைகளின் ஒவ்வொரு முகாம்களும் அன்னையர்களால் சூழப்பட்டு, மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

அன்னை பூபதியின் அகிம்சைப்போர் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை எனத் தென் தமிழீழமெங்கும் பரவி, மக்கள் எழுச்சிப்போராகமாறத் தொடங்கியது.

இந்தியப்படை மிரண்டது. அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போரைத்தடுப்பதற்குவழிதெரியாது திணறியது.

அடக்குமுறைகளைக்கட்டவிழ்த்துவிட்டு, அன்னையர்களை அடக்குவதற்கு, இந்தியப் படையினர் முடிவெடுத்தனர். அன்னை பூபதியின் அகிம்சைப்போருக்கு ஆதரவு தெரிவித்து, ஆரையம்பதியில் இருந்து அன்னையர்களின் மாபெரும் எழுச்சிப்பேரணி பதாதைகளோடும் சுலோக அட்டைகளோடும் கோசங்களை எழுப்பியவண்ணம் மாமாங்கக்கோவிலை நோக்கி, வந்துகொண்டிரந்த ஊர்வலத்தை இடைமறித்த இந்தியப் படையினர் அன்னையர் மீது தடியடிப்பிரயோகம் செய்கின்றனர்.



**அன்னையின் உண்ணாநோன்பைத் தடுத்து நிறுத்துவதற்காக மேடையை முற்றுகையிட்ட நிலையில் இந்திய இராணுவத்தினர்**

இந்தியச் சிப்பாய்களின் இவ்வன்செயலைக் கண்டித்துக் கடைகள் மூடப்பட்டன. பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டன. மட்டக்களப்பு எங்கும் கர்த்தால் அனுட்டிக்கப்பட்டது. இந்திய இராணவத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் எதிர் நடவடிக்கைகள் தொடருவதையும், மக்கள் அச்சமின்றி அன்னை பூபதிக்கு ஆதரவு தெரிவிப்பதையும் கண்டு அரசு அஞ்சியது.

திடீரென்று மாமாங்கக் கோவில் இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்படுகின்றது. மூலைக்கு மூலை சிப்பாய்கள் நிலையெடுத்து நிற்கின்றனர். அன்னை பூபதி அமைதியாகத் தூங்குகின்றாள். அன்னையர்கள் சூழ இருந்து பயனைகள் பாடுகின்றனர். கிறீஸ்த்தவ கீதங்கள் இசைக்கின்றனர். சர்வ மத அனுட்டானங்கள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

### *இந்தியப்படையின் மிரட்டல்கள்*

ஓர் இந்தியச் சிப்பாய் உண்ணாவிரதப் பந்தலுக்கு ஓடிவருகின்றான. “மாற்று இயக்கத் தோழர்கள் பூபதி அம்மாவைத் தூக்கிக் கொண்டு செல்லப்போகின்றார்கள்” என்ற பயப்பீதியை ஏற்படுத்துகின்றான். கோவில் வீதியில் அமர்நது பயனை நடத்திக் கொண்டிருந்த மக்கள், அன்னை பூபதியின் அருகே நெருங்கிக் கொள்கின்றனர். அன்னையர் முன்னணியினர் ஆத்திரம் கொள்கின்றனர். “எங்கே வரட்டும் பார்ப்பம். முடிந்தால் தூக்கட்டும் பார்ப்பம். எங்களின் பிணங்களின் மேல்தான் அன்னை பூபதியை அவர்களால் கைவைக்கமுடியும்” என ஆவெசத்தோடு ஆரவாரித்தனர்.

இந்தியச் சிப்பாய் கூறுகின்றான், “அப்படி அவர்கள் வந்தால், நாங்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்வோம். நீங்கள் அனைவரும் நிலத்தில் விழுந்துபடுத்துக்கொள்ள வேண்டும்.” இப்படிக் கூறிவிட்டு, அவசரமாக ஓடுகின்றான்.

அன்னையர்கள் பூபதி அம்மாவைவிட்டு அசையவில்லை. வருவதை எதிர்கொள்ளத் தயார் நிலையிலிருந்தார்கள். இந்தியச் சிப்பாய் கூறியதைப்போல் தூரத்தே ஒரு துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கிறது. அதனைத் தொடர்ந்து மாமாங்க வீதியைச் சுற்றி நிலையெடுத்து நின்ற இந்தியச் சிப்பாய்கள் அனைவரும் ஒரே நேரத்தில் ஆகாயத்தை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அன்னையர்களை அச்சுறுத்தி, பூபதி அம்மாவின் உண்ணாவிரதப் போரை முறியடிப்பதற்கே இந்தியப்படை இத்தந்திரோபாய நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்பதைப் புரிந்துகொள்ள அன்னையர் முன்னணியினருக்கு வெகுநேரமெடுக்கவில்லை.

“உன் துப்பாக்கி மிரட்டல்களுக்கெல்லாம் இந்தப் பூபதி அசையமாட்டாள்” களைத்து இளைத்துப்போன பூபதி அம்மாவின் உதடுகள் மெல்லிய ஓசையில் அசைகிறது.

உலக நாட்டுச் செய்தியாளர்கள் அன்னை பூபதியின் உண்ணாவிரதப் பந்தலை முகாமிட்டனர். அன்னையின் உண்ணாவிரதம் பற்றி உலகச் செய்தித்தாள்கள், வானொலிகள் மூலம் செய்தகிள் பரவுகின்றன.

ஆனாலும் அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றுதவதற்கு இந்தியப் படையினர் எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை. மாறாக அன்னையின் உண்ணாவிரதப் போரை முறியடிக்கும் முயற்சிகளில் அவர்கள் மும்மரமாக ஈடுபட்டிருந்தனர்.

### *ஆதரவாளர் பிள்ளைகள் கைது*

அன்னை பூபதி தனது உறுதியான உண்ணாவிரதப் போரினால் உணர்விழந்து செல்கின்றார். மருத்துவர்கள் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். ஆபத்தான கட்டத்தை அடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நகரம்பரபரப்படைகின்றது. இந்தியச் சிப்பாய்களின் இறுக்கமான நடவடிக்கைகளும் தொடர்கின்றன. வீதிக்கு வீதி இராணுவ வண்டிகள். அன்னை பூபதியின் உண்ணாவிரதப் போருக்கு உறுதுணையாக நின்றவர்கள், அன்னையர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா, வண. பிதா சந்திரா பெர்ணாண்டோ, பூபதி அம்மாவின் பிள்ளைகள், விடுதலை செய்யப்பட்டிருந்த அன்னையர் முன்னணியினரின் ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயணம் மீண்டும் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் சிறைவைக்கப்படுகின்றார்கள்.

வேட்டை நாய்கள்போல் வீதிகளெங்கும் இந்தியப்படைகள் வெறிகொண்டலைகின்றன. அன்னையின் கணவர் திரு. கணபதிப்பிள்ளையை ஓர் இந்திய அதிகாரி தனியே அழைத்துச் செல்கின்றான். ஆசை வார்த்தைகள் கூறிப்பார்க்கின்றான். ஆனால் அவரோ எதற்கும் அசையவில்லை. “நியாயம் தேடித்தான் என் மனைவி தன் உயிரை தியாகம் செய்ய உறுதி பூண்டிருக்கின்றாள்” என அவர் உறுதியாகக் கூறுகின்றார்.

இந்திய அதிகாரிகள் முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை.

அன்னை பூபதியின் இலட்சியப் போராட்டம் முடிவுக்கு வருகின்றது. 19.03.1988 ஆம் நாள் உண்ணாவிரதம் தொடங்கி, 31 ஆம் நாள் அன்னை பூபதியின் உயிர் பிரிகின்றது. தென் தமிழீழ மக்கள் சோக வெள்ளத்தில் மிதக்கின்றனர். அலை அலையாக மக்கள் மாமாங்கக் கோவிலை நோக்கி ஓடிவருகின்றனர். இந்தியப்படைகள் வீதிகளை இடைமறித்து விரட்டுகின்றன்.

மிரட்டல்களுக்கும் இடைமறிப்புகளுக்கும் மக்கள் அஞ்சவில்லை. வீட்டு வேலிகளை உடைத்து, மக்கள் வெளியேறுகின்றனர். மாமாங்கக் கோவில், மக்கள் வெள்ளமாய் நிறைகின்றது. இந்தியச் சிப்பாய்கள் மிரள்கின்றனர். மக்களின் உணர்வலைகளை அடக்குவதற்கு இந்தியப்படையால் முடியவில்லை.

அன்னையின் புகழுடலைப் பரிசோதிக்க வேண்டும் எனக்கூறி, இந்தியச் சிப்பாய்கள் அவரின் உடலைத் தூக்க முயல்கின்றனர். அன்னையின் புகழுடலைப் பாதுகாக்கின்றனர். இடையில் சிங்கள சிறீலங்காப் படையினரும் பூபதி அம்மாவின் புகழுடலைக் கைப்பற்றக் கங்கணம் கட்டிநிற்கின்றனர். இந்தியப் படையும், சிறீலங்காப்படையும் அன்னையின் இலட்சிய உடலுக்காகப்போட்டிபோடுகின்றனர். இந்த இழுபறிநிலையைப் பயன்படுத்தி, அன்னையர்கள், பூபதி அம்மாவின் புகழுடலைத் தூக்கிச்சென்று மறைவிடம் ஒன்றில் ஒளித்து வைத்துக்கொள்கின்றனர்.

### *தடைகளையும் மீறி இறுதி ஊர்வலம்*

அன்னையின் புகழுடலை எழுச்சிகரமான ஊர்வலத்தோடு நல்லடக்கம் செய்யவேண்டுமென மக்கள் திட்டமிடுகின்றனர். இந்தியப்படைகள் வீதிக்கு வீதி காவல் நிற்கின்றது. அன்னையர் மலர் மாலைகளை மறைத்துக்கொண்ட, இந்தியப்படைகளின் கண்களில் படாதவாறு குச்சொழுங்கைகள் வழியாகச்சென்று அன்னையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க கைதுசெய்யப்பட்டு, முகாமில் சிறைவைக்கப்பட்டிருந்த முக்கியத்தர்களும் பூபதி அம்மாவின் பிள்ளைகளும் விடுவிக்கப்படுகின்றனர்.

அன்னையின் புகழுடல் அலங்காரத்தோடு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படவேண்டும். அதற்கேற்ப இரகசிய வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன. அலங்காரச் சோடனைப் பொருட்கள் ஏற்பாட்டு நிலையில் வைக்கப் படுகின்றன. சட்டத்தரணி பொன் வேணுதாஸ், செய்தித்தாள் ஆசிரியர் நித்தியாந்தம் ஆகியோர் இறுதியேற்பாடுகளைக் கவனிக்கின்றனர். இரவோடு இரவாக வீதிகள் அலங்கரிக்கப்படுகின்றன.

அன்னையின் உயிர்பிரிந்த மூன்றாம் நாள், வெள்ளை ஆடையணிந்த அன்னையர்களின் அணிவகுப்பில் மக்கள் திரளுக்கு மத்தியில் அன்னை பூபதியின் புகழுடல், அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக வந்துகொண்டிருந்தது.

வீதிகளில் காவல்நின்ற இந்தியச் சிப்பாய்கள் அன்னை பூபதியின் புகழுடலுக்கு சிரம் தாழ்த்தி வணங்கிநின்றனர். ஊர்வலம் கல்லடிப் பாலத்தைக் கடந்துசெல்வதைக் கண்ட மக்கள், ஓடோடி வந்து அணியில் சேர்ந்துகொள்கின்றனர். நாவலடிக் கடற்கரையை நோக்கி, நீண்ட மக்கள் பேரணிகளோடு அன்னையின் புகழுடல் சென்று கொண்டிருக்கின்றது.

அன்னை பூபதியின் உயிரற்ற உடலைக்கூட இந்திய ஆக்கிரமிப்புப் படைநெருங்க முடியாமற்போயிற்று. தமிழ் மக்களின் எழுச்சியினையும் விடுதலை வேட்கையினையும் அடக்குமுறையால் அடக்கிவிடமுடியாது என்பதனை அன்னைபூபதியின் இறுதி ஊர்வலம் எடுத்துக்காட்டியது.

ஒரு தாயின் ஒப்பற்ற தியாகமாக தமிழீழப் பெண் இனத்தின் எழுச்சிவடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் முடிவுற்றது. அன்னையின் துணிவும் ஊறுதியும் அற்புதமான தற்கொடையும் இந்திய வல்லாதிக்கத்தைத் தலைகுனியவைத்தது.

- களத்தில் 07.04.1995



ஈகைச் சாவடைந்த அன்னை பூபதி அவர்கள்



அன்னைக்கு குடும்பத்தினர் வணக்கம்



அன்னைக்கு மகளிர் வணக்கம்



அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம்



# ஈகைச்சுடர் அன்னை பூபதி நினைவிடம், நாவலடி – மட்டு









# தமிழ் ஈழத்தின் தாய் அன்னை பூபதி






# கிளிநொச்சி மக்களுடைய 1209.22 ஏக்கர் காணி சிறீலங்காமுப்படையினரால் அபகரிப்பு

01.04.2025

கிளிநொச்சி மாவட்டத்தில் 1209.22 ஏக்கர் மக்களின் காணிகளை சிறீலங்கா முப்படையினரும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என வடமாகாண காணி உரிமைக் கான மக்கள் அமைப்பின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் வசமுள்ள காணி தொடர்பில் கேட்ட போதே அவர் செவ்வாய்க்கிழமை (01) இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களது காணிகள் பல விடுவிக் கப்படாது இராணுவத்தினர் வசம் காணப்படுகின்றது.

அந்தவகையில், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 653.65 ஏக்கரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 180.38 ஏக் கரும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 116.61ஏக்கரும், பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் 248.18 ஏக்கரும் என 1209.22 ஏக்கர் காணி இராணுவம் வசமுள்ளது.

மக்களின் காணிகளை முப்படையினரும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்பதே காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் வேண்டுகோள் எனவும் அவர் தெரிவித்தார்.



# மன்னாரில் காற்றாலை மின்திட்டம்: சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் மீண்டும் கரிசனை

02.04.2025

மன்னாரில் பாரிய அளவிலான காற்றாலை மின்திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து சுற்றுசூழல் பாது காப்பு அமைப்புகள் மீண்டும் கரிசனை வெளியிட்டுள்ளன.



வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம், சுற்றுச்சூழல் நீதிமையம்,சுற்றுசூழல் அறக்கட்டளை லிமிடெட் உட்பட் சூழல் பாதுகாப்பு அமைப்புகளே மன்னாரில் பாரிய அளவிலான காற் றாலை மின்திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து சுற்றுசூழல் பாதுகாப்பு அமைப்புகள் மீண்டும் கரிசனை வெளியிட்டுள்ளன.

தனித்துவமான மற்றும் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்பை கொண்ட மன்னார் தீவு தொழில்துறை திட்டங் களால் கடுமையான பாதுகாப்பை எதிர்கொள்கின்றது என தெரிவித்து வரும் சூழல் பாதுகாப்பு ஆர்வலர்கள் தொழில்துறை திட்டங்களால் மன்னார் தீவின் பல்லுயிரியல் பாதிக்கப்படலாம், உள்ளூர் வனவிலங்குகளிற்கு ஆபத்து ஏற்படும் என எச்சரித்து வருகின்றனர்.

மன்னாரில் அதானி குழுமம் முன்னெடுக்கவிருந்த காற்றாலை மின் திட்டத்தினால் சூழலிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து கரிசனைகள் வெளியாகியிருந்தன, இந்த கரிசனைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதா என்பதே பிரச்சினையின் மையமாக உள்ளது.

கட்டணங்கள் குறித்த விடயங்களும், பொருளாதார நலன் களும் முக்கியம் பெற்றன, சூழல் பாதிப்புகள் குறித்த விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன என சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட் டுகின்றனர்.

இதன் காரணமாக இலங்கையின் சூழல் பாதுகாப்பினை சமரசம் செய்யும் விதத்திலான திட்டமொன்று முன்னெடுக்கப் படும் ஆபத்துள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னாரின் பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்புடன், காற் றாலை மின்சக்தி திட்டம் இணைந்து இயங்க முடியுமா என




சுற்றுச்சூழல் நீதிமையத்தின் சூழல் விஞ்ஞானி ஹேமந்த விதானகே கேள்வி எழுப்புகின்றார்.

மீள்சக்தி திட்டத்தினை பல்லுயிரியத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் முன்னெடுக்க கூடாது என அவர் தெரிவிக்கின்றார்.

அபிவிருத்தி குறித்த விவாதங்களின் போது சூழல் ஆர்வலர்கள் அபிவிருத்தி திட்டங்களிற்கு தடையாக உள்ளனர் என தவறாக சித்தரிக்கப்படுகின்றனர் என சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர்.

# செம்மணி அகழாய்வுக்கு நிதி விடுவிக்கப்படவில்லை

02.04.2025

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் மனித என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மேலதிக அகழாய்பை மேற்கொள்வதற்கு நிதி விடுவிக்கப்படவில்லை என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதிமூலம் தொடர்பில் உறுதியான தகவல்கள் நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

அத்துடன், அகழ்வுகளுக்காக துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவை அழைப்பது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இவற்றை ஆராய்ந்த மன்று, வழக்கை நாளைமறுதினம் வரை தவணையிட்டுள்ளது. மேற்படி விட யங்கள் தொடர்பான கட்டளைகள் நாளைமறுதினம் வழங்கப் படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி வி.எஸ்.நிறஞ்சனும், ரனித்தா ஞானராஜாவும் முன்னிலையாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தையிட்டியில் சட்டவிரோத விகாரை தொடர்பில் கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதற்கே!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்

02.04.2025

வட தமிழீழம், யாழ்,தையிட்டியில் சட்டவிரோத விகாரை பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் செவ்வாய்க்கிழமை (01) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீதி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் யாழ். நாக விகாரையில் அவ்விகாரையின் தலைவர் மற்றும் சமய தலைவர்கள், நீதி அமைச்சர் ஆகியோரின் பங்கேற்போடு தையிட்டியில் சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை காரணமாக பாதிக்கப்பட்டவர்களோடு கலந்துரையாடலொன்று இம்மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இது சமய பிரச்சினையாக உருவேற்றப்பட்டு வருகின்றது. உண்மையில் இது தமிழர்களின் தேசிய அரசியல் சார்ந்த பிரச்சினை. சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை மற்றும் மட ஆலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடமும் தமிழர்களிடமும் அரசும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் மன்னிப்பு கோருவதோடு தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும். அதுவே சமய மற்றும் இன நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்.

படையினர் தமது இராணுவ வரையறைகளுக்கு அப்பால் சென்று நாட்டின் சட்டத்தையும் மீறி அரச வளங்களையும், தனியார் வளங்களையும் உபயோகித்து இன மற்றும் சமய முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் ஆக்கிரமிப்பு மனப்பான்மையோடு தையிட்டியில் விகாரை எழுப்பியுள்ளதோடு அதனை மேலும் பலப்படுத்த மடாலயத்தையும் கட்டியுள்ளனர்.

கட்டட மற்றும் நாட்டின் சட்ட நெறிமுறை தவறிய குற்றவாளிகள், இதற்கு அனுமதி அளித்த அரசியல் தலைமைகள், துணை நின்ற பேரினவாத சக்திகளை நீதி முன் நிறுத்த திராணியற்ற அரசும் நீதி அமைச்சரும் சமய நல்லிணக்கம் எனும் போர்வையில் பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே.

அதுவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கையில் அதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருக்கையில் மக்களின் ஆதரவை திரட்டுவதற்காக மறைமுகமாக எடுக்கப்படும் முயற்சியாகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனலாம்.

அத்தோடு இதயச் சுத்தியோடு பிரச்சினைக்கான தீர்வு நோக்கி ஆட்சியாளர்கள் பயணிக்க விரும்புவதில்லை என்பதையுமே வெளிபடுத்துகிறது. இது சாதாரண மக்களை அழைத்து அரசியல் பம்மாத்து காட்டும் வெளி வேடமே.

கடந்து வருடம் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தமிழர்களின் பூமிக்கு வந்து “அரசியலில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம்” என்றவர் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார மேடையிலும் அதே கருத்தினை வெளிப்படுத்தினார். அரசமைத்த பின்னர் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியவர்கள் இப்போது அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய முடியாது. அதற்கு பல சட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்று கூறுவது ஏன்?

தேர்தலுக்கு முன்பாக கூறியதும் தேர்தலுக்கு பின்பாகக் கூறியதும் ஆட்சி பீடத்திலிருந்து கூறுவதும் நேரெதிர் கருத்துக்களாகவே உள்ளன. அதைப் போன்று தான் தையிட்டி விவகாரத்திலும் நீதி நிலைநாட்டப்படும் என்றவர்கள் தற்போது எத்தகைய நீதி என கூறமுடியாமல் பாதிக்கப்பட்ட மக்களை அழைத்து கலந்துரையாடல் நடத்த நினைப்பது மக்களை திசைதிருப்பி முட்டாள்கள் ஆக்கும் எண்ணத்திலே ஆகும்.

திஸ்ஸ விகாரை கட்டப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்புக்கு வந்து பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவியை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியும் பின்னர் நம்பிக்கையோடு ஊர் திரும்பி மகிழ்ந்திருக்கையில் அம்மகிழ்வில் மண் அள்ளி தூவியதன் அடையாளமாக இந்த விகாரைக்கு அண்மையில் சட்ட விரோதமாக மடாலயம் கட்டப்பட்டு அரச ஆசீர்வாதத்தோடு மங்கலகரமாக திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக பௌத்த சாசன அமைச்சரோ, நீதி அமைச்சரோ தேசிய மக்கள் சக்தியில் இன மற்றும் சமய நல்லிணக்கம் சார்ந்து கருத்து தெரிவிப்பவர்களோ எதுவித கருத்தையும் முன்வைக்காத நிலையில் பாதிக்கப்பட்டவர்களோடு கலந்துரையாடல் நடத்த அவசரப்படுவதேன்? எல்லாம் கட்சி அரசியலும் தேர்தல் அரசியலுமே.

சட்டவிரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் தமிழர்களின் அரசியல் மைய பிரச்சினையாகும். அத்தோடு கட்டமைக்கப்பட்ட பேரினவாத அரச பயங்கரவாத பிரச்சினையுமாகும். இதற்கு அரசியல் ரீதியிலான நீதியான தீர்வுக்கு முன்வர துணிவில்லாமல் நிலமிழந்த மக்களின் குறுகிய பிரச்சினையாக மட்டுப்படுத்தி அவர்களோடு மட்டும் கலந்துரையாடுவதும் ஏனைய சமய தலைவர்களை அழைத்து ஆசி பெறுவதும் பிரச்சினையை மூடி வளர்ப்பதற்கான திட்டமே. அத்தோடு இதன் மூலம் தாம் விரும்பிய தீர்வினை முன்வைக்கவும் ஆட்சியாளர்கள் விரும்பலாம். ஆனால், இதனை தமிழர்கள் ஏற்கப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.



தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் முக்கிய பிரச்சினை எதனையும் தீர்க்க முன்வரவில்லை. அவ்வாறே தமிழர்கள் முகங்கொடுக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைக்கவும் ஆயத்தம் இல்லை. எனினும் வடக்கு – கிழக்கில் தமது அரசியலை பலப்படுத்துவதற்கு பல்வேறு புத்திகளை கையாளும் தந்திரமாகவே தையிட்டி தொடர்பில் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய அரசியல் சதி வலையில் தமிழர்கள் சிக்க மாட்டார்கள்.

இவர்களின் அரசியலை பலப்படுத்த இவர்களின் அரசியலில் விட்டில் பூச்சிகளானோர் தமிழர்களை சிக்கவைக்க முயல்வர். அத்தகையவர்கள் தமிழின துரோகிகள், இன அழிப்பாளர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள்.

தையிட்டி சார்பாகவும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாகவும் நீதியான நேர்மையான தீர்வு எதுவுமின்றி மீண்டும் மீண்டும் தமிழர்களை ஏமாற்றி அரசியல் செய்ய நினைப்பவர்களை ஜனநாயக ரீதியில் அடிமட்டத்தில் அகற்றுவதற்கான சந்தர்ப்பமாக உள்ளூராட்சி தேர்தலை அணுகுவோம். ஏமாற்று தேர்தல் அரசியல் வாதிகளுக்கு தமிழர்கள் தக்க பாடம் புகட்டவும் வேண்டும். அது மட்டுமல்லாது தையிட்டி தொடர்பில் நீதியான தீர்வு கிடைக்கும் வரையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மக்கள் திரட்சியோடு போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். அதுவே எமது அரசியலுக்கு வலுசேர்க்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.



www.sangathamil.ca

# யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இந்தியப் பிரதமரிடம் பகிரங்க கோரிக்கை!

03.04.2025

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் இந்தியப் பிரதமரிடம் பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இக் கோரிக்கையை மீனவர்கள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய பிரதமர் மோடிக்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும் யாழிலுள்ள இந்திய துணைத் தூதுவராலயத்தில் இன்றைய தினம் கையளித்துள்ளனர்.

இதன் பின்னர் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதீசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்சனைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம். ஆனால் இலங்கை இந்திய அரசுகள் இந்தப் பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காத நிலைமையே காணப்படுகிறது.

எனவே இலங்கைக்கு வருகின்ற இந்தியப் பிரதமர் இலங்கை இந்திய மீனவர் விவகாரத்திற்கு சரியான தீர்வொன்றை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம்.

அதாவது எமது கடற்பரப்பிற்குள் எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக்கூடாது. அதனையும் மீறி வந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள எமது மீனவர்களுக்கு நிவாரணம்



வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளோம்.

மேலும் தொடர்ந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக தொடர்ந்தும் குரல் எழுப்பி முன்னரைப் போன்று போராட்டங்களை முன்னெடுப்போம் என்றார்.

# ஒட்டிசுட்டானில் பெண் கொடூரமாகத் தாக்கப்பட்ட விவகாரம் ரவிகரன் எம்.பியின் தலையீட்டையடுத்து தலைமறைவான சந்தேகநபர் கைது

03.04.2025

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்ன சாளம்பன் பெண்ணொருவரை கொடூரமாகத் தாக்கிவிட்டு தலைமறைவான நபரை உடனடியாக கைது செய்யவேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் 03.04.2025இன்று ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று பொலிசாரிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் பெண்ணைக் கொடூரமாகத் தாக்கிய குறித்தநபர் ஒட்டிசுட்டான் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமொன்றில் பணியாற்றும் முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான், சின்னச்சாளம்பன் பகுதியைச்சேர்ந்த இருபெண்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து, பெண்ணொருவரின் கணவர், மற்றைய பெண்ணை வீதியில்வைத்து மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

இந் நிலையில் இவ்வாறு கொடூரமாகத் தாக்கப்பட்டபெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், குறித்த பெண்ணைத் தாக்கிய நபர் தலைமறைவாகியிருந்தார்.

இத்தகையசூழலில் குறித்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும், தாக்கிய நபரை உடனடியாகக் கைதுசெய்ய வலியுறுத்தியும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பெண்ணை தாக்கிய நபரைக் கைதுசெய்ய வலியுறுத்தி முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்திற்குமுன்பாக அப்பகுதி மக்கள் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பை ஏற்று குறித்த இடத்திற்குவிரைந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பெண்ணை கொடூரமாகத் தாக்கிய குறித்த நபர் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டுமென பொலிசாரிடம் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய 24மணிநேரத்திற்குள் குறித்த நபர் கைதுசெய்



யப்படுவார் என ஒட்டிசுட்டான் பொலிசார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடமும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடமும் உத்தரவாதமளித்திருந்தனர்.

அந்தவகையில் குறித்த நபர் சற்றுமுன்னர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களை தொடர்புகொண்டு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். தையிட்டி விகாரை விவகாரம் நீதியமைச்சரின் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டும் (?)

03.04.2025

நீதியமைச்சருடனான சந்திப்பில் தமது பிரச்சனைகள் குறித்து எந்தவிதமான விவகாரங்களும் பேசப்படவில்லை என தையிட்டி காணி உரிமையாளர்களில் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை விடுவிப்பு தொடர்பான முக்கிய கலந்துரையாடலில் அரசாங்கத்தின் சார்பாக கலந்து கொண்ட நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உள்ளிட்ட அரச தரப்பு பிரதிநிதிகள் வெளியேறியமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

"இன்று காலை நீதியமைச்சின் கீழ் இயங்கும் தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் எனும் ஒரு அமைப்பு எம்மை தையிட்டியில் சந்தித்து காணி உரிமையாளர்களின் காணி உறுதி, தோம்புகள் உள்ளிட்ட ஆவணங்களை ஆராய்ந்து அவற்றின் நகல் பிரதிகளை பெற்றுக்கொண்டனர். மேலும் குறித்த அமைப்பினர் விகாராதிபதியுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நாகவிகாரையில் நீதியமைச்சர் தலைமையிலான ஓர் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் நீதியமைச்சரின் ஊடாகவே தீர்க்கப்பட வேண்டும். எனவே குறித்த எமது ஆவணங்கள் ஆராயப்பட்டு உரிய தீர்வு வழங்கப்படும் என்பதாகவே எமக்கு கூறப்பட்டிருந்தது.

ஆனாலும் நீதியமைச்சர் தனது தலைமை உரைக்குப் பின்னர் தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தம் ஈடுபடுவது பொருத்தமற்றது எனக் கூறி வெளியேறியிருந்தார். இதனால் காலையில் நாம் சந்திப்புகளை மேற்கொண்ட அதே குழுவினருடனேயே மீண்டும் கலந்துரையாடல் ஈடுபட வேண் டிய நிலை காணப்பட்டிருந்தது.

இந்த இரு கூட்டங்களிலும் பாதிக்கப்பட்ட தரப்பில் இருந்த சிலர் வேட்பாளர்களாக இருந்தமையால் பங்கெடுக்க அனுமதிக்கப்பட வில்லை. சட்ட விதிகளுக்கு அமைவாக நாம் இதனை எதிர்க்கவில்லை.

அமைச்சரின் இக்கலந்துரையாடலுக்கான வருகையை நாம் வரவேற்றத்துடன் எமது பிரச்சனைகள் தீர்க்கப்படும் என நம்பியிருந்தோம். ஆனாலும் அவர் எமது பிரச்சனைகள் குறித்து எதுவுமே பேசவில்லை.

அமைச்சரின் வெளியேற்றத்தின் பின்னர் மதகுருக்களின் போதனைகளே அங்கு நடைபெற்றிருந்தது. ஆனாலும் மிகுந்த சவாலுக்கு மத்தியில் அவர்களுக்கு இது ஒரு சட்ட விரோத கட்டடமே தவிர இந்த விவகாரத்துக்கு எவ்வித மதச் சாயங்களும் பூச வேண்டாம் எனும் எமது தரப்பு நியாயங்களையும் கோரிக்கைகளையும் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.



இதேவேளை இக்கலந்துரையாடலுக்கு பௌத்த மகா சங்கத்தை சார்ந்த நான்கு பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் பொருத்தமற்ற தமது தரப்பு நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

அவர்களுக்கும் எமது தரப்பு பத்திகளை தெளிவாக நாம் முன்வைத்திருக்கிறோம். இந்நிலையில், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சார்ந்தவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இவ்விவகாரம் தொடர்பான தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அதேவேளை, இருதரப்பு நியாயங்களையும் பரிசீலித்து ஒரு தீர்வை எட்டவுள்ளதாக உறுதியளித்துள்ளனர். பொறுத்திருந்து பார்ப்போம்" என தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# இந்திய மீனவர்களால் வடக்கு கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் அழிக்கப்படுகிறது

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

03.04.2025

இந்திய மீனவர்களாலையே வடக்கு கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் பெரியளவில் அழிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவில் வைத்து நேற்றைய தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் வருகையால் இதுவரையில் ஈழத்தமிழர்களின் பொருளாதாரம் பாதிக்கு மேல் அழிந்து விட்டது. தமது பொருளாதாரத்தை பெருக்கிக்கொள்ள முடியாத நிலையிலும் இயல்பு வாழ்க்கையை இழந்த நிலையிலும் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள்.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்த 15 ஆண்டுகளில் வடக்கு கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் பெரியளவில் அழிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான அடிப்படைக் காரணமே இந்திய மீனவர்களின் வருகைதான்.

அவர்களுடைய மீன்பிடிப் பொறிமுறைகள் எமது பகுதி மக்களின் மீன்பிடி வலைகளை அறுத்தல் மற்றும் அவர்களது உற்பத்திகளை முடக்குதல் ஆகியவை காரணமாக எமது மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் மேலும் அவர்களது வாழ்வாதாரங்களை அளிக்கும் செயற்பாடுகளை அனுமதிக்கின்றது.

இது தொடர்பாக நெடுந்தீவு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பல மீனவர்கள் என்னிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, முன்பெல்லாம் வாரத்தில் ஓரிரு நாட்களில் மட்டுமே இந்திய மீனவர்கள் வருவார்கள் இடைப்பட்ட நாட்களில் எமது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. இப்பொழுது அதற்கு கூட வழியில்லாமல் உணவுக்காக கூட நாம் கஷ்டப்படுகிறோம் என நெடுந்தீவு மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.



எனவே இந்த விடயம் தொடர்பாக இந்தியத்தரப்பிடம் எமது மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து தீர்வு காண்பதற்கான அழுத்தம் கொடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ஜேவிபி நிர்வாக கட்டமைப்புகளை மிக மிக தீவிரமாக சிங்கள மயப்படுத்தி வருகின்றது

## இனமொன்றின் குரல் முகநூல்

04.04.2025

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மீயுயர் சபையான பேரவையின் (University Council) 15 வெளிவாரி உறுப்பினர்களில் 7 இடங்களுக்கு சிங்கள உறுப்பினர்களை நியமித்திருக்குகின்றார்கள். அதே போல வெறும் 5 இடங்களுக்கு தமிழ் உறுப்பினர்களும் 3 இடங்களுக்கு முஸ்லிம் உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நியமனங்கள், துணைவேந்தர் தெரிவு, விரிவுரையாளர்களை அமர்த்தவும் நீக்கவும் அதிகாரமுள்ள பேரவையில் சிங்கள உறுப்பினர்கள் முதல் முறையாக ஆதிக்கம் செலுத்த இருக்கின்றார்கள். இதன் தொடர்ச்சியாக கிழக்கு பல்கலை கழகத்திற்கு மிக விரைவில் சிங்கள துணைவேந்தர் ஒருவரை நியமிக்க இருக்கின்றார்கள் என சொல்லப்படுகின்றது .

இது போதாதென்று வவுனியா பல்கலைக்கழக பேரவையின் 7 வெளிவாரி உறுப்பினர்களில் 3 சிங்கள உறுப்பினர்களும் 3 தமிழர்களும் 1 முஸ்லிம் பிரதிநிதியும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் சிங்கள மயமாகி வரும் யாழ்ப்பாண பல்கலைகழக பேரவையின் 15 வெளிவாரி உறுப்பினர்களில் 3 சிங்கள உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள் .

இது தவிர கிழக்கு மாகாணத்தை குறி வைத்திருக்கும் ஜேவிபி சிங்கள ஆளுநருக்கு மேலதிகமாக அதன் பிரதம செயலாளராகவும் சிங்கள அதிகாரியை நியமித்துள்ளது. கிழக்கு மாகாண பொதுசேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் சிங்கள அதிகாரியே நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர் காலத்தில் மக்களால் தெரிவு செய்யப்படும் எந்தவொரு முதலமைச்சருக்கும் பொறுப்பு கூற வேண்டிய அவசியம் 13 ஆம் திருத்தத்தின் கீழ் இந்த அதிகாரிகளுக்கு இருக்க போவதில்லை. அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சருக்கே பொறுப்பு கூற வேண்டிய கட்டாயம் இல்லாத நிர்வாக அலகை ஜேவிபி உருவாக்கி வருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு வழமை போல சிங்கள அதிகாரிகளே அரச அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.
வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்திற்கும் சிங்கள அதிகாரி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். சிங்கள ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்டுள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கும் கல்கமுவ சாந்தபோதி தேரர் உட்பட்டவர் களுடன் தொடர்புடைய சிங்கள பிரதேச செயலாளர் ஒருவரே நியமிக்க பட இருக்கின்றார்.

வவுனியா/வன்னி மாவட்டத்தில் ஜேவிபியில் போட்டியிட்டு இரு தமிழ் பாராளமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையிலும் தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட சிங்கள உறுப்பினரே ஒருங்கிணைப்பு குழு தலைவராக்கப்பட்டள்ளார். இவ் நியமனங்கள் ஊடக வவுனியா வடக்கு தமிழ் கிராமங்களின் எல்லைக்கோட்டின் வழி ஊடக நகர்ந்து மணலாறு சிங்கள குடியேற்றங்களை இணைத்து பரவும் பரந்த குடியேற்றத்தினை செறிவாக்க முயற்சிக்கின்றார்கள் போல் உள்ளது.

இது போததென்று 27 பேர் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர் பட்டியலில் வெறும் இரண்டு தமிழ் அதிகாரிகளுக்கு மட்டும் இடம் கிடைத்துள்ளது. அரசாங்கத் திற்கு சொந்தமான 52 அரச நிறுவனங்களுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைமை பதவி நியமனத்திலும் எந்தவொரு தமிழ் அதிகாரிகளுக்கும் இடம் வழங்கப்படவில்லை. அதே போல அரசாங்கத்தின் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் உட்பட அரச கட்டமைப்புகளிலும் தமிழ் அதிகாரிக ளுக்கு போதிய பிரதிநித்துவம் கிடைக்கவில்லை.

50 நாடுகளில் இயங்கும் இலங்கையின் வெளிநாட்டு தூதுவராலயங்களின் தலைமை பதவிகளுக்கும் வெளிநாட்டு சேவையியுள்ள எந்த தமிழ் அதிகாரிக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. வெளிநாட்டு சேவையுள்ள திறமையுள்ளோருக்கு மட்டுமே வாய்ப்புகள் வழங்கப்படும் என ஜேவிபி அறிவித்திருந்துள்ள நிலையில் அதற்கு மாறாக தங்கள் கூட்டாளிகளை நியமித்து வருகின்றது. ஆனால் இதிலும் ஜேவிபியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை.

விசேடமாக திரு அனுரா குமார திஸ்ஸநாயக்க நியமித்துள்ள ‘Clean Sri Lanka’ செயலணியிலும் தமிழ் அதிகாரிகளுக்கு இடம் வழங்கப்படவில்லை.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுல்லா ஆலோசனை சபையிருக்கும் கூட தமிழ் பிரதிநித்துவம் முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது .

இலங்கையில் அரசியல் நியமனங்கள் ஒன்றும் புதிய விடயமல்ல . ஆனால் இலங்கையராக ஒன்றிணைவோம் என பேசும் ஜேவிபி காலத்தில் தான் இது மோசமான நிலையை எட்டி யுள்ளது. இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால்



திறமை அடிப்படையில் அரசியல் வேறுபாடு கடந்து Equality, Diversity. and Inclusion (EDI) தத்துவங்களை உள்வாங்கி வெளிப்படை யான நிர்வாகத்தை உருவாக்கும் அடிப்படை விடயத்தில் தவறிழைத்து விட்டு அபிவிருத்தி மற்றும் ஊழல் பற்றி பேச முடியாது. ஆனால் அபிவிருத்தி மற்றும் ஊழல் என வெறும் வாயால் பேசும் ஜேவிபி எல்லாவிதமான அசிங்கங்களையும் செய்கின்றது.

இங்கு வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்கள் உட்பட அரச நிர்வாக கட்டமைப்பில் சிங்கள அதிகாரிகள் பணியாற்ற முடியாது என வாதிட முடியாது. போட்டி தேர்வு / நேர்முகம் மூலம் திறமை அடிப்படையில் தேர்வு செய்யப்படும் யாரும் எங்கும் பணியாற்ற முடியும். ஆனால் குறித்த இன / சமூக பிரிவை சேர்ந்தவர்கள் என்பதன் அடிப்படையில் வாய்ப்புகளை மறுப்பதும் திட்டமிட்ட ரீதியில் நிர்வாக கட்டமைப்புகளை சிங்கள மயப்படுத்துவதும் அருவருக்க தக்க செயல்களாகும்.

கடந்த 70 ஆண்டுகளாக தொடரும் இந்த அருவருக்க தக்க பாரம்பரியத்தை ஜேவிபியும் வெளிப்படையாக தொடருகின்றது. ஆனால் வெறும் வாயில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக ஜேவிபி அலம்புகின்றது.

**ஒரு விடுதலை இயக்கத்துக்குப் பின்னால் மக்கள் அணிதிரண்டு, அந்த இயக்கத்தின் இலட்சியத்தில் பற்றுக்கொண்டு, போராட்டத்தில் பங்கு கொள்ளும் பொழுதுதான் விடுதலை சாத்தியமாகிறது.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# திருகோணமலையில் காணி விடுவிப்பு கோரிப் போராட்டம்

04.04.2025

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பகுதியில் உள்ள சம்பூர் பகுதியில் கையகப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிக்க கோரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.






திருகோணமலை நில மீட்புக்கான வலையமைப்பினர் ஏற்பாட்டில், இந்த போராட்டம் இன்று (04) திருகோணமலையில் உள்ள கிழக்கு ஆளுனர் செயலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பூரில் அமையவுள்ள சூரிய மின் சக்தி நிலையம், விதுர கடற்படை முகாமுக்காக அபகரிக்கப்பட்ட காணிகள் உள்ளிட்டவற்றை மக்களுக்கு வழங்க வேண்டும் என கோரிய போராட்டம் இடம்பெற்றுள்ளது.

பறிக்காதே பறிக்காதே வாழ்வாதார நிலங்களை பறிக்காதே', 'உயிர் வாழும் உரிமையை உறுதிப்படுத்த எமது நிலத்தை எமக்கு வழங்கு' போன்ற பல வாசகங்களை ஏந்திதவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது ஆளுனரின் செயலகத்தில் உள்ள அலுவலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் சம்பூரில் அமையவுள்ள சூரிய மின் சக்திநிலையம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு வருகை தரவுள்ள நிலையில் இந்த கவனயீர்ப்பு இடம்பெற்றுள்ளதுடன் குறித்த திட்டம் தொடர்பான அங்குரார்ப்



பண நிகழ்விலும் கலந்து கொள்ளவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.








# சிங்கள பௌத்த தேசியவாதத்தை நிலை நிறுத்தும் நோக்கில் செயற்பாடுகள்

**'குச்சவெளி' நில ஆக்கிரமிப்பு குறித்து ஆவணப்படத்தின் இயக்குநர் செல்வராஜா ராஜசேகர்**

04.04.2025

குச்சவெளியில் திடீரென 2500 ஆண்டுகளுக்கான எச்சங்களைத் தேடிக் கொண்டு அந்த இடத்தை பௌத்தத்தின் பேரில் தொல்பொருள் திணைக்களத்தை பயன்படுத்தி இராணுவத்தின் உதவியுடன் ஆக்கிரமிப்பதன் மூலமாக அங்கிருந்து மக்களை மக்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என 'குச்சவெளி' நில ஆக்கிரமிப்பு குறித்து ஆவணப்படத்தின் இயக்குநர் செல்வராஜா ராஜசேகர் தெரிவித்துள்ளார்.



மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் தயாரித்துள்ள குச்சவெளி ஆவணப்படத்தின் காட்சிப்படுத்தல் கலந்துரையாடல் கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற வேளை அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய செல்வராஜா ராஜசேகர் மேலும் தெரிவித்ததாவது,

குச்சவெளி ஆவணப்பட காட்சிப்படுத்தலில் பெரும் சவால்களை எதிர்கொண்டோம். அந்த இடத்திற்கு செல்வது மக்களை சந்திப்பது வீடியோ எடுப்பது எல்லாமே சவாலான விடயங்கள்.

சில சந்தர்ப்பங்களில் பின்வாங்கினோம். அதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன. அந்த பகுதிகளில் கண்காணிப்பும் அச்சுறுத்தலும் காணப்படுகின்றது.

குச்சவெளியை பவானி பொன்சேகாபரிந்துரைத்ததும் அது சவாலான விடயமாக விளங்கியது. குச்சவெளியில் உள்ள 32 விகாரைகளில் 24 விகாரைகளிற்கு நான் தனியாளாக பயணம் செய்துள்ளேன். அங்கு இடம்பெறும் நில அபகரிப்பிற்கு ஒரு சாட்சியாக இருக்கவேண்டும் என விரும்பினேன்.

என்னுடைய பெயரை மதத்தை மொழியை மாற்றவேண்டிய நிலையேற்பட்டது. சுற்றுலாப்பயணிக்கு வழிகாட்டி போல அங்கு சென்றேன். தூண்டிலில் மீன்பிடித்தேன். சில காட்சிகளை அகற்ற வேண்டியிருந்தது.

இந்த ஆவணப்படத்தில் நீங்கள் டிரக்டரில் அரிசி மூடையை ஏற்றிச்செல்வதை பார்க்கலாம் அது தமிழ்மக்களின் நிலத்தில் சிங்களவர்கள் விவசாயம் செய்து கொண்டு செல்லும் நெல்.

நாங்கள் அந்த பகுதிக்கு சென்றவேளை அதனை அறிந்த பிக்கு மலையிலிருந்து தனது ஆட்களுடன் கீழே வந்து எங்களை சுற்றிவளைத்தார். காலை பத்து மணிமுதல் நான்கு மணிவரை நாங்கள் காட்டு பாதை ஒன்றின் ஊடாக பத்து கிலோமீற்றர் நடந்து தப்பி வந்தோம். இந்த ஆவணப்படத்திற்காக இவ்வாறான பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது.

புல்மோட்டை பொன்மலைக்குடா முஸ்லிம் மக்களின் மையவாடி பிரச்சினை தொடர்பாக குறித்த ஜனாஸா அடக்கம் செய்யும் இடத்தில் வீடியோப் பதிவுகளை மேற்கொண்டிருந்த போது கடற்படையைச் சேர்ந்த இருவர் முச்சக்கரவண்டியில் அச்சுறுத்தும் தொனியும் நடந்துகொண்டார்.'

நான் வரலாற்றுத்துறை சார்ந்த ஆய்வாளனோ அல்லது கல்வியாளனோ அல்ல. சரியான ஆண்டுகளும் தெரியாது. 2500 ஆண்டுகளுக்கு முன்னர் பின்பற்றப்பட்ட ஒரு நடைமுறை ஏதோவொரு காரணமாக, ஆக்கிரமிப்பாகக் கூட இருக்கலாம் அது அப்படியே அழிக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருக்கலாம்.

ஆனால் அதற்குப் பின்னர் வந்த ஒரு சமூகம் இனக்குழுவொன்று அந்த இடத்தில் வழிபாட்டு நடைமுறைகளை கடந்த 500 வருடங்களாக மேற்கொண்டுவருகிறது. இப்போது திடீரென 2500 ஆண்டுகளுக்கான எச்சங்களைத் தேடிக் கொண்டு அந்த இடத்தை பௌத்தத்தின் பேரில் தொல்பொருள் திணைக்களத்தை பயன்படுத்தி இராணுவத்தின் உதவியுடன் ஆக்கிரமிப்பதன் மூலமாக அங்கிருந்து மக்களை அப்புறப்படுத்துவார்கள்.

இதுவரை காலமாக அங்கு வாழ்ந்துவந்த மக்களின் அடையாளத்தை பாரம்பரியத்தை கலாசாரத்தை பொருளாதாரத்தை அந்த மண்ணுடனான அவர்களது வாழ்வியலை ஒரு இரவில் அறுத்துதெறிந்து சிங்கள பௌத்த தேசியவாதத்தை நிலை நிறுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது.

2500 ஆண்டுகால வரலாறு முக்கியத்துவம் அளிக்கப்படும், 500 ஆண்டுகால மக்களது வாழ்வியல் சான்றுகள் மீது கொள்ளத் தேவையில்லை என்பதா அர்த்தம். அப்படியென்றால் இலங்கையின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் மலையகத்தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள்தான் ஆகிறது. அவர்களுக்கு அப்படி ஒன்றும் வழங்






கவேண்டிய அவசியமில்லை, இந்திய வம்சாவளிகள்தானே என்று கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவதா?

ஒன்றை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினையில் காணப்படும் விகாரை ஊடாகவே தெட்டத்தெளிவாகிறது. இது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் அமைப்பு என்று.

www.sangathamil.ca

# முல்லைத்தீவு புலிபாய்ந்தகல்லில் சிங்கள மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்க முயற்சி

05.04.2025

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், புலிபாய்ந்தகல் பகுதியில் அமைந்துள்ள தமிழ் மீனவர்களின் சில வாடிகளை அடாவடித்தனமாக அகற்றிவிட்டு, அந்த இடத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின சிங்கள மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்கும் செயற்பாட்டில்





ஈடுபட்டுள்ளனர்.

இந் நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வெள்ளிக்கிழமை (04) குறித்த பகுதிக்கு நேரடியாகச்சென்று நிலமைகளைப் பார்வையிட்டதுடன், உரிய தரப்பினரோடு தொடர்புகொண்டு கலந்துரையாடி தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் அத்துமீறி அமைக்கப்பட்ட வாடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தமிழ் மீனவர்கள் பன்நெடிங்காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வரும் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் பகுதியை ஆக்கிரமித்து அங்கு வாடி அமைப்பதற்கு பெரும்பான்மையின மீனவர்கள் தொடர்ந்து முனைப்புக்காட்டிவரு



கின்றனர்.

அந்தவகையில் கடந்த வருடமும் அத்துமீறி குறித்த பகுதியில் வாடி அமைப்பதற்கு சில பெரும்பான்மையின மீனவர்கள் முயற்சி மேற்கொண்டிருந்தனர். இந் நிலையில் அப்பகுதி மீனவர்கள் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் இணைந்து குறித்த அத்துமீறல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இத்தகைய சூழலில் மீளவும், கடந்த சில நாட்களுக்கு முன்பதாக குறித்த புலிபாய்ந்தகல் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பெரும்பான்மையின மீனவர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடமோ, கரைதுறைப் பற்று பிரதேசசெயலக காணிப் பிரிவிடமோ எவ்வித அனுமதிகளையும் பெறாது அத்துமீறி வாடிகளை அமைத்துள்ளனர்.

அத்தோடு புலிபாய்ந்தகல் பகுதியில் பூர்வீகமாக மீன்பிடியில் ஈடுபடும் சில தமிழ் மீனவர்களின் வாடிகளை அடாவடித்தனமாக அகற்றியே இவ்வாறு தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் வாடி அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை OFRP-A-5491 CHW என்னும் இலக்கமுடைய மீன்பிடிப் படகொன்றும் அனுமதி பெறப்படாமல் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று அப்பகுதிக்குச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலமைகளைப் பார்வையிட்டதுடன், அப்பகுதியில் பெரும்பான்மையின தென்னிலங்கை மீனவர்களால் அத்துமீறி வாடி அமைக்கப்பட்டமை தொடர்பில் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியதுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

அதேவேளை கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரையும் உடனடியாக குறித்த இடத்திற்கு அழைத்து நிலமைகளைக் காண்பித்ததுடன் அவரிடமும் இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.மோகனகுமாருடனும் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி, அனுமதியின்றி கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகு தொடர்பிலும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் குறித்த பகுதியில் அனுமதிகள் எவையும் பெறப்படாமல் அத்துமீறி அடாவடியாக தென்னிலங்கை மீனவர்களால் அமைக்கப்பட்டுள்ள வாடிகளை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு கரைதுறைப்பற்று பிரதேசசெயலக் காணிப் பிரிவால் அப்பகுதியில் துண்டுப்பிரசுரம் காட்சிப்படுத்தப்படுமென கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டதுடன், கொக்குத்தொடுவாய் கிராம அலுவலரும் இது தொடர்



பில் உரிய இடங்களுக்கு தாம் தெரியப்படுத்துவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்தார்.

அத்தோடு அனுமதி பெறப்படாது கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள குறித்த படகு தொடர்பில் தம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.மோகனகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிம் தெரிவித்திருந்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய மூன்று கிராமங்களிலும் வாழும் தமிழ் மக்களின் ஒரேயொரு மீன்பிடித் துறையாக இந்த புலிபாய்ந்தகல் பகுதியே காணப்படுகின்றது.

இந்நிலையில் அந்த மக்களின் வாழ்வாதாரத்தை சூறையாடும் வகையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இத்தகைய அத்துமீறல், அடாவடித்தனமான முயற்சிகளை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. ஓரளவிற்குத்தான் நாமும் பொறுமையாக இருக்கமுடியும் என்றார்.

இதன்போது கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ந.மதியழகன், தமிழரசுக்கட்சியின் கரைதுறைப்பற்று பிரதேச உபசெயலாளர் கி.சிவகுரு ஆகியோரும் குறித்த இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.







www.sangathamil.ca

# இலங்கைத் தீவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் பதாகையில் தமிழ் மொழி புறக்கணிப்பு

05.04.2025

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் வகையில் கொழும்பில் அரச தரப்பில் வைக்கப்பட்டுள்ள பதாகைகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் காலி முத்திடல் உட்பட பல பகுதிகளில் அரச தரப்பில் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்த பதாகைகளில் சிங்களம் மற்றும் ஆங்கில் மொழிகள் மாத்திரமே இடம்பெற்றுள்ளது. இதனால் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் மீது கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.







# தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதி செய்க!

## இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன்

05.04.2025

ஈழத்தமிழர்களின் இன, மத அடையாளங்களை உறுதிசெய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது பெண்கள் நெற்றியில் பொட்டிடக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தை மேற்கோள் காட்டி இலங்கை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறித்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடவுச் சீட்டுக்கான புகைப்படங்களை எடுக்கும் போது தமிழ்ப் பெண்கள் பொட்டிடுவதும், இந்துசமயக் குருமாராக இருந்தால் அவர்கள் விபூதி, சந்தனம் உள்ளிட்ட மத அடையாளங்களைத் தரித்திருப்பதும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டுமென அகில இலங்கை அரச உரிமை பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் சங்கத்தினரால் வடக்கு மாகாண புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

அந்தவகையில் மேற்குறித்த அறிவிப்பானது தமிழ்மக்களின் இன, மத அடையாளங்களை வலிந்து பறிக்கும் ஓர் அடிப்படை உரிமை மீறலாக உள்ளதைத் தங்களின் மேலான அவதானத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகத் தமிழர்களது மரபார்ந்த பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவே தமிழ்ப் பெண்கள் பொட்டிடும் பழக்கத்தைக் காலம்காலமாகப் பின்பற்றி வருகிறார்கள். ஒரு இனத்தின் உணர்வுநிலையோடு ஒன்றித்துப் போயுள்ள இயல்பான வாழ்வியல் விடயங்களைத் தார்மீகக் காரணங்கள் எவையுமற்றுத் தடுக்க நினைப்பதும், அதுசார்ந்த செயற்பாடுகளை அதிகாரரீதியாக நடைமுறைப்படுத்துவதும் மிகமோசமான அடக்குமுறையே என்பதையும் உணர்வுநிலைசார் பண்பாட்டு அடையாளப் பறிப்பென்பது எத்தகைய தாக்கங்களை உருவாக்கக் கூடும் என்பதையும் தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

குடியகல்வுத் தேவைகளின் பொருட்டுக் கடவுச்சீட்டைப் பெற்றுக்



கொள்ள விரும்பும் ஒரு ஈழத்தமிழர் கடவுச்சீட்டுக்கான புகைப்படத்தை எடுக்கும்போது தனது இனம் சார்ந்த, மதம் சார்ந்த தனித்துவ அடையாளங்களைத் துறந்தே ஆக வேண்டுமென்ற எந்தத் தேவைப்பாடும் இல்லாத நிலையில் இந்த நாட்டுப் பிரஜைகளின் அடிப்படை உரிமையை மீறும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி அறிவுறுத்தலை உடனடியாக மீளப் பெறுவதன் மூலம் தமிழ்மக்களின் தனித்துவ அடையாளங்களையும், அடிப்படை உரிமைகளையும் உறுதி செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

# பூசா சிறையில் கூரிய ஆயுதத்தால் தாக்கி தமிழ் கைதி உயிரிழப்பு

05.04.2025

காலி, பூசா சிறைச்சாலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட நிலையில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி, சக கைதி ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.




பாதிக்கப்பட்டவர் உடலில் 11 இடங்களில் கூரிய ஆயுதத்தினால் குத்தப்பட்ட காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இவ்வாறு உயிரிழந்தவர் 46 வயதுடைய நந்த குமார் சிவானந்தா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

**சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# ஈபிடிபியின் கொலையாளிகள் பட்டியலை அம்பலப்படுத்திய தீவக இளைஞர்

06.04.2025

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த கொலையாளிகள் இன்னும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழில் இன்று(06.04.2025) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

"ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த மதனராஜன், நெப்போலியன், சேதுபதி மற்றும் கருணாகரமூர்த்தி ஆகிய நான்கு பெரும் நீதிமன்றத்திற்கும் சமூகமளித்தனர். மதனராஜன் மற்றும் நெப்போலியன் ஆகியோர் நாட்டை விட்டும் தப்பியோடினர்.

நீதிபதி இளஞ்செழியன் இவர்களுக்கு மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை வழங்கியும் இவர்கள் பிடிபடவில்லை.

அதன் பின்னர் 2018ஆம் ஆண்டு யாழ். நீதிமன்றம் தப்பியோடியவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டிருந்தது.

ஆனால், அதன் பின்னர் 3 ஜனாதிபதிகள் மாறியும் இன்னும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.




# ஒற்றையாட்சிக்குள் தீர்வு சரிவராது என்பதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துரைத்தோம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

06.04.2025





ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வோ, தீர்வோ சரிவராது என்ற நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துரைத்தோம் என இந்தியப் பிரதமரைச் சந்தித்த பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியப் பிரதமரிடம் நான்கு விடயங்களை முன்வைத்தது. முதலாவது - இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வை - பங்களிப்பு - உரித்து - இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம் என்று குறிப்பிட்டோம்.

வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ, அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம். இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளை விட முன்னுரிமை வழங்கிச் செயற்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்.

விசேடமாக வடக்கு, கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்.

இரண்டாவது விடயம் - தமிழர்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓரளவு நெருக்கமாக வந்த சர்வதேச ஆவணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்.

ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சியை ஒற்றையாட்சி என்ற நெருக்கடிக்குள் முடக்கியமையால் அது பலன் தரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம். 1987 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, இவ்வளவு காலத்தின் பின்னரும் இன்னமும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துங்கள், நடைமுறைப்படுத்துங்கள் என்று இந்தியா கோர வேண்டிய - வலியுறுத்த வேண்டிய - அவல நிலை நீடிப்பதற்கு இது ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டமையே காரணம் என்பதை விளக்கினோம்.

இந்த 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் மத்திய அரசே மேலானது, 13ஆம் திருத்தத்தினால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் மோதல் வருவதற்கு இடமில்லை என்று அப்போதே அதை ஒட்டிய ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது. ஒற்றையாட்சி முறைமைக்குள் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்குத்தான் இருப்பதை அது உறுதிப்படுத்தியதை நாங்கள் தெளிவுபடுத்திச் சுட்டிக் காட்டினோம்.

ஆக, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருப்பதால், அந்த ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பகிரவே இடமில்லை என்பதை இந்தியப் பிரதமருக்குச் சொன்னோம். இதுவே 38 வருடங்களாக நாங்கள் கண்ட அனுபவம் என்பதையும் தெரிவித்தோம். 13ஆம் திருத்தத்தை ஒற்றை ஆட்சிக்குள் முடக்கியமையால்தான் இன்றும் கூட தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கின்றது என்பதை நாங்கள் விளங்கப்படுத்தினோம்.

இதனையே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு முதல் தடவையாக வந்து இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, கூட்டுறவு சமஷ்டியே தீர்வுக்கு வழி என்று குறிப்பிட்டமையை நாங்கள் நினைவுபடுத்தினோம். ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி முறைமைக்குக் கீழ் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு தீர்வைக் காண எத்தனித்தால் வழி பிறக்கும் என்பதை நாம் விளக்கினோம்.

இந்த விடயங்களை அடைவதற்காகத் தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்துப் பேசுங்கள் என்று நாங்கள் இந்தியப் பிரதமரைக் கோரினோம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீறாமல், ஆனால் அதே நேரம் ஒற்றையாட்சி முறைமையைத் தாண்டி, ஒரு சமஷ்டி ஏற்பாட்டை முழுமையாக அடையக்கூடிய - இந்தியாவும் ஏற்றுக்கொள்ளத்தக்க - பொது நிலைப்பாடு ஒன்றை எட்டுவதற்கு உதவுமாறு நாங்கள் இந்தியப் பிரதமரை வேண்டினோம்.

மூன்றாவதாக - இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொண்டு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்தியா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்தோம். இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வெளித் தரப்புகளுக்கு இப்பிராந்தியத்தில் காலூன்ற இடம் அளிக்கக்கூடாது என்ற எங்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் இந்தியாவின் பாதுகாப்பு நோக்கோடு நோக்கப்படுகின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளையில் இந்தப் பிராந்தியத்தின் குடிசனப் பரம்பல் விகிதாசாரத்தை மாற்றி அமைக்காத விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா முழு அளவில் ஈடுபட்டுப் பங்களிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம் என்பதையும் குறிப்பிட்டோம்.

மீனவர் பிரச்சினை பற்றி நான்காவதாகப் பேசினோம். இலங்கையின் வடக்கு - கிழக்கு மீனவர்கள் இன்று வாழ்வா, சாவா நிலைமையில் அவலப்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினோம். இந்தப் பிரச்சினை எந்த வழியிலாவது தீர்க்கப்பட்ட வேண்டும். அது தொடர இடமளிக்கக்கூடாது.

இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு மீனவ பிரதிநிதிகளும், அரசியல் பிரதிநிதிகளும், இந்தியாவுக்குச் சென்று, எங்கள் உறவுகளோடும் மீனவப் பிரதிநிதிகளோடும் பேசித் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம். எங்கள் மீனவர்களின் இழப்புக்கு உரிய நட்டஈடுகள் கூட இன்னும் வழங்கப்படவில்லை. அவை பற்றியும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்தினோம்." - என்றார் அவர்.

**எமது மக்களின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் நிலைநாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம், அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலைநாட்டப்படாதவரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்புகின்றேன்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். வடமராட்சி பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வால் விவசாய நிலங்கள் பாதிப்பு

06.04.2025

யாழ்.வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வால் 15 இற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் முற்றுமுழுதாக பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இன்று (6) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே விவசாயிகள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

விவசாயிகள் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகள், வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி உணவத்து அம்மன் கோயிலை அண்டிய மக்களின் விவசாய நிலங்களில் போர் நடைபெற்ற காலத்தில் இராணுவத்தால் நூற்றுக்கணக்கான டிப்பர்களில் மணல் அகழப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து மீளக்குடியேறிய காலத்திலும் இராணுவம் எமது விவசாய நிலங்களில் மணல் அகழ்ந்தார்கள். அப்போது எம்மால் இதை தடுக்கமுடியவில்லை.

இதனால் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளோம்.

சம்பவம் தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தப் பட்ட போதும் எதுவித மாற்று நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை.

ஏனைய விவசாயிகள் தமது நிலங்களில் விவசாய நடவடிக் கைகளை செய்து பயன்பெறுகின்ற போதிலும் நாம் எந்தவொரு விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்துவருகின்றோம்.

எமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்தும்



விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய அதிகாரிகள் மாற்றுவழியை ஏற்படுத்தி தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கோமாரிப் பகுதி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

07.04.2025

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் கோமாரிப் பகுதியில் வனபரிபாலன திணைக்களம் விவசாயிகளின் காணியில் அடையாள எல்லைக் கற்களை போட்டதை எதிர்த்து விவசாயிகள் இன்று (7) திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



கோமாரி கழுகொல்ல வட்டியகாடு என்னும் பிரதேச விவசாயிகள் தமது காணியில் சேனைப் பயிர்ச்செய்கை மற்றும் விவசாய செய்கையில் ஈடுபட்டு வந்தார்கள்.

குறித்த காணிகளில் ஞாயிற்றுக்கிழமை (6) வனபரிபாலன திணைக்களம் அடையாள கற்களை நட்டு எல்லை படுத்தியது .

இதனை தொடர்ந்து பொதுமக்கள் இது எமது பெர்மிட் காணி. காலாகாலமாக நாங்கள் இதிலே சேனைப் பயிர்ச் செய்கை செய்து வருகிறோம் .இதை விட வேண்டும் என்று கேட்டதற்கு இது எமக்குரிய கட்டளை நாங்கள் அதற்கான அடையாளக் கல்லை இட்டிருக்கின்றோம் என்று பதிலளித்தனர்.

மாநகர சபை அதனையடுத்து திங்கட்கிழமை (7) விவசாயிகளும் பொதுமக்களும் சேர்ந்து கலுகொல்ல எனுமிடத்தில் வன பரிபாலன திணைக்களத்தின் செயற்பாட்டுக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.



அதன் போது பலவித சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கி நின்றனர்

# தமிழ்த் தேசியப் பேரவையின் மாபெரும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம்

08.04.2025

தமிழ் தேசிய பேரவை சார்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ். இளங்கலைஞர் மன்றத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தலைமையில் நேற்று மாலை 3 மணிக்கு வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு ஆரம்பமானது.

இதில் தமிழ்த் தேசிய பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள்



மற்றும் யாழ். மாவட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப்



பலரும் கலந்துகொண்டனர்.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# வடக்கு மாணாத்தின் 13 கல்வி வலயங்களிலுள்ள 56 பாடசாலைகளை சிறீலங்கா அரசு மூடும் நிலை!

09.04.2025

வடக்கு மாகாணத்தின் 13 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து 56 பாடசாலைகளை விரைவில் மூடுவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்கள் கல்வி கற்கும் 266 பாடசாலைகள் உள்ளன என்ற அதிர்ச்சித் தகவலை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் புள்ளி விவரங்கள் (?) தெரிவிக்கின்றன.

நாடு முழுவதும் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளை, 3 கிலோ மீற்றருக்குள் வேறு பாடசாலையிருப்பின் அவற்றை மூடுவதற்குத் தற்போதைய சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கில் தற்போதுள்ள 13 கல்வி வலயங்களிலும் 981 பாடசாலைகள் இயங்குகின்றன. இந்த 981 பாடசாலைகளில் 2 இலட்சத்து 29 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இங்கே 981 பாடசாலைகள் உள்ளபோதும் அவற்றில் 454 பாடசாலைகளில் ஒவ்வொன்றிலும் 100க்கும் குறைந்த மாணவர்களே கல்வி கற்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதிலும் மிக மோசமான நிலைமையாக 266 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றமையும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

266 பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும், 3 கிலோ மீற்றர் தூரத்துக்குள் வேறு பாடசாலைகள் இல்லாத நிலை, கடல் கடந்த சூழல், விசேட தேவை என்பவற்றைக் கருத்தில்கொண்டு மூடப்பட வேண்டிய பாடசாலைகளுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மூடப்படும் நிலையில் வடக்கில் 56 பாடசாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் ஐம்பதுக்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 95 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 20 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 41 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 72 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 37 பாடசாலைகளும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



இதேநேரம், வடக்கில் மூடப்படும் நிலையில் காணப்படும் 56 பாடசாலைகளிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன இலாகா திணைக்களத்தால் வவுனியா கணேசபுரத்தில் எல்லை கல் நடுதல் இடைநிறுத்தம்

09.04.2025

சிறீலங்கா வன இலாகா திணைக்களத்தால் வவுனியா கணேசபுரத்தில் முன்னெடுக்கப்பட்ட எல்லை கற்களை நடும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரான பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே பிரதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வன இலாக திணைக்களத்தால் அந்தப் பகுதியில் கல் நடப்படுவதாக தெரிவித்தே வவுனியா கணேசபுரம் மக்கள் தற்போது ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின்னர் அந்த விடயங்களை கையாளுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். எவருக்கும் கூறாது கல் நாட்டப்படக் கூடாது என்றே அபிவிருத்திக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் எவருக்கும் கூறாது அது நடைபெறும் நிலையில் மக்கள் அங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் உடனடிய அந்த நடவடிக்கைகளை நிறுத்த அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என செல்வம் எம்.பி, கோரி நின்றார்.

இதன்போது பதிலளித்த வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரான பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கூறுகையில்,

இது தொடர்பில் காலையில் எங்களுக்கு அறியக் கிடைத்தது. அதனை அறிந்த உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது தேர்தல் காலம் முடிவடையும் வரையிலும் மற்றும் மாவட்ட அபிவிருத்தி



குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அதனை செயற்படுத்தும் வரையில் அந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்

# சமூகச்செயற்பாட்டாளர் ராஜினி பலாலலிக்கு அழைப்பாணை

10.03.2025

தையிட்டிசட்ட விரோத விகாரைக்கெதிரான போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் சமூகசெயற்பாட்டாளர் ராஜினி அவர்களை வாக்குமூலம் பதிவு செய்ய சிறீலங்கா பொலிசார் அழைப்பாணை. அனுப்பியுள்ளனர்.





SRI LANKA POLICE MESSAGE FORM

265* [POLICE]

Date :- 2025.04.10

Time of Receipt

From Station

To Station

Sending Operator

12656

Receiving Operator

From

To

No

உமது பொலிஸ் பிரிவிற்க்குற்பட்ட சாகாயபுரம் மாதகல் இளவளை எனும் முகவரியில் வசிக்கும ராஜினி சௌந்தரநாயகம் என்பவருக்கு மல்லாகம் நீ/நீ வழக்கு இல B1954/PC/24 உடைய வழக்கு தொடர்பாக வாக்கு மூலம் பதிவு செய்வதற்க்கு பலாலி பொலிஸ் நிலையத்திற்க்கு 2025.04.12 ம் திகதி காலை 0930 மணிக்கு சமூகமளிக்குமாறு தகவலினை தெறியப்படுத்தவும். தகவல் சமர்ப்பிக்கப்பட்டமை தொடர்பான அறிக்கையினை வழங்குமாறு கேட்டுகொள்கின்றேன்

# யாழ். நவக்கிரி சித்த வைத்தியசாலைக்கு சொந்தமான 2 ஏகக்ர் காணி சிறீலங்கா படைகளால் விடுவிப்பு

10.04.2025

யாழ்ப்பாணம் அச்சுவேலி நவக்கிரி சித்த மருத்துவ மனைக்கு சொந்தமான 02 ஏக்கர் காணியை சிறீலங்கா இராணுவத்தினர் மீள கையளித்துள்ளனர்.

நவக்கிரி சித்த மருத்துவ மனைக்கு சொந்தமான 02 ஏக்கர் காணியையும் கடந்த 1996ஆம் ஆண்டு முதல் சிங்கள இராணுவத்தினர் கையகப்படுத்தி நிலை கொண்டிருந்தனர்.

அந்நிலையில் இன்றைய நாள் வியாழக்கிழமை குறித்த காணியை மீள கையளித்துள்ளனர்.

சித்த மருத்துவமனைக்கு தேவையான மூலிகைகளை பயிரிடும் காணியாக குறித்த காணி காணப்பட்ட நிலையில் 1996 ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவத்தினர் காணியை கையகப்படுத்தி கடந்த 30 ஆண்டு காலமாக நிலை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சட்டவிரோத கடற்தொழிலால் வடக்கில் 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிப்பு; மீனவர்கள் போராடவேண்டிய நிலை ஏற்படும்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

10.04.2025

வடக்கு கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய கடற்தொழில் செயற்பாடுகளாலும், அதிகரித்துள்ள தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் வடமாகாணத்தில் 46,000ற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்களும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே வடபகுதி மீனவக் குடும்பங்களின் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கடற்றொழில் அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் வலியுறுத்தியுள்ளார். தவறினால் வடபகுதி மீனவமக்கள் அரசிற்கெதிராக போராட்டத்தில் குதிப்பார்கள் எனவும் கடுமையாக எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றில் 09.04.2025 இன்று இடம்பெற்ற பெறுமதிசேர் வரி தொடர்மான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பெறுமதிசேர் வரி தொடர்பிலான விவாதத்திலே கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழுங்கியமைக்கு நன்றி.

உணவுப்பொருட்களுக்கான வரி குறைக்கப்படவேண்டும். குறிப்பாக அரிசி, சீனி, மா, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களின்மீதான வரி குறைக்கப்படவேண்டும்.

அதேவேளை எனது மாவட்டத்திலும், வடமாகாணத்திலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவுய் சில கருத்துக்களைத் தெரிவிக்கலாமென நினைக்கின்றேன்.

கிளீன் சிறீலங்கா எனச் சொல்லப்படுகின்ற விடயத்திற்கு மாறாக வடக்கு மாகாணத்திலே சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளின் மோசமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.



முன்னைய அரசாங்கங்களின் காலங்களிலும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்திருந்தன. இந்நிலையில் தற்போதைய புதிய அரசாங்கத்தின் காலத்திலாவது சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகள் குறைவடையும் என எதிர்பார்த்திருந்த நிலையில், மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகளே சுருக்குவலை, வெளிச்சம்பாய்ச்சி மீன்பிடித்தல்போன்ற தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றார்களோ என நாம் எண்ணக்கூடியவாறிருக்கின்றது.

தற்போதைய மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகள் இலஞ்சம் பெற்று தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாக மக்கள் தெரிக்கின்றனர்.

இவ்வாறானநிலை மாறவேண்டும். அதேவேளை முல்லைத்தீவைப் பொறுதனதவரையிலே கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் போன்ற போதைப்பொருட்களின் ஊடுவல்கள் அதிகரித்திருக்கின்றன.

அத்தோடு இவ்வாறான சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளும் அதிகரித்திருக்கின்றன இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு யார் காரணம்.

இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த கடற்தொழில் அமைச்சர் கரிசனையோடு செயற்படவேண்டும்.

இல்லாவிட்டால் அரசிற்கு எதிராக மக்கள் இறங்கிப் போராடவேண்டிய சூழல் ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ளவிரும்புகின்றேன். கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க அவர்கள் இச் சபையிலே இருக்கும்போதே இதனைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

குறிப்பாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக கடற்தொழில் மேற்கொள்ளும் மாவட்டங்களாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் காணப்படுகின்றன. இதனால் பெருமையடைகின்றோம்.

இவற்றில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு சமாசமும், 34 மீனவகூட்டுறவுச்சங்கங்களும், 3,847 மீனவக்குடும்பங்களைச்சேர்ந்த 4,642 மீனவர்களும், 215 மீனவப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும், 1,435 பதிவிலுள்ள படகுகளும், 720 பதிவில் இல்லாத படகுகளும் காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் 15000ற்கும் அதிகமான மீனவக்குடும்பங்களும், மொத்தமாக 4,620 படகுகளும், 5000ற்கும் அதிகமான மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கண்டாவளை, பளை ஆகிய மூன்று சமாசங்களில் 25 மீனவக் கூட்டுறவுச்சங்கங்கள், மற்றும் 4,199 மீனவக் குடும்பங்களும், 5,194மீனவர்களும், 1,691 மீன்பிடிப் படகுகளும், 482 மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

அதேபோன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் காணப்படுகின்றது. அவற்றில் மொத்தமாக 126 சங்கங்களும், 23,798 மீனவக் குடும்பங்களும் 28,110 மீனவர்களும், 9,169 மீன்பிடிப் படகுகளும், 5000ற்கும் அதிகமான மீனவப் பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு இருக்கையில் எமது மீனவர்கள்படும் துயரங்கள் எண்ணிலடங்காதவை. குறிப்பாக இந்திய இழுவைப்படகுகளின் சட்டவிரோத இழுவைமடி மீன்பிடி முறையால் மிகவும் மோசமான நிலைக்கு எமது மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்லலாது சூழல்சார் பாதிப்பினையும் நாமும், எமது சமுத்திரமும் எதிர்கொள்கின்றோம். இதனால் கடல்சார் உற்பத்திகள் அற்றுப்போய் எமது மீனவமக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகின்றது. கடலில் மீன்கள் உற்பத்தியாகி அவை வளர்ச்சியடையும் முன்பே அந்தக் கடல்வாழ் உயிரினங்கள் அழிக்கப்படுகின்றன. அத்தோடு எமது மீனவர்கள் சுதந்திரமாக தங்களது தொழிலை மேற்கொள்ளமுடியாது தாக்கப்படுவதும், மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது.

அதுமட்டுமல்லாது சூழல்சார்ந்து கடலின் அடியில் காணப்படும் கடற்தாவரங்கள், பவளப்பாறைகள், கடல்சார் உயிரினங்களின் உற்பத்தி இடங்கள் அழிக்கப்படுகின்ற செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. இதனால் கடலையும், கரையையும் நம்பியுள்ள எமது மீனவ சமூகம் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து



தவிக்கின்றார்கள்.

எமது மீனவர்கள் சுதந்திரமாகச் செய்துவந்த பாரம்பரிய மீன்பிடித்தொழிலை செய்யவிடாமல் குறிப்பாக இலங்கையில் அங்கீகரிக்கப்படாத பதினெட்டுவகையான சட்டவிரோத மீன்பிடி முறைகள் தற்போது மிக அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் எமது பாரம்பரிய மீனவ நடவடிக்கைகள் அழிந்துபோகின்ற நிலமைகள் காணப்படுகின்றன. இதனால் எமது மீனவர்கள் மீன்பிடித்தொழிலைக் கைவிட்டுச் செல்கின்ற நிலமைகளும் காணப்படுகின்றன.

இவ்வாறான சட்டவிரோத தொழில் முறைகள் அதிகரித்தமைக்கு பொறுப்பற்ற கடந்தகால அரசும், அமைச்சும், அரச அதிகாரிகள் சிலருமே காரணமாகும். இவர்கள் சட்டவிரோதமான தொழில்களுக்கு அனுமதிகளை வழங்கி சாதாரண மீனவர்களதும் நாட்டினது பொருளாதாரத்தையும், வளங்களையும் அழிவிற்கு இட்டுச்செல்ல உறுதுணையாக இருந்தார்கள் என்பதே உண்மை.

அபிவிருத்தி என்றபோர்வையில் கடற்கரையோரங்களில் இடம்பெறும் கனியமணல் அகழ்வு, மற்றும் பண்ணை வளர்ப்பு முறைகள் போன்றவற்றால் எமது மீனவர்கள் தங்களுடைய காணிகளை இழந்துவருகின்றனர். சூழல் பாதிப்புக்களையும் எதிர் கொள்கின்ற சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளது. இதனால் பலமீனவர்கள் தங்களது இறங்குதுறைகளையும் இழந்து தவிக்கின்றார்கள். பல நீர்வாழ் உயிரினங்கள் அழிந்து போகின்றன.

மீனவப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன.

மீனவர்களின் கரவலைப்பாடுகள் இல்லாமல்போகின்றது. அதுமட்டுமல்ல சமூகச்சீர்கேடான விடயங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இவற்றைக் கண்டுகொள்ளாமல் மக்கள் நலன் சாராத இவ்வாறான திட்டங்கள் எமக்கு அவசியமானதா? என்பது சிந்திக்கவேண்டிய விடயம் - என்றார்.

நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்த ஒரு சக்தியாலும்எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.
-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் இரவீந்திரநாத் அவர்கள் 15.12.2006 அன்று "Triploli Platoon - பிள்ளையான்" கூட்டு கும்பலால் கடத்தி காணாமலாக்கப்பட்டார்

09.04.2025

புரட்டாதி 20, 2006 முதல் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் பல்வேறு வழிகளில் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டார். யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கிழக்கு பல்கலை கழக துணைவேந்தராக இருக்க முடியாது என்கின்ற தோரணையில் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டது. தொலைபேசி வழியில் தொடங்கிய அச்சுறுத்தல்கள் ஒரு கட்டத்தில் கலைப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பால சுகுமாரை கடத்திச் சென்று பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் துணைவேந்தர் பதவியை ராஜினாமா செய்தால், கலாநிதி பால சுகுமாரை விடுவிப்போம் என கட்டாயப்படுத்துமளவிற்கு எல்லை மீறியது.

இராணுவம் மற்றும் பொலிஸ் கண் முன்னே அவர்கள் வேடிக்கை பார்க்க இவை நடந்தேறின. இவ்வாறான நெருக்கடிகளால் பாதுகாப்புமின்றி பணியாற்ற முடியாத சூழலில் துணைவேந்தர் ஐப்பசி 1, 2006 அன்று இரவு மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குப் இடம்பெயர்ந்தார். மறுநாள், பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் 30.10.2006 திகதியிட்டு தனது ராஜினாமாவையும் சமர்ப்பித்தார்.

ஆனால் அவரது ராஜினாமா கடிதத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அவரை கொழும்பிலிருந்து பணியாற்றுமாறு பணித்தது. துணைவேந்தர் ஒருவரின் ராஜினாமாவை தங்களால் ஏற்றுகொள்ள முடியாது என வாதிட்டது.

இந்த நெருக்கடிகள் குறித்து பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் பொலிஸ்யில் மேற்கொண்ட முறைப்பாடுகளும் தட்டி கழிக்கப்பட்டன. பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களை பாதுகாக்க கோட்டாபய ராஜபக்சவின் தாளத்திற்கு ஆடிக்கொண்டிருந்த மஹிந்த ராஜபக்சே ஆட்சியாளர்களும் முயற்சிக்க வில்லை. மாறாக இராணுவ புலனாய்வாளர்களும் ஒட்டுக்குழுக்களும் தாங்கள் நினைத்ததை செய்ய கூடிய சுதந்திரத்தை வழங்கியிருந்தார்கள்.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பங்குபற்றிய Sri Lanka Association for the Advancement of Science யின் Conference யில் கொழும்பிற்கு இடம்பெயர்ந்த பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் பங்குபற்றினர்.

கொழும்பின் உயர் பாதுகாப்பு வலயமாகவிருந்த Vidya Mawatha (பௌத்தலோக மாவத்தைக்கு அருகில்), கொழும்பு 7 இல் நடைபெற்ற இவ் Conference நடைபெற்றது. அன்று 8.30 மணிக்கு, பேராசிரியர் ரவீந்திரநாத் அவர்களை அவரது மகளின் தெஹிவளை அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து Conference இற்கு பல்கலை கழக காரில் சென்றிருந்தார். மதியம் 12.25 மணிக்கு, பேராசிரியர் ரவீந்திரநாத் தனது சாரதிக்கு தொலைபேசியில் பேசியிருந்தார்.

பழுதுபார்க்கும் பணி இன்னும் நடந்து கொண்டிருப்பதால், உடனடியாக வர முடியாமல் இருக்கின்றது என சாரதி துணைவேந்தருக்கு பதிலளித்திருக்கின்றார். இதை தொடர்ந்து துணைவேந்தர் தனது சாரதியை மதியம் 2.00 மணிக்கு தன்னை அழைத்து செல்ல வருமாறு அறிவுறுத்தியிருக்கின்றார்.

இதற்கு பின் Conference மண்டபத்திலிருந்து மற்றுமொரு தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிக்க வெளியேறிய சில நிமிடங்களில் அவர் கடத்தப்பட்டார் என சொல்லப்படுகின்றது.

இவ்வாறு கடத்தப்பட்ட அவர் அங்கிருந்து 300 KM தொலைவில் இராணுவ முகாம்களுக்கு மத்தியிலிருந்த தீவுசேனை பிள்ளையான் முகாமிற்கு கொண்டு வரப்பட்டார். இருத நோயாளியான அவரை தனக்குரிய மருந்துகளை கூட எடுக்க அனுமதிக்காமல் பங்கர் ஒன்றில் 3 நாட்கள் பிள்ளையான் தடுத்து வைத்திருந்ததாக சொல்லப்படுகின்றது.

இலங்கை இராணுவத்தின் Triploli Platoon பிள்ளையனோடு சேர்ந்து இந்த கொடூர சம்பவத்தை அரங்கேற்றியிருந்தார்கள். கோத்தபாயா ராஜபக்சே, மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண, பிரிகேடியர் அமல் கருணாசேன உட்பட புலனாய்வு கட்டமைப்பின் ஒத்துழைப்பு வழங்க உயர் பாதுகாப்பு வலயத்தில் கடத்தப்பட்ட துணைவேந்தரை எவ்வித தடையுமின்றி 300 KM தொலைவிற்கு Triploli Platoon-பிள்ளையான் கூட்டு கொண்டு சென்றது.

இந்த சம்பவத்தில் மேஜர் பிரபாத் புலத்வத்தே மற்றும் கேணல் சாமி குணரத்தின கீழ் இயங்கிய Triploli Platoon யின் தொடர்பை பிள்ளையான் கூட்டாளி அஸாத் மௌலானா உறுதி செய்கின்றார். அதே போல அக் காலப்பகுதியில் பிள்ளையான் குழுவிற்கு பொறுப்பாகவிருந்து பிள்ளையானை மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே வழிநடாத்தியதாக அஸாத் மௌலானா பதிவு செய்கின்றார்.

பேராசிரியர் ரவீந்திரநாத்தின் குடும்பத்தினர் அவரது விடுதலையைப் பெற மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடையவும் இச் சம்பவத்தின் பின்னணியிலிருந்து மேற்படி இராணுவ தொடர்புகளே காரணமாக இருந்தது. மஹிந்த ராஜபக்சே அவர்களை நேரில் சந்தித்து முறையிட்டார்கள்.

கோட்டாபய ராஜபக்சே அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். கருணா -பிள்ளையான் குழுவுடன் நேரடியாகப் பேசினர்கள்.



மனித உரிமை கண்காணிப்பகம் , சர்வதேச மன்னிப்பு சபை , UN High Commissioner for Human Rights, புகழ்பெற்ற சர்வதேச கல்வியாளர்கள் உட்பட என சகல தரப்பிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆரம்பத்தில் துணைவேந்தரின் ராஜினாமாவை ஏற்று கொள்ள மறுத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அவர் கடத்தப்பட்ட பின்னர் 19 தை 2007 யன்று அவர் இராஜினாமாவை ஏற்று கொண்ட போதும் அவரை காப்பாற்ற முடியவில்லை.

பிள்ளையானை பயன்படுத்தி வடக்கு கிழக்கு பிரதேசவாதத்தை கூர்மைப்படுத்த இராணுவ புலனாய்வு கட்டமைப்புகள் மேற்கொண்ட முயற்சிகள் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களை காணாமலாக்கியது.

இப்போது 18 ஆண்டுகளுக்கு பின்னர் இச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரிகளில் ஒருவரான பிள்ளையான் கைது (?) செய்யப்பட்டிருக்கின்றார்.

ஆனால் பிள்ளையானை இயக்கிய கோத்தபாயா ராஜபக்சே அடங்கலான புலனாய்வு வலையமைப்பை விசாரணை வலயத்திற்குள் கொண்டு வந்தால் மட்டுமே சம்பவத்தின் முழு பின்னணியையும் கண்டறிந்து குற்றச்செயலை உறுதிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வு பெற்று கொடுக்க முடியும். - இனமொன்றின் குரல்

# அச்சுவேலி கூட்டுறவுச் சங்க காணி சிறீலங்காப் படைகளால் விடுவிப்பு

10.04.2025

யாழ்ப்பாணம் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைமை காரியாலய கட்டடம் மற்றும் அதனை சூழவிருந்த சுமார் 08 பரப்பு காணி இன்றைய நாள் வியாழக்கிழமை சிறீலங்கா இராணுவத்தினரால் விடுக்கப்பட்டுள்ளது.





சுமார் 30 வருட காலத்திற்கு மேலாக சிறீலங்கா சிங்கள இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி மற்றும் அதனுள் இருந்த கட்டடம் என்பவற்றை வலி கிழக்கு பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் இன்றைய நாள் உத்தியோகபூர்வமாக கையளித்த நிலையில் , பிரதேச செயலரினால் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது .

இதுவரை காலமும் மாற்றிடம் ஒன்றில் தலைமை காரியாலயம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# யாழில் 35 வருடங்களின் பின் கடுமையான கட்டுப்பாடுகளுடன் அதி உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த வீதி திறப்பு

10.04.2025

யாழ்ப்பாணம். வசாவிளான் சந்தி முதல் பொன்னாலை - பருத்தித்துறை வீதி வரையிலான பலாலி வீதி கடுமையான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் 35 ஆண்டுகளுக்கு பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

சிறீலங்கா இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தின் ஊடாக செல்லும் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியானது கடந்த 1990ஆம் ஆண்டு முதல் மக்கள் போக்குவரத்திற்கு








தடை செய்யப்பட்டிருந்தது.

அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வடக்கு பிரதேசத்திற்கு செல்லும் மக்கள் காங்கேசன்துறை சென்று அங்கிருந்தே பலாலி வடக்கிற்கு செல்லும் நிலைமை காணப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியின் ஊடாக போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு யுத்தம் நிறைவடைந்த காலம் முதல் சுமார் 15 வருட காலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதியானது இன்றைய நாள் வியாழக்கிழமை முதல், பல்வேறு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் மக்கள் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டப்பட்டுள்ளது.

நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இவ் வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு பதாகையில் அந் நிபந்தனைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, குறித்த வீதி காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாத்திரமே திறக்கப்படும்.

வீதியில் பயணிப்பவர்கள் வீதியின் இடையில் வாகனத்தினை நிறுத்துதல், வாகனங்களைத் திருப்புதல், பயண நேரத்தில் புகைப்படம், காணொளி எடுத்தல், ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடைபயணம் மற்றும் பேருந்து தவிர்ந்த பாரவூர்திகள் குறித்த வீதியூடாக செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 40 கிலோமீட்டர் வேகத்தில் மாத்திரமே பயணிக்க வேண்டும். சாரதிகளுக்கான அடையாள



ஆவணங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தல் பதாகை வீதியில் தமிழ் மொழியில் எழுதி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனைகளை பின்பற்றாவிடின் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கும் குற்றம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.







# ஓய்வு நேரத்தில் களவில் ஈடுபடும் சிறீலங்கா இராணுவம்!

11.04.2025

வவுனியாவின் பல பகுதிகளிலும் வீதியால் சென்ற பெண்களை பின் தொடர்ந்து சென்று சங்கிலி அறுத்து வந்ததாக வவுனியாவில் பணியாற்றும் சிறீலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இன்று வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம் பெற்ற சங்கிலி அறுப்பு சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது மோட்டர் சைக்கிளுடன் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த டிசம்பர் 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் பெண் ஒருவரிடம் 1பவுண் சங்கிலியும், கடந்த ஜனவரி முதலாம் திகதி வேப்பங்குளம், 6 ஆம் ஒழுங்கை பகுதியில் பெண் ஒருவரிடம் 2 பவுண் சங்கிலியும், கடந்த மார்ச் 31 ஆம் திகதி கூமாங்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் 1 பவுண் சங்கிலியும், இம் மாதம் முதலாம் திகதி நெளுக்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் 1 பவுண் சங்கிலியும், இராசேந்திரகுளம் பகுதியில் பெண் ஒருவரிடம் 1பவுண் சங்கிலியும் அறுத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த நபர் கடமை இல்லாத நேரங்களில் சங்கிலி அறுப்பு சம்பவங்களுக்கு பயன்படுத்திய அவரது சொந்த மோட்டர் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதுடன், அறுக்கப்பட்ட சங்கிலிகளும் அடைவு வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் பணியாற்றும் மிகிந்தலையைச் சேர்ந்த 30



வயதுடைய இராணுவ வீரரே கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கொதிரான மக்கள் போராட்டம்

12.04.2025

யாழ்.தையிட்டிசட்ட விரோத விகாரைக்கெதிரான போராட்டம் இன்று 12.04.2025 சனிக்கிழமை காலை 6மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக வரை இடம்பெறுகின்றது .





# மனித புதைகுழிகளை தோண்டுவதற்கு இதுவரை எந்த அரசாங்கமும் ஆதரவை வழங்கவில்லை: சட்டத்தரணி கே.எஸ் ரட்னவேல்

11.04.2025





மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளுக்கு இலங்கையில் எந்த அரசாங்கமும் இதுவரை நூறு வீத ஆதரவை வழங்கவில்லை என தெரிவித்துள்ள சிரேஸ்ட சட்டத்தரணி கே.எஸ். ரத்னவேல், அரசாங்கங்களிடம் இது தொடர்பாக அரசியல் உறுதிப்பாடு இல்லை என தெரிவித்துள்ளார்.

கொழும்பில் காணாமல்போனோரை தேடியறியும் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :

பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் என்பது மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் மிகவும் பாரதூரமானது.

பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் பெரும் துயரத்தினை அனுபவிக்கின்றனர், நம்பிக்கையற்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

இறுதி முடிவொன்று இல்லாததால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த துயரத்தை அனுபவிக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தங்கள் இறுதிநாட்கள் வரை பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் துயரத்தை அனுபவிக்கின்றனர்.

செம்மணி, வந்தாறுமூலை, மன்னார் சதொச, கொக்குத்தொடுவாய் என பல இடங்களில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணியில் மீண்டும் சமீபத்தில் மாநகரசபையினர் கட்டுமானப்பணியில் ஈடுபட்டிருந்தவேளை அதற்காக தோன்றிய வேளை பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

செம்மணியில் புதிதாக மீட்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து புதிய விசாரணைகள் இடம்பெற உள்ளன. எனினும் இதற்கான நிதி இன்னமும் ஒதுக்கப்படவில்லை.

மனித புதைகுழிகளை அரசாங்கம் உரிய முறையில் கையாளவில்லை. இந்த விடயத்தில் முற்றிலும் அரசியல் உறுதிப்பாடு அற்ற நிலையே நிலவுகின்றது. பொலிஸாரும் உரிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

அரசாங்கம் மனித புதைகுழிகளை தோண்டுவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்வது அதற்கான ஆட்களை ஒதுக்கீடு செய்வது போன்றவற்றில் பிரச்சினைகள் உள்ளன.

மனித புதைகுழி அகழப்படும் விடயத்திற்கு பல நிபுணர்கள் தேவை - ஒருங்கிணைத்து செயற்படவேண்டும், எங்கள் நாட்டை பொறுத்தவரை இது புதிய விடயம்.

ஆர்ஜென்டீனா, சிலி போன்ற நாடுகளில் இராணுவ ஆட்சிக் காலத்தில் பலர் கொல்லப்பட்டனர். ஆனால் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் மனித புதைகுழிகளை தோண்டும் விடயத்தில் மிகவும் நம்பகதன்மை மிக்க விதத்தில் செயற்பட்டனர். பொதுமக்களின் பங்களிப்பை ஊக்குவித்தனர். மனித புதைகுழிகள் அகழப்படும்போது பொதுமக்கள் பார்க்ககூடிய நிலை கூட காணப்பட்டது.

ஆனால் எங்கள் நாட்டில் மனித புதைகுழிகளை தோண்டும் போது மக்களை ஊடகவியலாளர்களை அனுமதிப்பதில்லை.

மன்னார் சதொச மனித புதைகுழியை தோண்டும் நடவடிக்கைகள் சட்டமா அதிபரின் தலையீட்டால் முடங்கின. இது அவருக்கு தொடர்பில்லாத விடயம். அங்கு அகழ்வுதான் இடம் பெற்றதே தவிர குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறவில்லை. ஆகவே அது அவருக்கு தொடர்பில்லாத விடயம். அவரின் தலையீட்டால் எதிர்மறையான பாதிப்பு ஏற்பட்டது.

சதொச மனித புதைகுழி அகழ்வின் போது சம்மந்தப்பட்ட தரப்புகள் சட்டமா அதிபரை உள்ளே கொண்டுவந்தன.

அரசாங்கம் மனித புதைகுழிகள் தோண்டப்படுவதை குழப்புவதற்கு பல வழிமுறைகளை கையாளும், நிதியை விலக்கிக் கொள்வதன் மூலம் அகழ்வை குழப்பும். அகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நிதி இல்லை என தெரிவிப்பார்கள்.

ருவாண்டா, சிலி போன்ற நாடுகளில் மனித புதைகுழிகளை தோண்டுவதற்கு அரசாங்கங்கள் நிதியை வழங்கின.

ஆனால் இங்கு அரசாங்கங்கள் வெளிநாடு நிதியை கூட தடுக்கின்றன, இதுதான் எங்களின் அனுபவம்.

அரசாங்கம் மனித புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளை குழப்பும்போது பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை இழக்கின்றார்கள். நாங்கள் மீண்டும் அவர்களிடம் செல்லும் போது என்ன பிரயோசனம் என கேட்கின்றார்கள், ஆனாலும் ஒத்துழைப்பைவழங்குகின்றார்கள்.

மீட்கப்படும் மனித எச்சங்கள் எந்த காலத்தை என்பதை அறிவதற்காக ஆய்வுகூடங்களிற்கு அனுப்பவேண்டும், வெளிநாட்டு ஆய்வு கூடங்களிற்கே அவற்றை அனுப்பவேண்டும். ஆனால் அரசாங்கம் நிதி வழங்க மறுக்கின்றது.

முல்லைத்தீவில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் உடல்கள் என கருதப்படும் 42 உடல்களை மீட்டுள்ளோம்.

செம்மணியில் 600க்கும் மேற்பட்ட உடல்கள் உள்ளதாக அந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் இன்னமும் கருதுகின்றனர். கைது செய்யப்பட்ட 600 பேரின் பெயர் விபரங்கள் அவர்களிடம் உள்ளன. இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர் என அந்த பகுதி மக்கள் கருதுகின்றனர்.

இது மிகவும் கடினமான பணி ஆனால் எவ்வளவு தூரத்திற்கு இந்த அகழ்வு பணியை சிறப்பாக முன்னெடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் முன்னெடுக்கின்றோம்.

மிகமிக முக்கியமான விடயம் என்னவென்றால் அரசாங்கங்களிடம் இது தொடர்பில் அரசியல் உறுதிப்பாடு இல்லை என்பதே, எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்கள் 100 வீத ஆதரவை வழங்க தயாரில்லை, சந்திரிகா அரசாங்கமாகயிருந்தாலும் சரி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமாகயிருந்தாலும் சரி.

# முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்களின் காணி பிரச்சினைக்கு தீர்வுகோரி மகஜர் கையளிப்பு!

11.04.2025

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்க கோரி வெள்ளிக்கிழமை (11) கேப்பாபிலவு கிராம மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு சென்று அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்திருந்தனர்.



முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடமும், மற்றும் உயர் அதிகாரிகளிடமும் கடந்த வருடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்தனர்.

அதற்கு தீர்வுகள் கிடைக்க பெறாத நிலையில் நேற்றையதினம் வியாழக்கிழமை (10) கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று ஜனாதிபதியினுடைய சிரேஸ்ட உதவி செயலாளரை சந்தித்து கலந்துரையாடிய போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆவணங்கள் எம்மிடம் கிடைக்கவில்லை என கூறியிருந்தனர்.

இதனையடுத்தே இன்றையதினம் கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் ஜனாதிபதி செயலகத்தில் கூறப்பட்ட விடயங்களை கூறி அரச அபரிடம் புதிய மகஜரை கையளித்திருந்தனர்.

இதன்போது முல்லை மாவட்ட அரசஅதிபர் கேப்பாபிலவு காணி தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கு தம்மால் அனுப்பி வைக்கப்பட்ட மகஜரினையும் அதற்கான பதில் கடிதத்தையும் கேப்பாபிலவு மக்களுக்கு காண்பித்து அது தொடர்பாக தெளிவு படுத்தியிருந்தார்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள், தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

குறிப்பாக மக்களின் பயன்தரு தென்னை மரங்கள் பல குறித்த காணியிலேயே காணப்படுகின்றன. 62 நபர்களின் 171 ஏக்கர் காணிகள் தற்போது விடுவிக்கப்படாது இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்திருந்த நிலையிலே இன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் புதிய மகஜர் ஒன்றினை கையளித்து இருந்தனர்.

அத்தோடு எதிர்வரும் 26 ஜனாதிபதி அனுரகுமார திசாநயாக்கா முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிற்கு வருகைதர இருப் பதனால் அவரிடமும் கேப்பாபிலவு மக்கள் மகஜரினை கையளிக்க இருப்பதும் குறிப்பிடதக்கது.

**எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையில் தொடர்ந்து போராடுவோம்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# மண்டைதீவில் மைதானம் வேண்டாம் வலுக்கும் குரல்கள்

12.04.2025

மண்டைதீவு மைதானத்தை வேண்டாம் என்று சொல்லுங்கள்! நமது ஈரநிலங்களைப் பாதுகாக்கவும் குரல்கள் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் மண்டைதீவில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை கட்ட இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது - இது 80க்கும் மேற்பட்ட பறவை இனங்கள், சதுப்புநில காடுகள் மற்றும் வளமான கடல் பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்ட ராம்சர் வகை ஈரநிலப் பகுதியாகும்.

மண்டைதீவின் சதுப்புநிலங்கள் தோராயமாக 35 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளன, இது ஏராளமான உயிரினங்களுக்கு ஒரு முக்கிய வாழ்விடமாகவும், உள்ளூர் சமூகங்களுக்கு வாழ்வாதாரமாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராட உதவும் கார்பன் மூழ்கிகளாகவும் செயல்படுகிறது.

இந்த முன்மொழியப்பட்ட கட்டுமானம் தற்போதுள்ள சதுப்புநிலப் பரப்பில் 60% க்கும் அதிகமானவற்றை அழித்து, குளத்தை நம்பியுள்ள 250க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும், மேலும் புலம்பெயர்ந்த பறவைகள் மற்றும் கடல் உயிரினங்களுக்கான ஒரு முக்கியமான வாழ்விடத்தை சீர்குலைக்கும்.

சதுப்பு நிலங்கள் வெற்று நிலங்கள் அல்ல - அவை வாழும், சுவாசிக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகள். இயற்கையின் விலையில் வளர்ச்சி ஒருபோதும் வரக்கூடாது என குரல்கள் எழுந்துள்ளன.




# வவுனியாவில் தமிழ் மொழியில் தண்டப்பத்திரம் கோரிய சாரதி; கைது

12.04.2025

வவுனியா, குருமண்காட்டு சந்தியில் வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார் தமிழ் மொழியில் தண்டப்பத்திரம் கோரிய சாரதியினை பிடித்து இழுத்து முச்சக்கர வண்டியில் ஏற்ற முற்பட்டமையினால் அவ்விடத்தில் பதற்ற நிலமை காணப்பட்டது.

சனிக்கிழமை (12) இடம்பெற்ற இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வாகன சாரதி ஒருவர் வர்த்தக நோக்கத்திற்காக குருமண்காடு சந்தியில் வாகனத்தினை நிறுத்தியுள்ளார். இதன்போது வாகனத்தினை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு போக்குவரத்து பொலிசார் தெரிவித்துள்ளனர்.

எனினும், வர்த்தக நிலையத்திற்கு பொருட்களை இறக்குவதினால் சிறிது நேரம் கால அவகாசம் தருமாறு வாகன சாரதி கோரிய சமயத்தில் போக்குவரத்து பொலிசார் வாகன திறப்பினை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது வாகனத்தினை நிறுத்த தடை செய்யப்பட்ட இடத்தில் வாகனத்தினை நிறுத்தியமை என சிங்கள மொழியில் பொலிசார் தண்டப்பத்திரம் வழங்கிய சமயத்தில் தமக்கு என்ன குற்றம் என தெளிவில்லை. எனவே, தமிழ் மொழியில் தண்டப்பத்திரம் கோரியமையினால் வாகன சாரதி - போக்குவரத்து பொலிசாருக்கிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைக்கு இடையூறு என தெரிவித்து குறித்த வாகன சாரதியினை முச்சக்கர வண்டியில் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச்செல்ல முற்பட்ட சமயத்தில் அவ்விடத்தில் பதற்ற நிலமை ஏற்பட்டது.

எந்த தவறும் செய்யாது என்னை எவ்வாறு கைது செய்ய முடியும். மேலும் அவ்வாறு தவறு செய்தால் தண்டப்பத்திரம் தானே வழங்க வேண்டும் என வாகன சாரதி கூறி, முச்சக்கர வண்டியில் ஏற மறுப்பு தெரிவித்தமையடுத்து போக்குவரத்து பொலிஸார் குறித்த வாகன சாரதியின் தலையை பிடித்து இழுத்து முச்சக்கர வண்டியில் ஏற்றி வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் சென்றனர்.

வாகன சாரதி மீது வவுனியா போக்குவரத்து பொலிஸார் வழக்கு



தாக்கல் மேற்கொண்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

# "கருணாவே வெருகல் படுகொலையின் காரண கர்த்தா"

பா. அரியநேந்திரன்

12.04.2025

வெருகல் படுகொலை ஏற்பட பிரதான காரணகர்த்தா கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரனே என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். வெருகல் படுகொலையின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றதுடன் அதில் கருணாவும் கலந்துகொண்டிருந்தார்.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், அந்த காலப்பகுதியில் பிரதேசவாதக் கருத்தை கருணாதரப்பினர் பரப்பியதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி விடுதலைப் புலிகளில் இருந்து தாம் விலகிவிட்டதாக ஊடகத்தில் கருணா அறிவித்தார். அதன்பின்னர் கிழக்குப் புலிகள், வன்னிப் புலிகள், என்ற பிரதேசவாதக் கருத்தை கருணா தரப்பினர் பரப்பி மட்டக்களப்பு நகர்பகுதி, செங்கலடி பகுதிகளில் இருந்த யாழ் மக்களை வெளியேற்றும் காடைத் தனத்தை புரிந்தனர்.

2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி பாராளுமன்ற பொதுத்தேர்தல் முடியும் வரை விடுதலைப் புலிகள் கருணா குழு மீது எந்த நடவடிக்கையையும் செய்யவில்லை. பின்னர் அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி இரவு முதல் மறுநாள்வரை வாகரைக்கும், வெருகல் பாலத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் கருணா தரப்பை சேர்ந்த போராளிகள் சிலர் உயிரிழந்தனர். பின்னர் அவ்வாறு உயிரிழந்த தரப்பினரையும் மாவீரர்கள் பட்டியலில் இணைக்க வேண்டும் என்று தலைவர் பிரபாகரன் தெரிவித்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அவர்கள் அனைவரும் இன விடுதலைக்காக போராடியவர்கள் என்றும் சிலரின் தவறான வழிகாட்டுதலுக்கு இலக்காகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உயிர் நீத்த அத்தனை போராளிகளும் தலைவரின் கட்டளைப்படி மாவீரர் பட்டியலில் இணைத்துக்கொள்ளப்பட்டு கார்த்திகை 27ஆம் திகதி அவர்களுக்காகவுமே தீபச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்படுகிறது என்பதே உண்மை. "வெருகல் படுகொலை" என வேறுபடுகொலை தினம் உண்டு.

திருகோணமலை மாவட்டத்தின் ஈச்சிலம்பற்று அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கான உலர் உணவுப் பொருட்களை 1986ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதி



எடுத்து சென்ற போது மகிந்தபுர பகுதியில் வைத்து மூன்று அரச அதிகாரிகள் உட்பட 21 பேர் இராணுவம் மற்றும் ஆயததாரிகளினால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

அந்த படுகொலையையே "வெருகல் படுகொலை" என நினைவு கூருவது குறிப்பிடத்தக்கதாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

**சிங்கள தேசம் ஆக்கிரமித்து அடிமை கொள்ளத் துடிக்கும் இந்த மண் அதற்கு என்றுமே சொந்தமானதென்று. இந்த மண் எமக்குச் சொந்தமான மண்; பழந்தமிழர் நாகரீகம் நீடித்து நிலைபெற்ற மண், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே எமது மூதாதையர் வாழ்ந்து வளர்நத மண்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




# தொழிலாளர் நலன் கருதி குறைந்தபட்ச ஊதிய வரம்பை ஒன்றாரியோ உயர்த்துகிறது

01.04.2025

முதல்வர் டக் ஃபோர்டின் தலைமையிலான ஒன்றாரியோ அரசு, எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதியிலிருந்து, குறைந்தபட்ச ஊதியத்தை மணித்தியாலம் ஒன்றுக்கு 17.20 டொலரிலிருந்து 17.60 டொலராக உயர்த்தவுள்ளது. இவ்வுயர்வு, தொழிலாளர்கள் நியாயமானதும் நிலையானதுமான ஊதியத்தைப் பெறுவதை உறுதிப்படுத்த உதவுகிறது. 2018 முதல், குறைந்தபட்ச ஊதியம் 14 டொலரிலிருந்து 17.20 டொலராக உயர்ந்துள்ளது. இது தொழிலாளர்களுக்கு மிகுந்த உறுதுணையாக உள்ளது.

வருகின்ற அக்டோபரில் நடைமுறைக்கு வரவுள்ள இச்சம்பள உயர்வின் மூலம், முழுநேர குறைந்தபட்ச ஊதியத் தொழிலாளியொருவர் ஆண்டுக்கு 835 டொலர்களை அதிகமாக ஈட்டலாம். “ஒன்றாரியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அதேவேளையில், தொழிலாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு ஆதரவளிக்க எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். கனடாவில் மிக உயர்ந்த குறைந்தபட்ச ஊதியத்துடன், வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும், குடும்பத்தைப் பராமரிப்பதற்கும் ஒன்றாரியோ சிறந்த இடமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் எரிபொருள் விலை வீழ்ச்சி: கார்பன் வரி நீக்கம்

02.04.2025

ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் (GTA) எரிபொருள் விலை இன்று முதல் கணிசமாக குறைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் கார்பன் வரி (Carbon Tax) இனி அமுல்படுத்தப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பிரதமர் மார்க் கார்னி, கூட்டாட்சி அரசு ஏப்ரலில் இருந்து கார்பன் வரியை நீக்குவதாக அறிவித்தார்.

இதனால் நாடு முழுவதும் எரிபொருள் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரொரான்ரோ பெரும்பாக பகுதியில் எரிபொருள் விலை 20 சதங்களினால் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் எரிபொருள் 1.57 சதங்களிலிருந்து 1.37 சதங்களாக குறைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்பன் வரி நீக்கமானது எரிபொருள் விலைகளில் சாதக மாற்றத்தை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# ரொரான்ரோவில் தட்டம்மை நோய் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

07.04.2025

ரொரான்ரோவில் தட்டம்மை நோய் தொடர்பில் இந்த எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது.

ரொரான்ரோவில் பல்பொருள் அங்காடி பகுதியில் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி சென்றவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



ரொரான்ரோவின் பொது சுகாதார அலுவலகம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தட்டம்மை நோய் தொற்று குறித்த இடத்தில் இருந்து பரவியிருக்கலாம் எடுக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நோய் தொற்றுக்கு இலக்கானவர்கள் குறித்த பகுதியில் இருந்ததாகவும் இதனால் குறித்த இடத்திற்கு குறித்த திகதியில் சென்றவர்கள் சில வேலைகளில் நோய் தொற்றுக்கு உள்ளாகி இருக்கலாம் என ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலக்கானவர்கள் மூச்செடுக்கும் போது இருமும் போது தும்மும் போது அல்லது பேசும் போது இந்த நோய் தொற்று பரவக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




இது இந்த நோய் தொற்றானது சுமார் 2 மணித்தியாலங்கள் வரையில் காற்றில் உயிர்ப்புடன் இருக்கக்கூடியவை என தெரிவிக்கப்படுகிறது.



**“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது.”**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

**www.sangathamil.ca**

# ரொரான்ரோ பெரும்பாகத்தில் கடுமையாக்கப்படும் ஆபத்தான நாய்கள் தொடர்பான சட்டம்!

08.04.2025

ரொரான்ரோ நகரத்தில் ஆபத்தான நாய்கள் தொடர்பான சட்டங்களை மேலும் கடுமையாக்கும் ஒரு புதிய திட்டம் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட உள்ளது.



கடந்த நவம்பர் மாதம் ரொரான்ரோ-டான்ஃபோர்த் வார்டின் கவுன்சிலர் பௌலா ஃப்ளெச்சர் இந்த மாற்றங்கள் குறித்த முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார்.

ஆபத்தான நாய்கள் வசிக்கும் வீடுகளின் கதவுகளில் அவை இருப்பதைப் பற்றிய எச்சரிக்கை பலகை இடுதல், மற்றும் அந்த நாய்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கிய ஆன்லைன் பதிவு அமைப்பை உருவாக்குதல் ஆகியவை இந்த உத்தேச சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களைச் சமர்ப்பிப்பதோடு, கண்டோ குடியிருப்புகளில் உள்ள ஆபத்தான நாய்களின் உரிமையாளர்களுக்கும், அந்தக் கட்டடங்களை நிர்வகிக்கும் நிறுவனங்களுக்கும் இவை குறித்த தகவல்களை நகரம் கடிதமாக அனுப்ப வேண்டும் எனவும் பௌலா ஃப்ளெச்சர் வலியுறுத்த உள்ளார்.

“நகர காவல் அதிகாரிகள் அந்த கட்டிடங்களுக்கு சென்று, எச்




சரிக்கை பலகை அமைக்கப்பட்டுள்ளதா என நேரில் சரிபார்ப்பார்கள்,” என்று ஃப்ளெச்சர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# ஒன்ராரியோ மாகாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை பாதுகாக்கும் வகையில் வரிச் சலுகைகள்

08.04.2025

ஒன்ராரியோ மாகாணத்தில் வர்த்தக நடவடிக்கைகளை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் சில வரிச் சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மேற்கொண்ட “நடவடிக்கைகளினால் ஏற்பட்ட நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில், சில மாநில வரிகளை ஆறு மாதங்களுக்கு தள்ளி வைக்கும் தீர்மானத்தை ஒன்ராரியோ அரசு அறிவித்துள்ளது.

சில மாநில நிர்வாக வரிகள் - பீர், வைன் மற்றும் மதுபான வரி, பெட்ரோல் வரி ஆகியவை - 2025 ஏப்ரல் 1 முதல் அக்டோபர் 1 வரை அறவீடு செய்யப்படாது என

இது நிறுவனங்களுக்கு சுமார் $9 பில்லியன் வரை பணப்புழக்க நிவாரணம் அளிக்கும். இது நிறுவனங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்,” என முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

“இது நிறுவனங்களுக்கு ஆறு மாதங்களுக்கு வட்டியில்லா கடனாக இருக்கும்,” என நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென்பால்வி கூறியுள்ளார்.



# கனடாவில் வீட்டு வாடகைகள் தொடர்ந்தும் வீழ்ச்சி

09.04.2025

கனடாவில் வீட்டு வாடகைகள் தொடர்ந்தும் குறைவு ஒரு புதிய அறிக்கையில் தெரிவிக்கப்படுவதாவது, கடந்த மார்ச் மாதத்தில் கனடாவின் தேசிய சராசரி வீடுகள் வாடகை 2,119 டொலர்களாக காணப்பட்டது.

இது கடந்த ஆறு மாதங்களாக தொடர்ந்த வருடாந்த குறைவை தொடர்ந்து பதிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Rentals.ca மற்றும் Urbanation நிறுவனங்கள் வெளியிட்டுள்ள மாதாந்த தரவுகளில், மார்ச் 2024-ஐ ஒப்பிடுகையில் இந்த வருடம் மார்ச் மாதத்தில் வீடுகள் வாடகை 2.8% குறைந்துள்ளது.

எனினும், பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் மார்ச் மாதத்தில் வாடகை விலை 1.5% உயர்ந்துள்ளது.

இது கடந்த செப்டம்பர் மாதத்துக்கு பிறகு முதல் முறையாக மாதந்த அடிப்படையில் ஏற்படும் உயர்வாகும்.

முந்தைய மாதங்களை விட, மார்ச்சில் வாடகைக்கு வீடுகளை பெற்றுக்கொள்வோரின் செயல்பாடு அதிகரித்துள்ளது. இது வாடகை மலிவாக உள்ளதற்கும் காரணமாக இருக்கலாம்.

ஆனால், அமெரிக்காவுடன் உள்ள வர்த்தக மோதலால் ஏற்படும் எதிர்மறையான பொருளாதார பாதிப்பும் வேலை இழப்புகளும், வரும் நாட்களில் வாடகை விலைகளுக்கு மேலும் அழுத்தம் ஏற்படுத்தக்கூடும்,” என அவர் செய்திக்குறிப்பில் தெரிவித் துள்ளார்.

கோவிட்19 தொடங்கிய 2020 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், சராசரி வாடகை இப்போது 17.8% அதிகமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




# நெருக்கடியான காலகட்டங்களில் ஒன்ராரியோ வேலைகள் மற்றும் வணிகங்களைப் பாதுகாக்க 11 பில்லியன் ஒதுக்கீடு

09.04.2025

முதல்வர் டக் ஃபோர்டின் தலைமையின் கீழ், வரிகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் வணிகங்களை ஆதரிப்பதற்காக ஒன்ராரியோ 11 பில்லியன் டொலர் அவசர நிவாரணத்தை வழங்குகிறது. இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில வரிகளை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைத்தல், தோராயமாக 80,000 வணிகங்களுக்கு 9 பில்லியன் டொலர் பணப்புழக்க நிவாரணத்தைத் திறப்பது ஆகியவை அடங்கும். கூடுதலாக, மாநிலம் பாதுகாப்பான முதலாளிகளுக்கு, இந்த ஆண்டு தொடக்கத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட 2 பில்லியனுக்கு மேலதிகமாக, புதிய 2 பில்லியன் டொலர் WSIB தள்ளுபடியை வழங்குகிறது.





“எங்கள் அரசாங்கம் ஒன்ராரியோ முழுவதும் தொழிலாளர்கள் மற்றும் வணிக உரிமையாளர்களுக்குத் துணையாக நிற்கிறது. இந்த தீர்க்கமான நடவடிக்கைகள் அவர்களுக்கு இன்று தேவையான ஆதரவையும், நாளைக்குத் தேவையான உறுதித்தன்மையையும் அளிக்கிறது” என்று அமைச்சர் விஜய் தணிகாசலம் கூறினார். இலக்கு நடவடிக்கை மற்றும் நீண்டகால வளர்ச்சி உத்திகள் மூலம் ஒன்ராரியோ அதன் பொருளாதாரத்தைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளது.

www.sangathamil.ca

# அமெரிக்காவுக்கு செல்லும் கனடிய பயணிகள் எண்ணிக்கையில் சரிவு!

10.04.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஏற்படுத்திய வரி மோதல் மற்றும் கனடாவை “51வது மாநிலமாக” மிரட்டும் வகையில் வெளியிட்ட கருத்துகள் காரணமாக, அமெரிக்காவுக்கு செல்லும் கனடியர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது.

2025 மார்ச் மாதத்தில், அமெரிக்காவிலிருந்து காரில் வீடு திரும்பிய கனடியர்கள் முந்தைய ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது 32% குறைந்துள்ளனர்.

பெருந்தொற்று காலத்திற்குப் பின் முதல் மிகப்பெரிய சரிவாக பதிவாகியுள்ளது என கனடிய புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதையே போல், விமானத்தில் திரும்பியவர்களின் எண்ணிக்கையும் 13.5 வீதமாக குறைந்துள்ளது.

டிரம்ப் மேற்கொண்ட தாக்குதலான வரி தீர்மானங்கள், மற்றும் “கனடா ஒரு அமெரிக்க மாநிலமாக மாறும்” என கூறியமை, கனடியர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

“இந்தச் சறுக்கல் கனடியர்களின் தற்போதைய உணர்வுகளை பிரதிபலிக்கிறது பயண நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் கனடியர்கள் சிலர் எதிர்நோக்கிய கசப்பான அனுபவங்களும் இந்த அதிருப்தி நிலைமைக்கு ஏதுவாக அமைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், 30 நாட்களுக்கு மேல் அமெரிக்காவில் தங்கும் கனடியர்களுக்கு புதிய பதிவு விதிகள் இன்று முதல் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.



கனடிய டாலரின் பெறுமதி தற்போது அமெரிக்க டாலருடன் ஒப்பிடும்போது 70 சதவிகிதம் மட்டுமே, எனவே சிலர் பொருட்கள் வாங்க அமெரிக்காவுக்குச் செல்லும் எண்ணத்தை தவிர்க்கிறார்கள்.

# கனடாவில் இரத்த அழுத்த மருந்துகளுக்கு தட்டுப்பாடு

12.04.2025

கனடாவில் இரத்த அழுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



கனடாவின் “Drug Shortages Canada” இணையதளத்தில், உயர் இரத்த அழுத்தத்தை (Hypertension) குறைக்கும் முக்கியமான மருந்தான ஊாடழசவாயடனைழநெ வின் இரண்டு பிராண்டுகள் பற்றாக்குறையில் உள்ளன எனப் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த மருந்து, உடலில் உள்ள நீரின் அளவை குறைக்கும் வகையில் சிறுநீர் வெளியேற்றத்தை அதிகரித்து, இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் பயன்பாட்டில் உள்ளது.

இத்தகவல், கனடாவின் மருந்து பற்றாக்குறை கட்டுப்பாட்டு அமைப்பான Drug Shortages Canada-ல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த பற்றாக்குறைகள் “Tier 3” பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“Tier 3” என்ற வகை என்பது நாட்டின் மருந்து விநியோகம் மற்றும் சுகாதார சேவைகளில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்போது மட்டுமே வழங்கப்படுகிறது.



மருத்துவர்கள் மற்றும் நோயாளிகள், சிகிச்சை மாற்றங்கள் குறித்து ஆலோசனைக்காக தங்கள் மருத்துவரை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

## www.sangathamil.ca



# தமிழக செய்திகள்



## முகாம்களில் உள்ள தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும்
### வைகோ

03.04.2025

நாடாளுமன்ற மாநிலங்களவையில் இன்று 02.04.2025தில் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் மசோதா, 2025 மீதான விவாதத்தில் பங்கேற்று ஆற்றிய உரை வருமாறு:-

வைகோ: அவைத் துணைத்தலைவர் அவர்களே! இந்த முக்கியமான மசோதாவில் பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதா, குடியேற்றம் தொடர்பான முந்தைய நான்கு சட்டங்களுக்கு மாற்றாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மசோதா கட்டற்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

மசோதாவின் பிரிவு 3, குடியேற்ற அதிகாரிகளுக்கு மிதமிஞ்சிய அதிகாரங்களை வழங்குகிறது. அதில், சமநிலையை நிலைநிறுத்த வேண்டும். ஏனெனில் அது ஒருதலைப்பட்சமாகவோ அல்லது சார்பு நிலைக்கோ சென்றால், வெளிநாடுகளுடனான இருதரப்பு உறவுகள் பாதிக்கப்படும்.

ஒரு குடியேற்ற அதிகாரி அல்லது தலைமைக் காவலர் மட்டத்தில் உள்ள ஒருவருக்கு ஆவணங்களைத் தேடி ஆய்வு செய்து சோதனை நடத்தவும் இப்பிரிவில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் பிரிவு மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் .

தனி நபர் ஒருவர் குடியேற்றச் சட்டங்களை மீறுவதாக சந்தேகிக்கப்பட்டால், பிடியாணை இல்லாமல் அவர்களைக் கைது செய்ய குடியேற்ற அதிகாரிகளுக்கு இந்த மசோதா அதிகாரம் அளிக்கிறது. இதனால், தன்னிச்சையான தடுப்புக் காவல் மூலம் தனிப்பட்ட சுதந்திரம் பாதிப்படையும் என்று கவலைப்படுகிறேன்.

நமது குடிமக்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு கைவிலங்குகளுடன், சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு, மனிதாபிமானமற்ற, கண்ணியமற்ற முறையில் எவ்வாறு நாடு கடத்தப்படுகிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். இது தான் சர்வதேச அளவில் நம் நிலை.

ஜனவரி 2025 முதல், 636 இந்தியர்கள் அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். நாடு கடத்தப்பட்ட சீக்கியர்களின் தலைப்பாகைகள் கூட அகற்றுப்பட்டன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கூட நாடு கடத்தப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை. பயணத்தின் போது, கழிப்பறைக்குச் செல்வது, உணவு மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்ள அவர்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சட்டவிரோதமாக குடியேறியவர்களை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நாடுகடத்துவதற்கான சர்வதேச விதிகளை மீறி அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர்.

பிப்ரவரி 2025 முதல் வாரத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புடன் கைகுலுக்கியபோது, நாடு கடத்தப்பட்டவர்களின் கைகள் விலங்கிடப்பட்டிருந்தன. மேலும் மோடி அவர்கள் அமெரிக்காவில் இருந்த சமயத்திலோ அல்லது அதற்குப் பிறகோ ஒரு கண்டன வார்த்தை கூட தெரிவிக்கவில்லை. நமது இந்திய குடிமக்கள் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டபோது, இயற்கை நீதியின் அனைத்து அடிப்படை விதிமுறைகளுக்கும், சர்வதேச மரபுகளுக்கும் எதிராக ஒன்றிய அரசின் இந்த வகையான அணுகுமுறையை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

குடியுரிமை (திருத்த) சட்டம், இயற்றப்பட்டபோது, இலங்கையிலிருந்து குடியேறிய இந்தியர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம். தற்போதைய மசோதா, உள்நாட்டுப் போரின் போது ஈழம், இலங்கையிலிருந்து இந்தியா வந்துள்ள தமிழ் அகதிகளை ஒழுங்குபடுத்துவதையும் கருத்தில் கொள்ளவில்லை. மண்டபம் மற்றும் பிற அகதிகள் - மறுவாழ்வு முகாம்களில் சுமார் 90,000 தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக தவிக்கின்றனர். நீண்ட கால விசா வழங்குவதற்கு இரக்கமுள்ள மற்றும் நடைமுறை அணுகுமுறை மிகவும் அவசியம். ஏனெனில் அவர்கள் தங்கள் நாட்டில் நடைபெற்ற வன்முறை மற்றும் இன துன்புறுத்தல் காரணமாக கடவுச் சீட்டு இல்லாமல் தப்பி வந்து, இந்தியாவில் அகதிகளாக தங்கி உள்ளனர். நீண்ட கால விசாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து அளவுகோல்களையும் நிறைவு செய்கிறார்கள். அவர்களை சட்டவிரோத குடியேறிகள் என்று முத்திரை குத்தக்கூடாது. எனவே, 1986 செப்டம்பர் 23 அன்று வெளியிடப்பட்ட உள்துறை அமைச்சக உத்தரவை ரத்து செய்ய வேண்டும்.



எனவே, 40 ஆண்டுகளுக்கும் மேலாக முகாம்களிலும், வெளியிலும் தமிழ் அகதிகள் தவித்து வருவதால், அவர்களின் தற்போதைய சவால்களைப் போக்க, குடியுரிமைச் சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் இந்திய குடியுரிமை அல்லது நீண்ட கால விசாவுக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

## இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர்களுக்குத் தனி நாடு அமைந்திட ஆவன செய்வார்: மதுரை ஆதீனம்!

06.04.2025

இந்தியப் பிரதமர் கச்சத்தீவை மீட்டு, இலங்கைத் தமிழர்களுக்குத் தனி நாடு அமைந்திட ஆவன செய்வார் என மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இராமேஸ்வரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாம்பன் பாலத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்து மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள காணொளியிலேயே இலங்கைத் தமிழர்களுக்குத் தனிநாடு அமைந்திட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு தான் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளையும் பிரதமர் நிறைவேற்றியுள்ளதாக மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளமை, மீனவர்களின் படகுகள் மீட்கப்பட்டமை, உள்ளிட்டவை தான் பிரதமரிடம் முன்வைத்த கோரிக்கைகளாலேயே சாத்தியம் எனத் தேசிக சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் இந்தியப் பிரதமர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார் என அவர் சுட்டிக்காட்டினார்.

கச்சத்தீவைத் தாரைவார்த்தவர்களே இன்று அதை மீட்க வேண்டும் எனப் பேசி வருவதாகக் குறிப்பிட்ட மதுரை ஆதீனம் சுவாமிகள்,



இந்தியப் பிரதமர் கச்சத்தீவை மீட்டு, இலங்கைத் தமிழர்களுக்குத் தனி நாடு அமைந்திட ஆவண செய்வார் என மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

**புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்மையயொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக – மனித மலைகளாக – உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# ரூ.550 கோடியில் உருவான இராமேசுவர பாம்பன் புதிய ரயில் பாலம் திறப்பு

06.04.2025

பாம்பன் - மண்டபம் இடையே ரூ.550 கோடியில் கட்டப்பட்ட நாட்டின் முதல் செங்குத்து தூக்கு ரயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்தார்.



இந்தியாவுடன் ராமேசுவரம் தீவை இணைக்கும் வகையில் மண்டபம் கடற்கரையிலிருந்து, பாம்பன் கடற்கரை வரையிலும் கடலில் ரயில் பாலமும் அதன் நடுவே கப்பல் கடந்து செல்ல தூக்குப் பாலம் ஆங்கிலேயே ஆட்சி காலத்தில் கட்டப்பட்டு 24.02.1914ல் திறக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் நீளமான கடல் பாலம் ஆகும்.

பாம்பன் ரயில் தூக்குப் பாலத்தில் அடிக்கடி ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினைகள் மற்றும் விரிசல் விழுந்ததாலும், இந்த பாலம் அருகிலேயே புதிய ரயில் பாலம் கட்டும் பணிளுக்கு 2019 ஆண்டு ரயில்வே மானியக் கோரிக்கைகளின் போது பாம்பன் புதிய ரயில் பாலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.



01.03.2019-ல் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார். பின்னர் 11.08.2019ல் பாம்பனில் புதிய ரயில்வே பாலம் கட்டுவதற்காகப் பூமி பூஜையுடன் பணிகள் துவங்கின.

5 ஆண்டுகள் நடந்த பணி: ரயில்வே நிர்வாகம் 31.09.2021-க்குள் புதிய ரயில்வே பாலத்தின் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் பாம்பன் கடற்பகுதியில் அவ்வப்போது ஏற்படும் கடல் சீற்றம், புயல் உள்ளிட்ட வானிலை மாற்றம் மற்றும் கரோனா பரவலால் நிர்ணயிக்கப்பட்ட செப்டம்பர் 2021 -குள் பணிகளை முடிக்க முடியவில்லை, செப்டம்பர் 2024-ல் பணிகள் நிறைவடைந்தது.

ராமநவமி நாளான இன்று (ஞாயிற்றுக்கிழமை) பகல் 12 மணியளவில் இலங்கை பயணத்தை நிறைவு செய்து விட்டு மண்டபம் ஹெலிபேட் தளத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி வருகை தந்தார். அங்கிருந்து கார் மூலம் பாம்பன் சாலை பாலத்திற்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி ரூ.550 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கொடி அசைத்து வைத்து திறந்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது, பாம்பன் புதிய ரயில் பாலத்தில் மண்டபத்திலிருந்து புறப்பட்டு வந்த சிறப்பு ரயில் ராமேசுவரத்கு சென்றார்.

பின்னர் ரிமோட் மூலம் பிரதமர் நரேந்திர மோடி பாம்பன் புதிய ரயில் பாலத்தில் உள்ள செங்குத்து பாலத்தை மேலே உயர்த்தி கடலோர காவல்படைக்கு சொந்தமான கப்பல் பாம்பன் பாலங்களை கடந்து செல்வதையும், பாலத்தின் செயல்பாடுகளையும் பார்வையிட்டார்.



இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்விணி வைஷ்ணவ், மத்திய செய்தி ஒலிபரப்பு இணையமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்துசாமி தரிசனம் செய்வதற்காக கார் மூலம் பாம்பன்

# இலங்கை இராணுவத்தோடு பிரதமர் மோடி இராணுவ ஒப்பந்தம் கை.கோ கடும் கண்டனம்

07.04.2025

இலங்கை இராணுவத்தோடு இந்திய பிரதமர் நரேந்திரமோடி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை தமிழர்களிற்கு இழைக்கப் பட்ட பெரும்துரோகம் என மதிமுக பொதுசெயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார்



அறிக்கையொன்றில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கைக்கு அரசு முறை பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அந்நாட்டுஜனாதிபதி அனுரா திச நாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்.

மேலும் இந்தியா - இலங்கை இடையே ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

அதில் முக்கியமானது இந்தியா - இலங்கை பாதுகாப்பு ஒத் துழைப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.

இதன் அடிப்படையில் இந்திய இராணுவம் மற்றும் இலங்கை இராணுவத்திற்குமிடையே கூட்டு நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு ஒத்துழைப்பும் உதவியும் வழங்கும்.

இது இலங்கை அரசுடன் போடப்பட்டிருக்கும் முதல் இராணுவ புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

எங்கள் தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்கள் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் பேரை கொன்று குவித்தது இலங்கை இராணுவம்தான்.

ஆயிரக்கணக்கான தமிழ் பெண்களை பாலியல் வன்கொடு மைக்கு உள்ளாக்கி சிங்கள இராணுவம் கொன்றது.

தங்கள் மண்ணின் விடுதலைக்காக பல்லாயிரக்கணக்கான வீரர்களை பலி கொடுத்து தாயகத்தை மீட்பதற்குப் போராடிய விடுதலை இயக்கத்தைக் கருவறுத்தது சிங்கள இராணுவம்.

யுத்தக் களத்தில் போராடிய தமிழ் வாலிபர்கள் எட்டு பேரை நிர்வாணப்படுத்தி கைகளைக் கட்டி பின்னந்தலையில் சிங்கள இராணுவ வெறியர்கள் சுட்டுக் கொன்றதையும்

புலிகளின் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் இசைப்ரி யாவை பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கி சிதைத்து சின்னா பின்னமாக்கி சுட்டுக் கொன்றதையும் இங்கிலாந்தின் சேனல் -4 தொலைக்காட்சி வெளியிட்டு உலகின் மனசாட்சியை உலுக் கியது.



இந்தக் கொடூர காட்சிகளைக் கண்ட அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும்இ இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் களும் கண்ணீர் விட்டுக் கதறினர்.

இனப்படுகொலை நடத்திய சிங்கள இராணுவத்தை ஹேக் நகரில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரித்து தண்டிக்க வேண்டும் என்று தமிழ் இனம் போராடிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இலங்கை இராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது கடும் கண்டனத்திற் குரியது மட்டுமின்றி தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் கொடும் துரோகம் ஆகும்.

தமிழ் இனத்தை வஞ்சித்திருக்கும் பிரதமர் மோடிக்கு இலங்கை யின் உயரிய 'சிறீலங்கா மித்ர விபூஷன்' விருது வழங்கப்பட் டிருப்பதும் பொருத்தமானது என்றுதான் தமிழ் மக்கள் கருதுவார்கள்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**நாம் அரசியல்வாதிகளல்லர், நாம் புரட்சிவாதிகள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழக மருத்துவக் கல்லூரிகளில் வடக்கின் பகல் கொள்ளை!

## உலகத் தமிழர் பேரவையின் நிறுவனர் பழ. நெடுமாறன்

08.04.2025



நீட் தேர்விலிருந்து விலக்குக் கோரி தமிழகச் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சியினரின் ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மறுத்துவிட்டார். குடியரசுத் தலைவரின் இச்செயல் அரசியல் சட்டத்திற்கு முரணானது மட்டுமல்ல, மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதுமாகும். நாட்டின் கூட்டாட்சி முறைக்கு வேட்டு வைப்பதுமாகும்.

நாடு முழுவதிலும் மருத்துவக் கல்விக்கான நீட் முறைத் தேர்வைக் கடந்த காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்தது. ஆனால், தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. பா.ஜ.க. ஆட்சி பதவிக்கு வந்தபிறகு நீட் தேர்வைத் தமிழகத்தின் மீது திணித்துள்ளது.

தமிழகச் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசின் மூலம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் ஒன்றிய உள்துறையிலேயே இச்சட்டம் கிடப்பில் போடப்பட்டது. இது அப்பட்டமான சனநாயக உரிமை பறிப்போடு அரசியல் சட்ட மீறலுமாகும். இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க ஒன்றிய அரசு விரும்பாவிட்டால் அதைத் திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். அவ்வாறும் செய்யவில்லை. ஒப்புதலும் கொடுக்கவில்லை.

எனவே உச்ச நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி நீதி கேட்டு தமிழக மாணவர்களின் சார்பில் முறையீடு செய்யப்பட்டது. ஆனால், நீட் தேர்வின் அடிப்படையில் மட்டுமே மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்க முடியும் என உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணை தமிழக மாணவர்களின் தலைகளில் பேரிடியாக இறங்கியது.

தமிழக அரசின் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கு அதே பாடத் திட்டத்தில் நீட் தேர்வு நடத்தப்பட்டிருந்தால் அம்மாணவர்களும் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருக்க முடியும். ஆனால், சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின்படி கேள்வித்தாள்களைத் தயாரித்தால் மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்கள் எப்படி அதில் வெற்றிபெற முடியும்? நீட் என்னும் தேர்வு மட்டுமே மருத்துவப் படிப்பிற்கு அடிப்படை என்று சொன்னால் 12 ஆண்டுகளாக ஒரு மாணவன் பள்ளியில் படித்த படிப்பு வீண் என்பதுதானே பொருள். பத்தாம் வகுப்பில் ஒருமுறையும், பன்னிரண்டாம் வகுப்பில் மற்றொரு முறையும் அரசு நடத்தும் தேர்வுகளில் பங்கேற்று வெற்றிபெற்றாலொழிய அந்த மாணவர்கள் மேற்படிப்புகளுக்குக் கல்லூரிகளுக்குச் செல்ல முடியாது. இந்த நிலையில் தமிழ்நாட்டு மாணவர்கள் தங்களின் படிப்புத் தகுதியை ஒரு முறைக்கு இரண்டு முறை நிரூபித்தப் பிறகு மற்றொரு முறை நீட் தேர்வு என்பது தேவைதானா?

நீட் தேர்வு என்பது பள்ளிப் படிப்பை முக்கியமற்றதாக ஆக்கி, நீட் தேர்விற்கென இலட்சக்கணக்காண பணம் பெற்றுக்கொண்டு நடைபெறும் தனியார் பயிற்சிப் பள்ளிகளை ஊக்குவிக்கும் போக்காகும். ஏழை எளிய மாணவர்கள் மருத்துவம் படிக்கவே முடியாத நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. ஒலிம்பிக் விளையாட்டில் ஊக்க மருந்து அருந்திவிட்டுப் பங்கெடுப்பவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஆனால், இந்திய அரசு நீட் பயிற்சி என்ற ஊக்க மருந்தை உண்ணுமாறு மாணவர்களை வற்புறுத்துகிறது.

கல்வி முறையில் தேசிய அளவில் சமத்துவம் இல்லாதபோது, தேசிய அளவில் கல்வித் தகுதி பெறவேண்டும் என்பது நகை முரணாகும்.

தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வந்த மாணவர் சேர்க்கைத் திட்டமும் 69% இடஒதுக்கீடு நடைமுறையும் ஒடுக்கப்பட்ட, பிற்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறுவதற்கு உதவியாக இருந்தது. ஏழை, எளியவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி பிறந்தது.

தமிழகத்தில் மாநில அரசு பாடத்திட்டத்தின் கீழ் படித்த மாணவர்களுக்கு எதிர்காலத்தில் மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகளில் இடம் கிடைக்காது என்ற நிலை உருவாகி, அதன் விளைவாக மாணவர்கள் சி.பி.எஸ்.இ. திட்டத்திற்கு மாறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டுமானால், சமற்கிருத மொழியும் படிக்கவேண்டும் என்ற விதிமுறை வகுக்கப்பட்டிருந்தது. மருத்துவக் கல்விக்கும் சமற்கிருதத்திற்கும் என்ன தொடர்பு? பார்ப்பனரல்லாத மாணவர்கள் மருத்துவம் படிக்க மறைமுகமான தடை இதுவாகும். ஆனால், 1920ஆம் ஆண்டு நீதிக் கட்சியின் ஆட்சியில் சமற்கிருதம் படிக்கவேண்டும் என்பது நீக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள அரசு ஒதுக்கீடு இடங்களிலும் 4,270 மாணவர்களைச் சேர்க்கலாம். உச்சநீதிமன்றத்தின் ஆணையின் விளைவாக இவற்றில் குறைவான இடங்களே தமிழகப் பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்குக் கிடைக்கும். தமிழகத்தில் சி.பி.எஸ்.இ. மாணவர்கள் 15%க்கும் குறைவானவர்கள் என்பதால் பெரும்பாலான இடங்கள் பிற மாநில மாணவர்களுக்குக் கிடைக்கும். அவ்வாறு வந்துசேரும் பிற மாநில மாணவர்களில் உயர் சாதி மாணவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கைத் தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டும். குறிப்பாக, கல்வி அறிவில் மிகவும் பின்தங்கியிருக்கிற வடமாநிலங்களைச் சேர்ந்த மக்களில் வசதியும் வாய்ப்பும் பெற்ற மேல்சாதி மாணவர்களே பெரும்பாலும் அங்குக் கல்வி அறிவுப் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். ஏனெனில் அதற்கான வாய்ப்பும், வசதியும் அவர்களுக்கு மட்டுமே உண்டு. எனவே, அத்தகைய உயர் சாதி மற்றும் மேல்தட்டு மாணவர்களுக்காக நீட் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதோ என்ற ஐயம் எழுகிறது. தமிழ்நாட்டில் பிற்பட்ட, மிகப்பிற்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 69% இட ஒதுக்கீடு உள்ளது. இந்த இடஒதுக்கீட்டின்படி பிற மாநில மாணவர்கள் தமிழக மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது அவர்களது பொறுத்த வரையில் இடஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படவில்லையா? என்பதுபோன்ற கேள்விகளுக்கு விடை தேவை. தமிழக அரசு இதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுகிறேன். தமிழக அரசின் செலவில் பிற மாநில மாணவர்கள் படித்து மருத்துவப் பட்டம் பெற்று தமிழக மக்களுக்குத் தொண்டாற்ற மாட்டார்கள். அவரவர்களின் மாநிலங்களுக்குச் சென்று அந்த மக்களுக்குத் தொண்டாற்றுவார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் மருத்துவமனைகளிலும் உள்ள தமிழக மாணவர்களுக்கு மட்டுமே சொந்தமான இடங்களில் கணிசமான பகுதியை இந்திய அரசு பறித்துப் பிற மாநில மாணவர்களுக்குக் கொடுப்பது பகல் கொள்ளையாகும். நீட் தேர்வு என்கிற முறையில் இந்த நவீன கொள்ளையை இந்திய அரசு வெளிப்படையாக நடத்துகிறது. இந்த கொள்ளைக்கு முற்றுப் புள்ளி வைத்தாகப்படவேண்டும்.

நீட் தேர்வு முறை தொடருமேயானால் எதிர்காலத்தில் தமிழக மக்களுக்கு போதுமான அளவுக்கு மருத்துவர்கள் இல்லாத நிலைமை ஏற்படும். தமிழகத்திலுள்ள பிற்பட்ட, ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு என்றைக்கும் எட்டாத ஒன்றாகி விடும். தமிழ்வழிக் கல்வி என்பது அடியோடு குழிதோண்டிப் புதைக்கப்படும்.

புதுச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவக் கல்லூரி தனக்கென தனியான விதிமுறைகளை வகுத்துக்கொண்டிருக்கிறது. அதைப் போல ஆந்திர மாநிலத்தில் அரசியல் சட்டம் 371ஆவது பிரிவின்படி அம்மாநிலத்தைச் சேர்ந்த மாணவ - மாணவிகள் மட்டுமே மருத்துவக் கல்வி படிக்க முடியும். மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு படிக்க முடியாது. அதைப்போல தமிழகத்திலும் விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழகத்தில் உள்ள மாணவர்கள் மருத்துவர்களாகி தமிழக மக்களுக்குத் தொண்டாற்ற முடியும்.

இந்தியாவில் அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் அதிக எண்ணிக்கையிலான மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள், மருத்துவர்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழகம் திகழுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள் உயர் மருத்துவத்திற்கு மேனாடுகளை மிக்கப் பொருட் செலவில் தேடிச் செல்கிற நிலை மாறி, அந்நாடுகளைச் சேர்ந்த மக்கள் தமிழகத்தைத் தேடி வருகிறார்கள். இந்தப் பெருமைக்கு நீட் தேர்வு முறையால் பங்கம் ஏற்படும். தமிழகத்தில் மருத்துவத் துறையின் வளர்ச்சி குன்றும்.

மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டதற்கே அந்த அந்த மாநில மொழிகள், அந்தந்த மாநிலங்களில் பயிற்சி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்கப்பட வேண்டும். தங்களின் மொழி, வரலாறு, இலக்கியம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் தங்களது கல்வித் திட்டங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் முக்கியமான காரணமாகும். ஆனால் இதை மனதில் கொண்டுதான் மாநிலப்பட்டியலில் கல்வியை அரசியல் சட்ட சிற்பிகள் வைத்தார்கள். ஆனால், மேற்கண்ட நோக்கங்களை அடியோடு சிதைக்கும் வகையில் மாநிலப் பட்டியலிலிருந்த கல்வி பொதுப் பட்டியலுக்கு 1976ஆம் ஆண்டு அவசர நிலை காலத்தில் மாற்றப்பட்டது. இதன் விளைவாக மாநிலங்களின் கல்வித் துறையில் ஒன்றிய அரசின் தலையீடு என்பது நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றுதான் நீட் தேர்வுத் திட்டமாகும். மாநிலத்தில் கல்விக்கு என்று தனியான அமைச்சரும், துறையும் அமைந்திருக்கும்போது மத்தியில் ஒரு கல்வி அமைச்சரும், துறையும் இருக்க வேண்டிய அவசியம் என்ன? இந்தியா போன்ற பல்வேறு மொழி பேசுகிற மக்கள் வாழ்கிற நாட்டில் ஒரே மாதிரியான கல்வி என்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகும். அவ்வாறு ஆக்குவதற்குச் செய்யப்படும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை.

**புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பையொத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக – மனித மலைகளாக – உறுதியோடு நின்ற மாவீரர்களை, நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.ca**

# உலக செய்திகள்

# காசாவில் ஒரே இரவில் 404 பேரைக் கொன்று குவித்த இசுரவேல்

## காசா சுகாதார அமைச்சகம்

02.04.2025

ரஷ்யா தனது இராணுவத்தின் அளவை விரிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில், ஜனாதிபதி விளாடிமிர் புடின் 18-30 வயதுடைய 160,000 ஆண்களை அழைத்துள்ளார். இது 2011 க்குப் பின்னர் ரஷ்யாவின் அதிகபட்ச எண்ணிக்கையிலான கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பு ஆகும்.



ரஷ்யா தனது இராணுவத்தின் ஒட்டுமொத்த அளவை கிட்டத்தட்ட 2.39 மில்லியனாகவும், செயலில் உள்ள படைவீரர்களின் எண்ணிக்கையை 1.5 மில்லியனாகவும் அதிகரிக்க வேண்டும் என்று புடின் கூறிய பல மாதங்களுக்குப் பின்னர், ஒரு வருட இராணுவ சேவைக்கான வசந்த கால அழைப்பு வந்தது.

அது வரும் மூன்று ஆண்டுகளில் 180,000 அதிகரிப்பாகும்.

ரஷ்யா தனது “சிறப்பு இராணுவ நடவடிக்கை” என்று அழைப்பதற்காக உக்ரைனில் போரிட புதிய கட்டாயப் படைவீரர்கள் அனுப்பப்பட மாட்டார்கள் என்று துணை அட்மிரல் விளாடிமிர் சிம்லியான்ஸ்கி கூறினார்.

இருப்பினும், ரஷ்யாவின் எல்லைப் பகுதிகளில் நடக்கும் சண்டையில் கட்டாய இராணுவச் சேவையாளர்கள் கொல்லப்பட்டதாகவும், முழு அளவிலான போரின் ஆரம்ப மாதங்களில் அவர்கள் உக்ரைனில் சண்டையிட அனுப்பப்பட்டதாகவும் செய்திகள் வந்துள்ளன.

ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் நடைபெறும் தற்போதைய வரைவு, போரில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சித்த போதிலும் வருகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை இருதரப்பு யுத்தமும் ஓய்ந்த பாடில்லை, தெற்கு நகரமான கெர்சனில் உள்ள ஒரு மின் நிலையத்தின் மீது ரஷ்ய தாக்குதல் 45,000 மக்களை மின்சாரம் இல்லாமல் தவிக்கச் செய்ததாக உக்ரைன் கூறியது.

உக்ரைனுடனான அமெரிக்காவின் மத்தியஸ்த போர் நிறுத்தத்தை ரஷ்யா நிராகரித்த போதிலும், உக்ரைனின் எரிசக்தி வசதிகளைத் தாக்குவதை நிறுத்த ஒப்புக்கொண்டதாகக் கூறுகிறது. அந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மாஸ்கோ மீறியதை மறுக்க வெளிப்படையாக முயற்சிக்கும் வகையில், உக்ரைனிய ட்ரோன்கள் இடைநிறுத்தப்படுவதற்கான சிறிய அறிகுறியுடன் தாக்குதல்களை நடத்தியதாக புடினிடம் கூறியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யா வசந்த காலத்திலும் இலையுதிர் காலத்திலும் கட்டாய இராணுவ சேவைக்கு அழைப்பு விடுக்கிறது, ஆனால் 160,000 இளைஞர்களின் சமீபத்திய வரைவு 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட 10,000 அதிகமாகும்.

கடந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து, அதிகபட்ச வயதை 27 லிருந்து 30 ஆக உயர்த்துவதன் மூலம், வரைவில் சேரக்கூடிய இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் மூலம் வழங்கப்படும் அழைப்பு அறிவிப்புகளுடன், ரஷ்யாவின் இளைஞர்கள் அரசு சேவைகள் வலைத்தளமான Gosuslugi இல் அறிவிப்புகளைப் பெறுவார்கள்.

மாஸ்கோவில், ஏப்ரல் 1 ஆம் திகதி mos.ru நகர வலைத்தளம் வழியாக அழைப்புகள் ஏற்கனவே அனுப்பப்பட்டதாக செய்திகள் வந்தன.

ரஷ்யாவும் ஏராளமான ஆண்களை ஒப்பந்த வீரர்களாக அழைத்துள்ளது மற்றும் வட கொரியாவிலிருந்து ஆயிரக்கணக்கான வீரர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது.

பிப்ரவரி 2022 இல் உக்ரைனைக் கைப்பற்ற துருப்புக்களுக்கு உத்தரவிட்டதிலிருந்து புடின் இராணுவத்தின் அளவை மூன்று முறை அதிகரித்துள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம், டிசம்பர் 2023 இல் இராணுவத்தின் அளவு அதிகரிப்பை உக்ரைனில் நடக்கும் போர் மற்றும் நேட்டோவின் தொடர்ச்சியான விரிவாக்கம் ஆகிய இரண்டிலிருந்தும் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களுடன் தொடர்புபடுத்தியது.

ரஷ்யாவின் உக்ரைன் படையெடுப்பின் நேரடி விளைவாக, பின்லாந்து மற்றும் ஸ்வீடனை உள்ளடக்கியதாக நேட்டோ விரிவடைந்துள்ளது.

ரஷ்யாவுடனான நேட்டோவின் மிக நீளமான எல்லையை பின்லாந்து கொண்டுள்ளது, இது 1,343 கிமீ (834 மைல்) ஆகும், மேலும் பிரதமர் பெட்டேரி ஓர்போ செவ்வாயன்று தனது நாடு ரஷ்யாவின் அண்டை நாடுகளுடன் சேர்ந்து பணியாளர் எதிர்ப்பு கண்ணிவெடிகளை தடை செய்யும் ஒட்டாவா மாநாட்டில் இருந்து விலகுவதாகக் கூறினார்.

ரஷ்யாவின் இராணுவ அச்சுறுத்தல் காரணமாக போலந்து மற்றும் பால்டிக் நாடுகள் இரண்டு வாரங்களுக்கு முன்பு இதே போன்ற முடிவுகளை எடுத்தன.

இராணுவ ஆலோசனையின் அடிப்படையில் மீண்டும் பணியாளர் எதிர்ப்பு கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகவும், பின்லாந்து மக்கள் கவலைப்பட ஒன்றுமில்லை என்றும் ஓர்போ கூறினார்.

# உலகளாவிய வரிகளை கடுமையாக்குவதாக அறிவித்தார் அமெரிக்க ஜனதிபதி டொனால்ட் டிரம்ப்

02.04.2025

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட டிரம்ப் உலகளாவிய வரிகளை அறிவித்தார். இந்த நாளை அவர் விடுதலை நாள் என்று அழைக்கிறார்.

உலகெங்கிலும் உள்ள நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதிக்கப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகை ரோஸ் கார்டனில் ஆற்றிய உரையில்:-

டிரம்ப் ஒரு நிர்வாக உத்தரவில் கையெழுத்திடுவதாகக் கூறினார். அது அமெரிக்காவின் தொழில்துறை மறுபிறவி எடுக்கும் நாளைக் குறிக்கும் என்றும், தனது திட்டம் அமெரிக்காவை மீண்டும் செல்வந்தராக்கும் என்றும் கூறினார்.

அவர் கட்டணத் திட்டத்தை பொருளாதார சுதந்திரத்தின் அறிவிப்பு என்றும் வளத்தை நோக்கிய நமது முறை என்றும் அழைத்தார்.

அவர்கள் எங்களுக்கு வரி விதிக்கிறார்கள் செய்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு வரி விதிக்கிறோம் என்று டிரம்ப் கூறினார்.

அமெரிக்கா தனது தொழில்கள் மீது விதிக்கப்படும் வரிகளிலிருந்து மட்டுமே தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது என்பதை விளக்கினார்.

தாய்லாந்து, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், தென் கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் அமெரிக்காவை பொருளாதார ரீதியாக மோசமாக நடத்தியதாக டிரம்ப் கடுமையாக சாடினார்.

பல சந்தர்ப்பங்களில் நண்பன் எதிரியை விட மோசமானவன் என்று டிரம்ப் கூறினார். அந்த நாடுகளில் பல அமெரிக்காவின் பாரம்பரிய நட்பு நாடுகள் என்பதை ஒப்புக்கொண்டார்.

ஆட்டோமொபைல் தொழிலாளர்கள் துறையைச் சேர்ந்த பல தொழிற்சங்க உறுப்பினர்களை டிரம்ப் அழைத்தார். அவர்களில் ஒருவரை அமெரிக்காவில் கார் உற்பத்தியின் நிலை குறித்து பேச மேடைக்கு அழைத்தார். வெளிநாட்டுத் தயாரிப்பு ஆட்டோமொபைல்களுக்கு 25% வரிகளை டிரம்ப் அறிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 20% வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

ஆசிய நாடுகள் மற்றும் பாரம்பரிய நட்பு நாடுகளான ஜப்பான் 24%, தென் கொரியா 25% மற்றும் தைவான் 46% விகித வரியையும் அறிவித்தார்.

சீனாவுக்கு 34% வரியை அறிவித்தார். இந்த எண்ணிக்கை சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் ஏற்கனவே விதிக்கப்பட்ட 20% வரிகள் மற்றும் எஃகு மற்றும் அலுமினியம் மீதான 25% வரிகளுக்கு மேல் வருகிறது, மேலும் அவற்றை கிட்டத்தட்ட $150 பில்லியன் (€138 பில்லியன்) மதிப்புள்ள கீழ்நிலைப் பொருட்களாக நீட்டித்தது.

டி மினிமிஸ் என்று அழைக்கப்படும் சீனாவிலிருந்து வரி இல்லாத குறைந்த மதிப்புள்ள பொருட்களை அனுப்பப் பயன்படுத்தப்படும் வர்த்தகத்தை மூடும் மற்றொரு நிர்வாக உத்தரவிலும் டிரம்ப் கையெழுத்திட்டார்.

விலக்கு அளிப்பதை முடிவுக்குக் கொண்டுவருவது என்பது மின்வணிக நிறுவனங்கள் அதிக ஆய்வுக்கு உள்ளாக்கப்படுவதைக் குறிக்கிறது, மேலும் டெமு அல்லது ஷீன் போன்ற தளங்கள் மூலம் தற்போது இறக்குமதி செய்யப்படும் சில பொருட்கள் இனி அமெரிக்காவிற்குள் அனுமதிக்கப்படாமல் போகலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

டிரம்ப் காட்டிய புதிய கட்டண விகிதங்களின் பட்டியல் பின்வருமாறு.

அல்ஜீரியா 30%, ஓமான் 10%, உருகுவே 10%, பஹாமாஸ் 10%, லெசோதோ 50%. உக்ரைன் 10%, பஹ்ரைன் 10%, கத்தார் 10%, மொரிஷியஸ் 40%, பிஜி 32%, ஐஸ்லாந்து 10%, கென்யா 10%, லிச்சென்ஸ்டீன் 37%, கயானா 38%, ஹைதி




10%, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா 35%, நைஜீரியா 14%, நமீபியா 21%, புருனே 24%, பொலிவியா 10%, பனாமா 10%, வெனிசுலா 15%, வடக்கு மாசிடோனியா 33%, எத்தியோப்பியா 10%, சன்னா 10%

அமெரிக்க பரஸ்பர கட்டணங்கள்:

சீனா 34%, ஐரோப்பிய ஒன்றியம் 20%, வியட்நாம் 46%, தைவான் 32%, ஜப்பான் 24%, இந்தியா 26%, தென் கொரியா 25%, தாய்லாந்து 36%, சுவிட்சர்லாந்து 31%, இந்தோனேசியா 32%, மலேசியா 24%, கம்போடியா 49%, ஐக்கிய இராச்சியம் 10%, தென்னாப்பிரிக்கா 30%, பிரேசில் 10%, வங்காளதேசம் 37%, சிங்கப்பூர் 10%, இஸ்ரேல் 17%, பிலிப்பைன்ஸ் 17%, சிலி 10%, ஆஸ்திரேலியா 10%, பாகிஸ்தான் 29%, துருக்கி 10%, இலங்கை 44%, கொலம்பியா 10%, பெரு 10%, நிகரகுவா 18%, நோர்வே 15%, கோஸ்டா ரிகா 10%, ஜோர்டான் 20%, டாமினிகன் குடியரசு 10%, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 10%, நியூசிலாந்து 10%, அர்ஜென்டினா 10%, ஈக்வடார் 10%, குவாத்தமாலா 10%, ஹோண்டுராஸ் 10%, மடகாஸ்கர் 47%, மியான்மர் (பர்மா) 44%, துனிசியா 28%, கஜகஸ்தான் 27%, செர்பியா 37%, எகிப்து 10%, சவுதி அரேபியா 10%, எல் சால்வடோர் 10%, கோட் டி“ஐவரி 21%, லாவோஸ் 48%, போட்ஸ்வானா 37%, டிரினிடாட் மற்றும் டொபாகோ 10%, மொராக்கோ 10%.

# சிறீலங்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம்

## சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிரிதி சிங்

08.04.2025

உள்நாட்டு ஆயுத மோதலின் போது இடம்பெற்ற குற்றங்களிற்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றிற்கு முடிவை காண்பதற்கும் உதவும் என்பதால்,இலங்கை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதியமைச்சர் ஹர்சனநாணயக்காரவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிராந்திய இயக்குநர் ஸ்மிரிதி சிங் இதனை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் அமர்வில் இலங்கை எடுத்துள்ள நிலைப்பாடு குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள், அல்லது சர்வதேச மனித மனிதாபிமான சட்டங்கள் பாரிய அளவில் மீறப்பட்டமை தொடர்பில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தகவல் மற்றும் ஆதாரங்களை சேகரித்து, ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்து பாதுகாத்தலிற்கான ஆணையை கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டத்தை நிராகரித்தமை குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இலங்கையின் உள்நாட்டு மோதலின் போது பாதிக்கப்பட்ட இலங்கையர்களிற்கு நீதியை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஆணையாளர் அலுவலகத்துடன் ஆக்கபூர்வமான விதத்தில் இணைந்து செயற்படவேண்டும்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கவேண்டும்.

உள்நாட்டு ஆயுத மோதலின் போது இடம்பெற்ற குற்றங்களிற்கு நீதியை வழங்குவதற்கும் அவற்றிற்கு முடிவை காண்பதற்கும் உதவும் என்பதால், இலங்கை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொள்வது அவசியம்.

இலங்கை இன்னமும் சர்வதேச குற்றங்களை அதன் உள்நாட்டு சட்ட கட்டமைப்பிற்குள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் , செயற்பாட்டாளர்கள், நீதியை நாடும் போது துன்புறுத்தலை எதிர்கொள்வது உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதி செய்யவேண்டும்.



# 90 நாட்களுக்கு விதிக்கப்பட்ட வரிகள் இடைநிறுத்தம்: ஆனால் சீனாவுக்கு இல்லை

## அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்

10.04.2025

உலகளாவிய சந்தை சரிவை எதிர்கொண்ட நிலையில் பெரும்பாலான நாடுகள் மீதான தனது வரிகளை 90 நாட்களுக்கு திடீரென பின்வாங்குவதாக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவித்தார்.

ஆனால் சீனாவுக்கு விதிக்கப்பட்ட வரிகள் நிறுத்தப்படவில்லை. அந்த வரிகள் மேலும் 125% உயர்த்தப்பட்டுள்ளதை டிரம் அறிவித்தார்.

இதற்கிடையில், எஃகு மற்றும் அலுமினிய இறக்குமதிகள் மீது முன்னர் அறிவிக்கப்பட்ட வரிக்கு பதிலளிக்கும் விதமாக, அமெரிக்காவிற்கு எதிரான அதன் பழிவாங்கும் வரிகளைத் தொடர ஐரோப்பிய ஒன்றியம் முன்னதாக ஒப்புக்கொண்டது. இருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து அனைத்து இறக்குமதிகளுக்கும் 20% என்ற டிரம்பின் சமீபத்திய அறிவிப்புக்கு பிரஸ்ஸல்ஸ் இன்னும் பதிலளிக்கவில்லை.

அமெரிக்காவின் சுமார் 60 வர்த்தக பங்காளிகள் மீது வரிகள் விதிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பின்னர், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்ததால் உலகளாவிய 10% குறைக்கப்பட்ட பரஸ்பர கட்டணத்தை அங்கீகரிப்பதாக டிரம்ப் கூறினார்.

அதே நேரத்தில், சீனாவிலிருந்து வரும் பொருட்களுக்கான வரிகளை 125% ஆக உயர்த்தினார். அமெரிக்க இறக்குமதிகளுக்கு 84% வரிகளை விதிப்பதாகக் கூறி பதிலடி கொடுத்த பின்னர் இந்த அறிவிப்பை டிரம்ப் அறிவித்தார். அத்துடன் மரியாதை இல்லாதது சீனாவைக் குற்றம் சாட்டினார்.

ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் சமீபத்திய வரி அறிவிப்புக்கு எதிர்வினையாக, வர்த்தகத்தின் கடைசி மணிநேரத்தில் அமெரிக்க பங்குச் சந்தைகள் உயர்ந்தன. முக்கிய பங்குச் சந்தை சராசரிகளான நாஸ்டாக், எஸ் அண்ட் பி மற்றும் டவ் ஜோன்ஸ் அனைத்தும் உயர்ந்தன.



# பட்டினியில் வாடும் காச குழந்தைகள் உதவிப்பொருட்கள் அனைத்தையும் தடுத்த இசுரவேல்...!

## ஐ.நா. எச்சரிக்கை

12.04.2025

இசுரவேல் தாக்குதல் நடத்திவரும் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் குறைந்தது 60,000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக உடல்நல சிக்கல்களுக்கு ஆளாக நேரிடும் என்று காசா சுகாதார அமைச்சகம் எச்சரித்துள்ளது. ஏனெனில் காசாவுக்குள் வரும் அனைத்து மனிதாபிமான உதவிகளையும் இசுரவேல் தொடர்ந்து முடக்கி வருகிறது.




மார்ச் 2 முதல், எந்த மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்லும் வாகனங்களும் காசாவிற்குள் நுழையவில்லை. 23 இலட்சம் மக்களுக்கு உணவு, மருந்து, தண்ணீர் மற்றும் எரிபொருள் விநியோகத்தை இசுரவேல் நிறுத்தியுள்ளது. 21 ஊட்டச்சத்து மையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும், நூற்றுக்கணக்கான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சையை சீர்குலைத்துள்ளதாகவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்ட அமைப்பு, மூன்று வாரங்களுக்கும் மேலாக காசாவிற்கு புதிய பொருட்களை கொண்டு வர முடியவில்லை என்று கூறியுள்ளது. காசாவில் தற்போதுள்ள இருப்புக்கள் இன்னும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே இருக்கும், இதனால் இலட்சக்கணக்கானோர் கடுமையான பசியின் அபாயத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், காசாவின் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசிகள் உள்ளிட்ட அத்தியாவசிய தடுப்பூசிகளும் மறுக்கப்படுகின்றன. இது சுகாதார நெருக்கடியை மோசமாக்குகிறது. UNRWA செய்தித் தொடர்பாளர் ஜூலியட் டூமா கூற்றுப்படி, “குழந்தைகள் பசியுடன் தூங்கப் போகிறார்கள். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் வெகுஜன பட்டினிக்கு ஒரு படி நெருக்கமாக உள்ளது.”

மற்றொரு அடியாக, இசுரவேலின் மெகோரோட் நிறுவனம் காசாவின் 70% நீர் விநியோகத்தை துண்டித்தது. மீண்டும் நீர் வழங்கப்படாவிட்டால் ஒரு பேரழிவு தரும் நீர் நெருக்கடி ஏற்படும் என்று காசா அதிகாரிகள் கூறுகின்றனர்.



இதற்கு மத்தியில் இசுரவேலின் கொடிய வான்வழித் தாக்குதல்களால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவது குழந்தைகள் மீது எதிர்மறையான அதீத அழுத்தத்தை ஏற்படுத்தி வருகிறது.

www.sangathamil.ca







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# அன்னை பூபதியின் தியாகம் உலக வரலாற்றில் ஒப்பற்றது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
19.04.1990

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து, எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரணப் பற்று உறவுகளைத் துறந்து தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது. உலக வரலாற்றிலே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தைக் தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழ தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனாலேதான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக – இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்ட எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்பு முனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாராதூரமானதென்றால், மிகவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன்முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.
எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான போர் ஏவிவிடப்பட்டபோது, எமக்காகக் குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணைபோயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணையவிடாது போராடினோம். இறுதியில் நாம் வெற்றி கண்டோம். இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம் தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

இந்த வெற்றியானது – தமிழீழ மக்களாகிய உங்கள் வெற்றி – உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி – உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு, இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்ட எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில் இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த எமது தியாகிகளையும் மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைத் செலுத்துவோமாக.

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

அன்னை பூபதியின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு
(19.04.1990 தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் விடுத்த அறிக்கை )


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ
25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu



# இது போராடும் பூமி... புலிகளின் காலம்... பிரபாகரன் வழிகாட்டி!

இன்றும் எங்கள் வானத்தில்
வெள்ளிநிலவு பாலை அள்ளித்தான் சொரிகிறத.
வீண்மீன்கள் கண்தூங்கவில்லை.
இலுப்பைமரம் பூத்துக் கொட்டுகிறது.
அழக்கிணறேதும் ஊற்றடைத்துப் போகவில்லை.
குண்டும் குழியுமான பாதையெனிலும்
இன்றும் பயணம் நடக்கிறது.
இது தமிழீழம்.
எல்லாம் நடக்கும்.
விஜேதுங்காவுக்கு ஒரு வினா
உன்னால் முடியுமா தம்பி?
நாங்கள் வேரிலிருந்தே முளைவிடும் சாதி.
எங்கள் கூட்டிக்குவித்து தீயிடு
மறுநாள் சாம்பலிலிருந்து பிறப்போம்.
வெட்டிச் சரித்துப் புதைத்திடு
மூன்றாம் நாள் எங்கள் முகம் தெரியும்.
இது தமிழ்ச்சாதி.
இங்கே
குண்டு சுமந்து வானூர்தி வட்டமிடும்.
குழிகள் தேடி எவரும் ஒடுவதில்லை.
போட்டு விட்டு "புக்காரா" போகும்.
புழுதியைத் தட்டிவிட்டு
அந்த இடத்திலேயே மீண்டும் பாய்விரிப்போம்.
சிதறிப் போன சுவரின் கற்களை எடுத்தே
அடுப்பு மூட்டி சமையல் தொடங்குவோம்.
விஜேதுங்கா!
என்னடா பொடியா செய்யப் போகிறாய்?
இது தமிழச் சாதி.
தீக்குளித்தும் தோல்கருகாச் சாதி.
கண்களினால் சுவாசித்து
மூக்கினால் பார்க்கும் வித்தியாசமானவர்கள்.
மலைகள் இல்லையென்று நாங்கள் தளரவில்லை.
ஆறுகளில்லை என்று அந்தரித்துப் போகவில்லை.
ஆழக் கிணறுவெட்டி நீரள்ளிக் குடிக்கின்றோம்.
ஆக மூன்று மாதங்களே இங்கு மழைபொழியும்.
என்றாலும் பச்சை நிறத்தில் தான்
எங்கள் மண் பாவாடை கட்டியுள்ளது.
இது தமிழச்சாதி
தெருப்புழுதியில் கயிறு திரித்து
தேரிழுக்கும் சாதி.
அப்பு விஜேதுங்கா!
என்னசெய்யும் உத்தேசம்
படைகளை நடத்தி தடகளப் போட்டியா?
நல்லது; நாளை சந்திப்போம்.
வெற்றிக் கம்பத்தைத் தொட்டபின்
வெள்ளிக் கிண்ணத்துடன் பேசுவோம்.
எதிரியை வாவென்று கடிதம் எழுதியாச்சு
தமிழனே! நீ என்ன செய்கின்றாய்
பூச்செடிகளுக்கு முள்ளும்,
பறைவகைளுக்குச் சொண்டும்,
மிருகங்களுக்குக் கொம்பும் ஏன் கொடுக்கப்பட்டது?
போராட வழங்கிய போர்க்கருவிகள் அவை.
"அழிக்கவருபவனை அழித்துவிடு"
கீதையின் சாரமே இதுதான்.
நிமிர்ந்து நிற்பவையே நிலைக்கும்.
விழுந்து கிடப்பன யாவும் மதிக்கப்படும்.
தலைநிமிர்ந்த பனைகளைத் தறிக்கக்கூடாது.
சட்டமே வந்துவிட்டது.
ஆனால்...
முல்லைக்கொடியை மதிக்கக் கூடாது என்று
ஏன் எவரும் குரலெழுப்பவில்லை?
காலில் விழுந்து கிடப்பவைகளை
எவரும் கணக்கெடுத்துக் கொள்வதில்லை.
அதனால் தான்.
மனிதர்களுக்கும் இது பொருந்தும்.
தமிழனே!
மணிமுடிதரித்த உன் தலையில்
வெய்யிலுக்குத் தொப்பி போடவும் வெட்கப்படுகின்றாய்.
ஏழுகுதிரைகள் பூட்டிய தேரில் உலாவந்தவனே!
அச்சுமுறிந்த சைக்கிள்தானும் உன்னிடம் இல்லையா?
ஊருக்கெல்லாம் துணி நெய்து கொடுத்தவனே!
கோமணத்துண்டுக்கும் வழியற்றுப் போனாயா?
வாழும் வழிகள் ஆயிரம் சொன்னவனே!
ஆளும் உரிமையை மட்டும் யாரிடம் கொடுத்தாய்.
கொம்பும், முரசும், பேரிகையும் எங்கே?
கவசமும், வேலும், கைவாளும் எங்கே?
இவற்றையெல்லாம் எறிந்து விட்டு
அன்னதானமடத்தில் என்னடா செய்கிறாய்?
இந்தமண்ணில் உனக்கொரு வரலாறு வேண்டும்.
இருந்தாய், வாழ்ந்தாய் என்பதற்கு
அடையாளம் வேண்டும்.
உன் தலைமுறைக்கு ஒரு சரித்திரம் இருக்கட்டும்.
உயிர் என்ன உயிர்
அதைக் காட்டு பார்க்கலாம்.
உருவமற்ற ஒன்றுக்காக ஏன் அச்சப்படுகின்றாய்.
எத்தனை காலம் வாழ்ந்தாய் என்பதில்
பெருமை கிடையாது.
எப்படி வாழ்ந்தாய் என்பதே மகிமைக்குரியது.
குறவணன் புழுவும், கும்புடுபூச்சியும் கூட
பூமியிலதான் வாழ்கின்றன.
யார்தான் கணக்கில் எடுத்தார்கள்?
போருக்கு வாவென்று
எதிரிக்குக் கடிதம் போட்டாச்சு.
நீ புறப்படு.
பீளைசாறிய கண்களைத் திறந்துபார்.
பாயைச் சுருட்டி அசைவிலே போடு.
தாயிடம் விடை பெறு.
உன் தங்கை எங்கே?
உனக்குமுன் அவள் களத்துக்குப் போய்விட்டாள்.
வெளியே பார் வெய்யில் அடிக்கிறது.
இது போராடும் பூமி...
புலிகளின் காலம்...
பிரபாகரன் வழிகாட்டி!

-உலைக்களம் வியாசன், சித்திரை 1994




# கருவேங்கைகள் பயணம் 24.03.2000

வழமைக்கு மாறான செயற்பாடுகள், என்றும் இல்லாத முகமாற்றங்கள், நின்று கதைப்பதற்கோ, இருப்பதற்கோ நேரமில்லாது கெதியாய் கழிந்தது பொழுது. எல்லாம் அன்று மாற்றமானதாகவே இருந்தது. ஒவ்வொரு கரும்புலி வீரரும் தன்னையும் தான் கொண்டுசெல்லவேண்டிய ஆயுத தளவாடங்களையும் இறுதி நேரம் தயார்ப்படுத்துவதில் மிக மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களிற்கு ஏதோ ஒரு உணர்வு திரும்பத் திரும்ப அவர்களை நிறைவுபடுத்திக்கொண்டிருந்தது. அவர்களிற்காக வந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைக்கூட கவனிக்காது தாங்கள் கொண்டு போகும் பொருட்சளிற்கு நீர்க்காப்பு போடுவதிலும் அவற்றை சரியா என்று தேர்வாய்வதிலும் அக்கறை கொண்டிருந்தார்கள். 24-03-2000 அன்றைய பகற்பொழுது இப்படித்தான் அவர்களிற்குக் கழிந்தது.

பொழுது மங்கத் தொடங்கிய வேளை அவர்கள் தங்களிற்கான பொருட்களோடு புறப்படத் தயாரானார்கள், பாரம் சற்று அதிகமனதாய் இருந்தது. ஒவ்வொருவரும் தங்களிற்கு வழங்கப்பட்ட வெடிபொருட்களைவிட மேலதிகமாகவும் சில வெடிபொருட்களை கொண்டு சென்றனர். எத்தனை இரவுகள் இப்படியான எதிர்பார்ப்புகளுடனும், ஆவலுடனும் அவர்கள் வேவுக்காக திரிந்திருப்பார்கள். அவர்களின் அந்த தேடல் முயற்சியிலே எத்தனை தோழர்களை அவர்கள் இழக்க நேர்ந்திருக்கிறது. எத்தனை நாட்கள் ஒருதுளி தண்ணீர் கூட இல்லாமல் அவர்கள் அதற்காக அலைந்திருப்பார்கள். எல்லாம் அவர்களின் நினைவில் நிழலாடுவதாய் இருந்தது.

“எங்கட கையால் “சாஜ்“ கட்டி “ஆட்டி“ உடைக்கோணும், எத்தனையோதரம் சந்தர்ப்பம் வந்து நழுவிற்றுது, இனியொருக்காவரும் அந்த சந்தர்ப்பத்தில் “ஆட்டி“யை உடைச்சு அண்ணை நினைக்கிறதை செய்து காட்ட வேணும்.” இப்படி ஒவ்வொருவரின் ஆழமான உணர்வும், காற்று அவர்களோடு பேசுவதாய் உணர வைத்தது. அவர்கள் அத்தனை பாரங்களோடும் ஒவ்வொருவரிடமும் விடைபெற்றுக் கொண்டிருந்தார்கள். “நாங்கள் போறம், இந்த முறை எப்படியும் நினைச்சத செய்து முடிப்பம் இல்லாட்டி….” சிரித்தார்கள். எல்லோரும் ஒரே பொருளோடு சிரித்தார்கள். கைகுலுக்கினார்கள், கட்டித்தழுவினார்கள். ”ஒவ்வொருவற்ற காதுக்கும் நிச்சயமா வெற்றிச் சேதிவரும்” என்று மூச்சைப் பேச்சாக்கினார்கள்.




அவர்களின் பார்வை வானத்தையோ அல்லது பூமியை நோக்கியபடி இறுதியாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரது கால்களும் இலக்கை நோக்கி நடப்பதற்காக குறுகுறுத்தன. வெற்றிலைக்கேணிக் கடற்கரையிலிருந்து அவர்களின் பயணம் ஆரம்பமானது. சிறிய படகுகள் அலைகளில் ஓசையின்றி இருளோடு இருளாகப் புறப்பட்டன.

வானவிளிம்பு, உயர்ந்த பெருத்த தென்னந்தோப்புக்களையும், அடர்ந்த மரங்களையும், வெளிகளையும் பிரித்துக் காட்டியது. வெள்ளிகளின் மங்கிய வெளிச்சம் வானத்திலும் ஓலைக் குடிசைகள் இருப்பது போலவும், அந்த குடிசைகளின் துவாரங்களினாலேயே இந்த ஒளி கசிவதாகவும் தெரிந்தது. படகு மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டிருத்தாலும் அவர்களின் இதயம் வேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது. திட்டம், நகர்வு, தாக்குதல் என்று ஒவ்வொன்றையும் சுரம்மாறாது நினைவுகள் அசைபோட்டன.

தாழையடி படைத்தளத்திலிருந்து கடற்கரையை நோக்கி வெளிச்சங்கள் தெரிந்தது. அந்த வெளிச்சங்கள் அவனது சின்ன “மின்சூழ்” வெளிச்சங்களில் இருந்துதான் கசிந்திருக்கும். அவன் சுற்றுக்காவலிற்காகவோ அல்லது வேறு வலுவெதிர்ப்பு ஏற்பாடு ஒன்றிற்காகவோ நகர்ந்துகொண்டிருக்கிறான் அல்லது பயத்தில் இருளை தனக்குக்கிட்டே வரவிடாது விரட்டுவதற்காக இவ்வாது செய்கிறான் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு சிரித்தார்கள்.

படகுகளில் மௌனம் குடிகொண்டிருந்தது. காற்று ஈரத்தை சுமந்து வீசிக்கொண்டிருந்தது. ஓசையில்லாது படகு கரையைத் தொடும் தொலைவிற்குள் வந்துவிட்டது. படகின் இரண்டு கரைகளாலும் இரு கறுப்பு உருவங்கள் தண்ணீருக்குள் குதித்தன. அவர்கள் சுமந்து செல்லும் பொருட்களின் தோற்றம் அவற்றை பெரிய மனிதர்களாக உருமாற்றிக் காட்டியது. தண்ணீருக்குள் இறங்கியவர்கள் சுடுகலனை மூடியிருந்த நீர்காப்பை அகற்றி சுடுவதற்கு தயாரானார்கள். எந்த நேரமும் தாக்குதல் ஆரம்பிக்கலாம், எனென்றால் அது எதிரியின் கோட்டைகள் நிறைந்த இடம். செம்பியன்பற்றுக்கும் மாமுனைக்கும் இடையிலான பகுதியில்தான் இது நிகழ்ந்து கொண்டிருந்தது.

இறங்கிய இருவரும் சுடுகலனை சுடுவதற்கு ஏற்றவாறு பிடித்துக்கொண்டு சற்றுக்குனிந்து ஓசையில்லாது இரண்டு முனைகளிலும் பிரிந்து ஓடியது வானவிளிம்பில் தெளிவாகத் தெரிந்தது. அவர்கள் நிலையெடுத்தபின், எந்தவிதமான ஊறும் தென்படவில்லையென்பதற்கு மணிக்கூட்டு வெளிச்சத்தில் சமிக்கை செய்தார்கள். அதன் பின்னே படகு கரையடைந்தது. அந்த படகிலிருந்து மற்றப் படகிற்கு சமிக்கை காட்டப்படடது. அதுவும் விரைந்துவந்து கரையைத் தொட்டது. ஒவ்வொரும் பொறுமையாக எதற்கும் தயாராக படகுகளிலிருந்து குதித்தார்கள்.

அவர்களின் பார்வை இப்போது முன்னோக்கியதாக கூர்மையடைந்திருந்தது. படகில் ஏற்றிவந்தவர்களிற்கும், இதுவரை ஒன்றாகவே நின்று இறுதிக்கணமும் பிரியமனமின்றி தவித்து நிற்கும் தோழர்களிற்காகவும் ஒருமுறை திரும்பிப் புன்னகைத்தார்கள். அதற்குமேல் அவர்களிற்கு வேளை கிடைக்கவில்லை. நகருவதற்கான வியூகங்கள் அமைத்து முன்னேறத்தொடங்கினார்கள். கால் புதைந்து புதைந்து எழும் அந்த மணல் கடற்கரை பக்கமாகவே வளைந்து நெளிந்துபோகும் பாதை, மணல் மேடுகளின் நடுவில் வளர்ந்திருக்கும் கண்டல்காடுகள் அவற்றினூடு அவர்களின் கால்கள் முன்னேறின.

அடர்ந்த கண்டல் காடு நிறைந்த ஒரு இடத்தில் அவர்கள் ஒன்று

## 26.03.2000 அன்று பளையில் ஆட்டிலறிகளைத் தகர்த்து வீரச்சாவடைந்த இரண்டு கரும்புலிகள்



கரும்புலி
மேஜர் தனுசன்
(தங்கராசா இலங்கேஸ்வரன்)
இறால்குழி, மூதூர்-திருகோணமலை
பிறப்பு: 25.11.1979



கரும்புலி
மேஜர் சுதாஜினி
(தெய்வேந்திரம்பிள்ளை ஜெயசுகி)
இடைக்குறிஞ்சி, வரணி-யாழ்ப்பாணம்
பிறப்பு: 03.02.1976

சேர்ந்தார்கள். அகற்றப்படாதிருந்த அனைத்து நீர்க்காப்புகளும் அகற்றப்பட்டன. அங்கே தடயங்களாக இருந்த பொருட்களை மணலில் குழிதோண்டிப் புதைத்து விட்டு மிக கவனத்தோடு எழுந்து நடந்தார்கள். அவர்கள் போகும் திசையில் தொலைவில் தெறோச்சிகள் (Howitzers) இயங்கிய ஓசை; அதைத் தொடர்ந்து, வானத் தையும் பூமியையும் அதிரவைக்கும் ஓசை எல்லாம் தெளிவாக கேட்டது. எல்லோருடைய மனதிலும் நம்பிக்கை; எங்களுடைய இலக்குகள் இருக்கின்றன. இனி எப்படியும் அவை அழிக்கப் பட்டுவிடும் என்று.

நடந்துகொண்டிருந்தபடியே தனது தோளை வெட்டிய வெடி மருந்துப் பொதிகளைச் சீர்செய்து விட்டு, "சத்தம் போடுங்கோ, இஞ்ச உங்களுக்கான சாமான்களோட நான் வாறனெண்டு உங்களுக்குத் தெரியாதுதானே?"

என்று எல்லோரும் கேட்கும்படியாக கூறிவிட்டுச் சிரித்தான் தனுசன். அவனின் இயல்பே தனித்துவமானது. உச்சி பிரித்து, மேவி வாரப்பட்டிருக்கும் தலைமயிரும் கறுப்பும் சாம்பலும் கலந்த நிறத்தில் இருக்கும் அவனது கண்களும் கதைக்கும் போதும் சிரிக்கும் போதும் கண்ணை மூடி மூடித்திறக்கின்ற அசைவுகளும், உயர்ந்த உடற்கட்டான அவனுடைய உருவமும் அவனை ஒருமுறை, பார்த்தவர்க்ளின் மனதைக்கூட பற்றிக்கொள்ளும். அவனது சொற்களிலிருந்த உறுதியும் நகைச்சுவையும் எல்லோரையும் ஒருகணம் சிரிக்க வைத்தது.

தனுசனது கவசமே அலட்டிக் கொள்ளாது அதிகமான செயற்பாடுகள் மூலமே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இயல்புதான். இலக்கிற்காக அவன் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து பயிற்சி எடுத்தது, அதற்காக நகர்வது அனைத்திலுமே அவனின் செயற்பாடுகளில் தன்னை இனங்காட்டிக்கொண்டான். எல்லாப் போராளிகளுடனும் அதிகமாக சிரித்துக்கதைத்தான். அடிக்கடி, "இந்த ஆட்டிலறிகளை நிச்சயமா உடைப்பன்" என்று உறுதியாய்க்கூறி புன்னகைத்தான். இன்று, இலக்கிற்கும் அவனிற்குமான தொலைவை காலடிகள் குறைத்துக்கொண்டிருந்தன. அவன் உறுதியோடும் தன்னம்பிக்கையோடும் இருந்தான். அவனிற்கென கொஞ்சப் பொதிகள் கொடுத்தபோதும் அவன் மேலதிகமாகவும் புறப்படும்போது தனக்கு வழங்கிய வெடிமருந்துப் பொதிகள் போதாது என்று, "இன்னும் கொஞ்சம் தாங்கோ. நான் கொண்டுபோவன், தேவைப்படும்!" என்று வாங்கி அதையும் சேர்ந்து சுமந்து கொண்டு நடந்தான். ஒவ்வொருவரது நெஞ்சிற்குள்ளும் தலைவர் கதைத்தது, கட்டளையாளர்கள் எடுத்துரைத்தது, போராளிகள் விடை கொடுத்தது என்று, ஒவ்வொன்றும் வந்துபோனது.

அணிகள் நகர்ந்து அகிலன்வெட்டைக் கரையை (சிறுநீரேரி) வந்தபோது நேரம் நள்ளிரவைத் தாண்டிக்கொண்டிருந்தது. அகிலன் வெட்டையில் பரந்து நின்றிருந்த நீர் காற்றுவீசும் நேரம் தவிர மீதியெல்லாம் அமைதியாய் இருந்தது. தெறோச்சிகள் ஏவப்படுகின்ற ஓசை அவர்களிற்குள் ஒரு வேகமேற்படுத்தியது. மெல்லமெல்ல ஒவ்வொருவராக நடந்தார்கள். ஆழம் அதிகமான இடங்களில் சத்தியாவும், ஆந்திராவும் தாண்டு மீண்டார்கள். இரண்டு பேருமே உருவத்தில் சிறியவர்கள். அவர்களின் இந்த சிறிய தோற்றம் பலதடவைகளில் அவர்களிற்கு இலக்கு கிடைக்காது போவதற்கு காரணமாய் இருந்தது. என்றாலும், இம்முறை அவர்களிற்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மலர்விழி தந்தலைமையிலேயே இவ்விருவரையும் அழைத்துச் சென்றாள். தண்ணீரின் ஆழம் அதிகமான இடங்களில் நுனிக்காலில் நடத்தும், அதை விட அதிகமானால் மலர்விழியின் தோள்களில் பிடித்தபடியும் சத்தியா தன் தண்ணீர் கடப்புப் பயணத்தை தொடர்ந்தாள். ஆந்திராவும் அப்படியே. மற்ற கரும்புலி வீரர்களும் அவர்களிற்கு உதவினார்கள். தண்ணீரும் பாதங்களை பிடித்திழுக்கும் சுரிகளும் பயணத்தை சிரமமாக்கியது. யாரும் அதைக் கடினமாகப் பெரிதுபடுத்தவில்லை. எந்தவிதமான தடயமும் ஏற்படாது கரையேறியவர்கள், சற்றுத் தொலைவு நடந்து ஒரு மறைப்பான இடத்தில் ஓய்வெடுத்துக்கொண்டார்கள்.

சிலர் தங்கள் சுடுகலன்களைத் துப்புரவு செய்தார்கள். சிலர் அப்படியே அந்த புதர்கள் மண்டிக்கிடந்த இடத்திலேயே படுத்திருந்தார்கள். சிலர் தாங்கள் கொண்டுவந்த உலர் உணவுகளை சாப்பிட்டுக் கொண்டும் மற்றவர்களிற்கு அன்பாய் கொடுத்துக்கொண்டுமிருந்தார்கள். அது ஒரு படையவலயம் என்ற உணர்வு தெரியாது அவர்கள் இயல்பாகவே பேசினார்கள், சிரித்தார்கள். ஆளாளாய் கிண்டலடித்தார்கள். அந்த இடத்திலேயே மறுநாள் பகற்பொழுது கழிந்தது.

பகற்பொழுதில் தான் அந்த இடமெல்லாம் படை நடமாட்டம் அதிகமான இடமெனத் தெரிந்தது. படையச் சப்பாத்தின் அடையாளங்கள் ஆங்காங்கே பளிச்சிட மாலைச் சூரியன் சற்று மரங்களிற்குள் மறையத் தொடங்கினான். இதுவரையும் ஒன்றாக நகர்ந்த அணி இரண்டாகப் பிரிந்து வேறுதிசையில் இன்னொரு இலக்கைத் தேடப்போகிறது. களத்தினுள்ளும் ஓர் உணர்ச்சி பொங்கும் பிரிவு. பளையில் அமைந்திருந்த சேணேவித்தளம் (Artillery) நோக்கிப் போகின்ற தனுசன், சுதாஜினி அடங்கிய அணியைப் பார்த்து, "உங்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு, இதைவிடக்கூடாது, ஆட்டி தகர்க்க வேணுமெண்டது கனபேற்ற எதிர்பார்ப்பு." என்றாள் மலர்விழி. கூறிவிட்டு தனது தோள்ப்பையிலிருந்த "பழரின்" ஒன்றை எடுத்து வெட்டினாள். ஒரு தாயிற்குரிய பரிவோடும், பாசத்தோடும் ஒவோரு போராளிக்கும் கொடுத்தாள். அந்த கணங்களில் கண்கள் மெல்லக் கசிந்தன. இதே அணிகளில் இனியார் வெற்றிச் சேதியேடு திரும்புவார்கள்?

அங்கு தாமதம் என்ற சொல்லுக்கு இடமில்லை. ஒவ்வொரு மணித்துளியும் ஒவ்வொரு துளி அரத்தமாக மதிக்கப்பட்டது. தனுசன், சுதாயினி அடங்கிய குழு பளை நோக்கியும், மலர்விழி, சத்தியா, ஆந்திரா அடங்கிய குழு தாமரைக்குளம் நோக்கியும், பிரிந்து நடந்தனர். இனி கடக்கவேண்டிய மிகப்பெரும் தடை கண்டி வீதி ஏ9 - முதன்மைச்சாலை.

வீதியோரத்தில் முட்கம்பி வேலிகள். அதைக் கடந்தால் சுற்றுக் காவல் வந்துபோகும் படையினர். அதிகளவு ஒளிசிந்தி இரைந்தபடி ஓடித்திரியும் "பாரவூர்தி"கள். அத்தனை ஊறுகளையும் கடந்து விட்டால் இலக்கு தகர்க்கப்படுவது உறுதியாகிவிடும். இந்தக்கணத்திலும் அவர்கள் எடுத்துக் கொண்ட உறுதியை மீண்டும் சொல்லிக்கொண்டனர். "ஓராள் மிச்சமென்டாலும் உள்ளுக்கபோய் ஆட்டியை உடைக்கோணும்." ஒவ்வொருவருமே அதன் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டிய விதத்தையும் நன்கு அறிந்து வைத்திருத்தனர். கண்டி வீதி கடப்பதற்காய் அங்குலம் அங்குலமாக் நகர்ந்து தடைக்கம்பி வெட்டி, மண்ணணை ஏறி ஒவ்வொருவராக சமிக்கை கொடுத்து கிட்ட அழைத்து, அவர்களை நிலையெடுக்கச் செய்து இப்படி ஒவ்வொன்றும் அங்கே நிதானமாக அரங்கேறிக்கொண்டிருந்தன.

கண்டி வீதியால் கிடுகிடுத்தபபடி மிதிவண்டியில் சுற்றுக் காவலுக்கு படையினர் போய்வரும் நடமாட்டம் தெரிந்தது. அடுந்தடுத்து சில படையினர் மின்சூழ்களுடன் போவதும் வருவதுமாக இருந்தனர். அவர்கள் போகும் போது சிங்களப் பாடல்களையோ அல்லது வேறு எதனையோ கத்திக்கொண்டே சென்று வந்தார்கள். அவர்கள் கதைக்கும் சிங்களச் சொற்களிற்குள் கலந்துவந்து ஆங்கிலச் சொற்கள் அவர்கள் காவல் கடைமையை மாற்றுகின்றார்கனள் என்று உணரக்கூடியதாக இருந்தது. அதற்குப் பின் எல்லாம் மௌனம்.

பழைய வடிவமைப்பிலான ஒரு சகடம்(Car) போன்ற ஊர்தி பளையில் இருந்து முகமாலைப் பக்கமாய் விரைந்தது. அணி வீதிக்கரையை வந்ததும் வேகமாக கடக்க முயன்றார்கள். முன்னேசென்ற ஒருவன் வேகமாகக் நடந்து கண்டிவீதியை கடந்தான். அடுத்தவன் தனது நிலையிலிருந்து எழுந்தான். கடப்பதற்காக விரைவாக நடந்தான். சாவகச்சேரிப் பக்கமிருந்து உறுமலோடு ஏதோ ஒரு ஊர்தி வந்தது. அதன் ஒளிர்மையான வெளிச்சம் அவனை முழுமையாக காட்டியது. கண்ணைப் பறிக்கும் வெளிச்சம். விரைவாய் திரும்பி வந்த இடத்திற்குச் சென்றான். பின்வந்தவர்களை மறைவெடுக்கச் சொன்னான். எல்லாம் ஒரு கணத்திற்குள் நடந்து முடிந்தது. தண்ணீருக்குள் வந்து கொண்டிருந்தவர்கள் அப்படியே அதற்குள்ளே அமிழ்ந்தார்கள். மரங்களிற்குள், பற்றைகளிற்குள், மண்திட்டுகளிற்குள் என்று கெதி கெதியாக தங்களை மறைத்துக் கொண்டார்கள். அது படைய "பாரவூர்தி". அந்தவண்டி நிறைய எறிகணைகளை ஏற்றிச் செல்வது அந்த பெட்டிகள் மூலம் அறியமுடிந்தது. அதைக் கண்ட போது அவர்களிற்கு மெய்சிலிர்த்தது. எங்கோ ஓர் நடவடிக்கைக்கு படைத்துறை தன்னை தயார் செய்கின்றது என்று. மனதிற்குள் நினைத்துக் கொண்டார்கள்.

தெறோச்சிகளின் அதிர்வு மிக கிட்டவாகவும் எத்தனை என்று அறியக்கூடியதாகவும் இருந்தது. அந்த ஊர்தியின் புகையும், அது கிளப்பிச் சென்ற காற்றும் அடங்கமுன் அணி வேகமாக கடந்தது. கண்டி வீதியைக் கடந்ததும் மனதில் நம்பிக்கை பளிச்சிட்டது. இனி எப்படியும் அந்த இலக்குகள் அழிக்கப்பட்டுவிடும் என்று தென்னந்தோப்புகள், பற்றைகாடுகள், வடலிகள் என்று ஒவ்வொரு இடத்தையும் வேகமாகக் கடந்து தளத்திலிருந்து சற்றுத் தொலைவிற்குள் தங்கிக்கொண்டனர். அவர்கள் ஒவ்

# 31.03.2000 அன்று இயக்கச்சியில் இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த இரண்டு கரும்புலிகள்



கரும்புலி
மேஜர் ஆந்திரா
(விநாயகமூர்த்தி சுதர்சினி)
மருதங்கேணி தெற்கு, தாளையடி-யாழ்ப்பாணம்
பிறப்பு: 03.03.1977



கரும்புலி
கப்டன் சத்தியா
(கிருஷ்ணமூர்த்தி முகுந்தினி)
நெல்லியடி, கரவெட்டி-யாழ்ப்பாணம்
பிறப்பு: 06.12.1978



கரும்புலி
மேஜர் மலர்விழி
(பாலகிருஷ்ணன் சங்கீதா)
வண்ணார்பண்ணை-யாழ்ப்பாணம்
பிறப்பு: 24.10.1978

## இதற்குள் 2000ம் ஆண்டு மார்ச் 24ம் திகதி வெற்றிலைக்கேணியிலிருந்து கடலேறிச்சென்று குடாரப்பில் சாமம் மட்டில் தரையிறங்கி, அங்கிருந்து நகர்ந்து சென்று இயக்கச்சி சேனேவித்தளம், மற்றும் தாமரைக்குளம் சேனேவித்தளம் ஆகியவற்றிலிருந்த சேனேவிகளை அழிப்பு





















வொருவரும் சிரித்து, கதைத்து தங்களின் இறுதிநேர ஓய்வையும் உணவையும் பகிர்ந்து கொண்டார்கள். நித்திரை கொள்பவர்களை தட்டியெழுப்பி, ”ஏன் இப்ப அவசரப்படுறியள், இனி ஒரேயடியா தூங்கலாம் தானே.” என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் சுதாஜினி. வழமையான அவளது குறும்புப் பார்வை சிரிப்பு எல்லாமே அப்பொழுதும் அப்படியே இருந்தன. முகமெல்லாம் முத்துமுத்தாக வியர்த்துப்போயிருந்தது. இயல்பாகவே அவளிற்கு முகம் கைகாலெல்லாம் வியர்த்துப்போய்தான் இருக்கும். எப்போதும் சிரிக்காமல் கதைத்து அவளிற்கு பழக்கம் இல்லை. இன்றும் சிரித்தபடியே.

அவளின் உடற்தோற்றத்திற்கு ஏற்றதுபோல அவனிற்கு “லோ” வழங்கப்பட்டிருந்தது. அது அவளின் மடியில் அவளைப் போலவே அடுத்தகட்ட பூகம்பத்தை நினைத்தபடி மெளமாய்க் கிடந்தது. ஒவ்வொரு உணவுப் பொதிகளையுமே எடுத்து உண்டபடி தங்களிற்குள் பேசிக்கொண்டிருத்தார்கள்.

“எப்படி வெளிநாட்டுச் சாப்பாடு, கதிர மேசைதான் இல்லை. பத்தையெண்டாலும் சந்தோசமான சாப்பாடு.” சொல்லி முடித்து மூச்சு விட்டான் தனுசன். அவர்கள் ஓய்வை முடித்த அங்கிருந்து புறப்படத் தயாரானார்கள். தலைகோதிவிட்டு, கசங்கிய உடுப்பை சரிசெய்து, வியர்த்து உருமாறிய முகங்களை துடைத்து ஏதோ கொண்டாட்டத்திற்குப் போவதுபோல அவர்கள் தயாரானார்கள்.

இலக்கை அண்மிக்க, அண்மிக்க அணிக்கு உணர்வின் வேகம் அதிகமானது. சண்டைக்கான தயார் நிலையில் அவர்கள் நகர்ந்தார்கள். கொண்டுபோன தண்ணீர்க் “கலன்”கள் அவர்களைப் பேலவே தண்ணிருக்காய் தவித்தது. ஒரு மோட்டை! அந்த பரப்பின் ஓர் மூலையில் கொஞ்சம் தண்ணீர்! அது எப்படி என்னமாதிரியென்று தெரியாது. என்றாலும் அதைக் குடித்தார்கள். பனை மரங்களோடு ஒட்டி வளர்ந்திருக்கும் சிறுபற்றைகளும், மணற்பகுதியில்முளைத்த புற்களையும் கவசமாக்கி அங்குலம் அங்குலமாய் நகர்ந்தார்கள். அவர்களின் கண்களிற்குள் அத்த தளதத்தின் பேருருவம் தெரிந்தது.

மண்ணணை இடையிடையே காவலரண், முட்கம்பித்தடை என்று அதன் வலத்தை உறுதி செய்யும் ஏற்பாடுகளும், அவர்கள் முன் விரிந்துகிடந்தது. எதிரி ஒரே நேரத்தில் அடுத்தடுத்து எட்டு தெறோச்சிகளை இயக்குவது தெரிந்தது. அது இயக்குவதற்காகவும் வேறுபக்கம் திருப்புவதற்காகவும் அவன் கொடுக்கும் கட்டளைகள் காது மடல்களில் அறைந்தன. அந்த எறிகணைகள் பெரும் ஓசையோடு பிளம்பை கிளப்பி வெடிக்கின்றபோது அதன் பிளம்பு அவர்களில் வியர்வையை உலர்த்துவதாய் முகத்தில் சுட்டது. அவை இன்னும் சில நொடிகளிற்குள் நொருங்கப் போகிறது என்று எண்ணியபோது ஒவ்வொருவரது பற்களும் ஒன்றோடு ஒன்று உரசிக்கொண்டன.

பளை புகையிரத நிலைய கட்டடத்தின் கூரை இல்லாத தோற்றம் முகம் இழந்த ஒருவனைப் போலிருந்தது. அந்த இருளையும் ஊடுருவி அவன் அமைத்திருந்த தடைகளிற்கு வெடிமருந்துகளைப் பொருத்திவிட்டு அணிகளுக்கு தாக்குதலை ஆரம்பிக்கும் சமிக்கையை கொடுக்கவென நினைத்தபோது திறந்த காவலரண் ஒன்றிலிருந்து படைவீரன் ஒருவன் வெளியே வந்தான். அவன் கைககளில் சுடுகலன் இல்லை. ஒளிர்மையான மின்சூழ் ஒன்றை வைத்து எல்லா இடமும் சுற்றியடித்தான். அவனின் பருத்த உருவமும் முரட்டுத்தனமான தோற்றமும் தெளிவான வானவிளிம்பில் தெரிந்தது. முன்னே சென்றவர்களின் முகத்திற்கு நேரே அவன் ஒளிபாச்சியபோது திடுக்குற்று “கவ்த” என்றான் நடுக்கத்துடன். கரும்புலி வீரர்கள் மனதிற்குள் சிரிப்போடும் கூடிய நிதானத்தோடும் நிலையாக நின்றார்கள். மறுமுறையும் தனது ஒளியை வேறுதிசை ஒன்றில் பாச்சியும் ஓசையோடு “கவ்த” என்றான். நிதானம் … சிரிப்பு. மூன்றாம்முறை முகத்திற்கு நேரே ஒளிபாச்சி அதட்டலாகக் “கவ்த” என்றதுதான் தெரியும் அந்த படைவீரன் அதிலேயே செத்துக்கிடந்தான்.

அணி மிக வேகமாக உள்நுழைந்தது.

“ஓடுங்கோ. வேகமாக முன்னேறுங்கோ” என்ற ஓசையோடு எல்லோரும் மண்ணணை ஏறி உள்நுழைந்தார்கள். காவலரணில் இருந்து சூடுகள் வந்துகொண்டே இருந்தன.

“நான் ‘லோ’ அடிக்கிறென், முன்னேறுங்கோ” என்று சுதாஜினி கத்தியது ஓசைகளுக்குள் அடக்கமாய் கேட்டது. அடுத்து என்ன நடந்தது என்று நிதானிப்பதற்குள் வெடியோசைகள்…. சுதாஜினி நின்ற இடமே தெரியவில்லை. உறுதியாக எதிரியின் குறி அவளாகத்தான் இருந்திருக்கும்.
சுதாஜினியின் வெடியதிர்வைப்போலவே ஒவ்வொருவரும் வேகமாக இலக்குகளை நெருங்கினார்கள். தெறோச்சிகள், அதற்கான எறிகணைக் களஞ்சியங்கள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. நிலவு வருவதற்கு முன்னதாக வானம் வெளுத்திருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில் அந்த தெறோச்சிகளின் உருவங்கள் கருமையாகத் தெரிந்தன. மிகவேகமான தாக்குதலில் அந்த பெரியதளமும் அத்தனை தெறோச்சிகளும் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வந்தன. ஆயுதக் களஞ்சியங்கள் ஆங்காங்கே பெரும் ஓசையுடன் வெடித்து சின்னச் சின்ன எரிமலையாய் எரிந்துகொண்டிருந்தன.

நிலைமைகள் வெளியில் அறிவிக்கப்பட்டது. உதவிக்குச் செல்லவென இருந்த அணி அங்கே குறித்த நேரத்திற்குள் போய்ச் சேருமா என்பதில் சந்தேகம் எழுந்தது. கரும்புலி வீரர்களிற்கு செம்பியன்பற்று கடலில் சண்டை நடக்கும் ஓசைகளை தெளிவாகக் கேட்க முடிந்தது. உதவியணி வந்து சேராது என்ற முடிவிற்கு வந்தாலும் இயன்றளவு அத்தனை தெறோச்சிகளையும் பாதுகாத்தனர். தனுசன் எல்லா தெறோச்சிகளுக்கும் ஓடி ஓடி வெடிமருந்துப் பொதிகளை கட்டி வெடிக்கக்கூடிய நிலைக்கு கொண்டு வந்துகொண்டிருந்தான். வேறு வேறு முகாங்களில் இருந்து அந்த தளத்தை இலக்குவைத்து எறிகணைகளை எதிரி ஏவிக் கொண்டிருந்தான். தனுசன் தன் பணிகளை நிறைவேற்றி முடித்தபோது சேணேவிக்கு கட்டிய “சார்ச்” ஒன்று தவறுதலாக வெடித்தது. அதற்குப் பின் தனுசனின் தொடர்பு இல்லை. பொழுது வெழுக்கத் தொடங்கியது.

அத்தனை தெறோச்சிகளையும் தகர்த்து விட்டு பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது. தெறோச்சிகளையும் ஆயுதக் களஞ்சியங்களையும் தகர்த்துவிட்டு வெற்றியோடு பின்வாங்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரது மனதிற்குள்ளும் அவர்களோடு வந்து பிரிந்துசென்ற மலா்விழியின் அணியும் உறுதியாக தனது இலக்குகளை அழித்திருக்கும் என்ற நம்பிக்கை நிறைந்திருந்தது. அறிய ஆவலாயும் இருந்தது.

அவர்களோடு வந்தவர்களில் இரண்டு தோழர்கள் இல்லை. ஆனால் அவர்களின் இலக்கை வெற்றிகொண்டுவிட்டார்கள். தீர்மானித்தபடியே வந்த வழியிலே கண்டி வீதியில் நிலை கொண்ட எமது அணிகளோடு கைகுலுக்கியபோது சொன்னான் ஒரு கரும்புலி வீரன், “எத்தனைபேர் எத்தனை இரவுகளாய் தேடி அலைந்த ஆட்டிலறிகள்… அத்தனை பேற்றை கனவையும் நிறைவேற்றிப் போட்டம்.”

சமரிற்கு அடித்தளமிட்டுவிட்ட நிறைவு அவர்களிடம் இருந்தது.

அவர்கள் அறிய அவலாய் இருந்த மற்றைய மலர்விழியின் அணி தனக்குத் தரப்பட்ட நான்கு தெறோச்சிகள் கொண்ட இயக்கச்சி-தாமரைக்குளத்திலிருந்த சேணேவித்தளத்தை அழித்துவிட்டு வெற்றியோடு தளம் திரும்பிக்கொண்டிருந்தவேளை இடையே சிறீலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் கரும்புலி வீரர்களில் மலர்விழியும், ஆந்திராவும், சத்தியாவும் திரும்பவில்லை.

மூலம்: “விடுதலைப்புலிகள்“, வைகாசி-ஆனி, 2000, பக்கம்: 12-13 ரூ 15
மூல எழுத்தாளர்: கிள்ளிவளவன்

**இதற்குள் 2000ம் ஆண்டு மார்ச் 24ம் திகதி வெற்றிலைக்கேணியிலிருந்து கடலேறிச்சென்று குடாரப்பில் சாமம் மட்டில் தரையிறங்கி, அங்கிருந்து நகர்ந்து சென்று இயக்கச்சி சேணேவித்தளம், மற்றும் தாமரைக்குளம் சேணேவித்தளம் ஆகியவற்றிலிருந்த சேணேவிகளை அழித்த தரைக்கரும்புலிகளின் மறத்தின் நினைவாய் வெளியிடப்பட்ட பாடலின் வரிகள் உள்ளன.**

## பாடல் வரிகள்

**பாடல் இறுவட்டு: அலையின் கரங்கள்**
**வெளியீடு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், பிரான்ஸ்**
**வெளியீட்டு திகதி: 07/2000**



தேசமே, எங்கள் தேசமே!
மண்ணில் வீசும் வாசமே!

மௌனமாய் தங்கள் மூச்சையே நிறுத்திய வேங்கைகளே!
உன்னத விடுதலைக்காய் தன்னுயிர் தந்தவரே!

வானமும் உம்மைத் தேடுதே, இங்கு வா!
தேசமும் உம்மைத் தேடுதே, இங்கு வா!

நிலவும் தூங்க, கடலும் சாய, வீரம் எழுந்தது!
வெற்றிலைக்கேணி பிரியும் நேரம் வேர்கள் அழுதது – கருவேங்கை சிலிர்த்தது!

ஆழமாய்க் காதலித்த தாயகத்திலே ஆள வந்தோர் ஆட்லறியை அறுத்தெறிந்தீரே!
ஆந்திரா, சத்தியா, மலர்விழி தனலாகி தாமரைக்குளத்தை மீட்டிரே!
பெரும் சரித்திரம் படைத்து சென்றீரே!

கண்ணிவயலில் கால்கள் தவழ்ந்து கண்டி வீதி கடந்தாரே!
குடலறுத்து உயிர்குடிக்கும் கடுமலையாய் கனகரகம்
எரிமலையின் உச்சியிலேறி பகைமுடித்த தனுசனவன்
எரிமலையின் உச்சியிலேறி பகைமுடித்த சுதாசினியே
தேசத்தின் சுடரொளியாய் தெரியுதெங்கள் ஈழத்திலே!



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# புதுக்குடியிருப்பு ஐயன்கோவிலடி படுகொலை 21 ஏப்ரல் 1985

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் புதுக் குடியிருப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் பல்வேறு தொழில் களைச் செய்யும் மக்கள் வாழ்கின்றனர். கூடுத லானவர்கள் விவசாயத்தையே தொழிலாக மேற்கொள்கிறார்கள்.

இக்கிராமம் அடிக்கடி இராணுவச் சுற்றி வளைப்புக்கு உட்படுவதுண்டு. 21-04-1985 அன்று இக்கிராமம் அதிகாலை சுற்றிவளைக் கப்பட்டுப் பல பொதுமக்கள் கைது செய்யப்பட் டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் புதுக்குடியி ருப்பு எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலர் அரச உத்தியோகத்தர்களென அடை யாளம் காணப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர். விடுதலை செய்யப்படாத அனை வரும் அன்று மாலை மூன்று மணியளவில் புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி இராணுவத்தினரின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

கைதுசெய்து கொண்டு சென்றவர்களில் இரு பத்து நான்கு பேரை இராணுவம் காட்டுக்குள் வரிசையாக நிற்கவைத்துச் சுட்டது. இவர் களில் இராமநாதன், துரைரட்ணம் ஆகிய இருவரும் காயப்பட்ட நிலையிலும், செபஸ்ரியாம்பிள்ளை, நடனசபாபதி ஆகியோர் காயம் எதுவுமின்றியும் தப்பினார்கள்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சுட்டுக்கு உட் பட்டவர்கள் அனைவரையும் இராணுவ ராக் வண்டியில் ஏற்றி ஒட்டுசுட்டான் நோக்கிச் செல்லும் வழியில் காயாமோட்டை என்னும் இடத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்களையம் கைது செய்துகொண்டு இடை யில் இறக்கிவிட்டு சென்றனர். காயப்பட்டுக் குற்றுயிராகக் கிடந்தவர்களும் தண்ணீர் தண்ணீர் என்று கத்தியபடி பரிதாபமாக உயிரிழந்தார்கள்.

அடுத்தநாள் கற்சிலைமடுவில் வைத்து மக்க ளைக் கொண்டு ரயர்கள் சேகரித்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச்சென்று ஒட்டுசுட்டான் காவல்துறை நிலையத்தின் பின்புறத்தில் வைத்து ரயர்கள் மீது இறந்தவர்களின் உடல் களை அடுக்கித் தீமூட்டி எரித்தார்கள்.

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர் துரைரட்ணம் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,
“அதிகாலையில் நகரைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பலரைக் கைது செய்தனர். அதில் அரசாங்க ஊழியர்கள் விடுவிக்கப்பட் டனர். விசாரணை முடிந்த பின்னர்



எல்லோரையும் 3.00 மணியளவில் ஏற்றி ஒட்டுசுட்டான் வீதி நோக்கிச் சென்றனர். பின் காட்டுப்பகுதியில் வைத்து எல்லோரையும் இறக்கி அவ்வீதியிலிருந்த சிறு வீதியில் வைத்து வரிசையாக நிறுத்திச் சுட்டனர். இதில் நானும் நடனசபாபதியும் படுகாயத்துடன் உயிர் தப்பினோம்.”

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர், வயது)

1. கனகசுந்தரம் கருணானந்தம், 39, -
2. சீனி ஜோசப், 32, -
3. சீனி தேவதாஸ், 24, -
4. அதிரியான் அமலதாஸ், 19, -
5. அப்பையா இந்திரன், 32, -
6. றைமேந்து இருதயநாதன், 45, -
7. தாமோதரம்பிள்ளை, 20, -
8. மாணிக்கம் பௌளின்ராசா, 21, -
9. கிட்டினன், 32, -
10. சங்கரப்பிள்ளை சத்தியசீலன், 21, மாணவன்
11. சிங்கரத்தினம் இளங்கோ, 18, மாணவன்
12. அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, 32, விவசாயம்
13. அந்தோனிப்பிள்ளை டைட்சிங்ஸ்சி, 16, தொழிலாளி
14. அப்பையா புவனேந்திரன், 32, விவசாயம்
15. வினாயகமூர்த்தி ரகுநாதன், 28, தனியார்தொழில்
16. பெரியதம்பி பாலசுந்தரம், 30, தொழிலாளி
17. இலட்சுமணன், 30, -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பட்டித்திடல் படுகொலை – 26 ஏப்ரல் 1987

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரி லிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் பத்து கி.மீ. தொலைவில் பட்டித்திடல் கிராமம் அமைந்துள்ளது. மல்லிகைத்தீவு கிராமசபை எல்லைக்குள் அமைந்துள்ள இப்பூர்வீக கிராமத்தில் விவ சாயம் செய்பவர்களும் கூலிவேலை செய்பவர் களும் அதிகமாக வாழ்கின்றார்கள். 1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சிறீலங்கா இராணுவத் தினரின் தாக்குதல்கள் ஆங்காங்கே இடம் பெற்றவண்ணம் இருந்தன. பட்டித்திடற் கிராமமும் 26.04.1987 அன்று இராணுவத் தாக்குதலுக்குள்ளாகியது.

பட்டித்திடல் கிராமத்திலிருந்து நெடுஞ்சாலை யின் மேற்கே மல்லிகைத்தீவு சந்தியும் வாசிக சாலையும் உள்ளன. அப்பகுதியில் மோதல் சம்பவங்கள் நடந்தது. அதனை அறிந்த மக்கள் தாங்கள் இராணுவத்தால் தாக்கப் படுவோம் என்ற அச்சம் காரணமாக ஊரை விட்டு அகன்று விட்டனர். பழிதீர்க்கும் எண்ணத்தில் கிராமத்திற்குள் வந்த இராணுவத்தினர் மக்களை தேடி வந்த போது கிறிஸ்தவக் குடும்ப மான பொன்னம்மா குடும்பத்தை சேர்ந்த பதினெட்டுப் பேர் தாங்கள் கிறீத்தவர்கள் என்பதால் தங்களுக்கொன்றும் நடக்காது என்ற நம்பிக்கையில் இறை வழிபாட்டில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர்.

வீடுவீடாகத் தேடிக்கொண்டு வந்த இராணுவத் தினர் இறைவழிபாடடில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் குற்றுயிரோடு இருந்தவர்களை வெட்டிவிட்டு அனைவரையும், குறிப்பாக குறை உயிரோடு இருந்தவர்களையும், வைத்துத் தீயிட்டு படுகொலை செய்தனர். மொத்தம் ஒரே குடும்பத்தில் பதினேழு பேர் உயிரிழந்தனர். அதில் மூன்று கைக்குழந் தைகளும் பாடசாலை மாணவ, மாணவி களும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டி லிருந்து கோணன் உலகநாதன் என்பவர் மட்டுமே உயிர் தப்பினர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. உலகநாதன் ஜெயப்பிரியா - 06
02. உலகநாதன் ஜெயரதி குழந்தை 01
03. உலகநாதன் யோகேஸ்வரி வீ.பணி 26
04. கோணன் பத்தினியன் தொழிலாளி 42
05. பத்தினியன் சீதையம்மா வீ.பணி 34
06. பத்தினியன் நேசன் மாணவன் 17
07. பத்தினியன் பிரகாஸ் மாணவன் 13
08. பத்தினியன் சோபனா மாணவி 12
09. பத்தினியன் கிருசாந்தி மாணவி 10
10. பத்தினியன் அற்புதராசா மாணவன் 08
11. கோணன் பொன்னம்மா வீ.பணி 60
12. கோணன் மேரி - 23
13. சின்னத்துரை யோகேஸ்வரி - 29
14. சிந்தாமணி பாலமுருகன் மாணவன் 11
15. சிந்தாமணி யோகராசா மாணவன் 14
16. சிந்தாமணி கோகுலேஸ்வரி மாணவி 15
17. சிந்தாமணி செந்தில்மணி கமம் 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# கரப்பொழை, முத்துக்கல் படுகொலை ஏப்ரல் 1987

கரப்பொழை, முத்துக்கல் கிராமங்கள் பொல நறுவை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களாகும். இக்கிராம மக்களின் பிரதான தொழில் கூலிவேலை செய்தல், மந்தை வளர்த்தல், காடுகளிற் தேனெடுத்தல் என்பனவாகும்.

29.04.1992 அன்று நள்ளிரவு இராணுவத் தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து பகல் முழுவதும் வேலை செய்த களைப்பில் இரவு நல்ல உறக்கத்திலிருந்த கரப்பொழை, முத்துக்கல் கிராமமக்களை, அவர்களின் வீடுகளினுட் புகுந்து வெட்டிப் படுகொலை செய்தனர். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகளென தொண்ணூற்றேழிற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களினாலும் படுகொலை செய்யப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து இரண்டு கிராம மக்களும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புத்தூர் படுகொலை – 18 ஏப்ரல் 2006

புத்தூர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம். புத்தூரைச் சேர்ந்த கண்ணன் என்னும் முச்சக்கரவண்டி சாரதி தமது வர்ணம்தீட்டும் நண்பரை வழமையாக வேலை முடிவடைந்ததும் அவரது வீட்டில் இறக்கி விடுவார். வழமைபோல் ஏப்பிரல் 18ஆம் நாள் தமது வர்ணம்தீட்டும் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிடுகிறார். அந்த முச்சக்கர வண்டியில் மேலும் மூன்று நண்பர்கள் உல்லாசமாக பிரயாணம் செய்வதற்காக சென்றனர். முச்சக்கரவண்டி தாண்டிச் சென்ற கடையில் நின்ற நபர்கள் அந்த வண்டி நிறைய ஐந்து நண்பர்களும் அடுக்கி ஏற்றிக்கொண்டு கடையை தாண்டி வர்ணம்தீட்டும் நண்பரை இறக்கிவிடுவதற்கு சென்றதையும், பின்பு வர்ணம்தீட்டும் நண்பரை தவிர ஏனைய நான்கு நண்பர்களும் திரும்பி சென்றதையும் கண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் முச்சக்கர வாகனத்தின் பின்னால் வந்ததையும் பின்பு அதை நிறுத்தி திருப்பி அனுப்பியதையும் கடையில் நின்ற நபர்கள் கண்டிருக்கின்றார்கள். அந்தவேளையில் வேறு ஒரு நபர் சைக்கிளில் வந்து கடையடியில் இறங்கி சீனி வாங்கிக்கொண்டு முச்சக்கரவண்டி சென்ற பக்கமாக தமது வீட்டுக்குத் திரும்பிச் சென்றதையும் கண்டார்கள். இரவானதும் தமது மகன் கண்ணன் வீடு திரும்பாததால் அவரது தகப்பன் அவரை தேடிசென்றபோது மகனின் உடலத்தையும் முச்சக்கர வண்டியையும் றோட்டில் கண்டார். ஆரம்பத்தில் மிகுதி நான்கு நண்பர்களையும் தேடிப்பார்ப்பதற்காக அப்பகுதிக்குச் செல்ல சிறீலங்கா இராணுவம் எவரையும் அனுமதிக்கவில்லை. ஈற்றில் தேடிப்பார்ப்பதற்கு மக்கள் அனுமதி பெற்றுப் போனபோது நான்கு நண்பர்களினதும் கடையில் சீனி வாங்கிய நபரினதுமாக ஐந்து சடலங்களை றோட்டோரமாக இருக்கும் வயலிலிருந்து மீட்டெடுத்தனர்.















இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி கௌரிபாலன், 32
02. செல்லன் கமலதாசன், 25
03. தங்கராசா கவீந்திரன், 23
04. மகாதேவன் கிசோக்குமார், 22
05. சுப்பிரமணியம் கண்ணதாசன், 27



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# திருகோணமலை மூதூர் படுகொலை 25 ஏப்ரல் 2006

திருகோணமலை மூதூர் கிழக்கில் 2006 ஏப்ரல் 25ஆம் நாள் புதன்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சிறீலங்கா விமானப்படையினர் கிபிர் விமானங்கள் மூலம் தாக்குதலை மேற்கொண்ட அதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினர் ஆட்லெறி, பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன்போது குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களௌன 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நசுக்கப்பட்ட 12 பொதுமக்களின் உடல்கள் இத்தாக்குதலின் பின் கண்டெடுக்கப்பட்டது. இதில் 4, 15, 16 வயதான மூன்று சிறுவர்கள் அடங்குவர் இத்தாக்குதலைத் தொடர்ந்து 3000 குடும்பங்கள் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந் தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் 25 பொதுமக்கள் மேற்சொன்ன தாக்குதலில் காயப்பட்டவகளாவர்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. ஞானசேகரம் ரேணுகரன், 23
2. செல்வராணி, 32
3. மெய்யன், 34
4. மெய்யன் கிருசாந்தன், 04
5. நாகையா ருக்குமணி, 49
6. நவரட்னம் ரஞ்சிதமலர், 56
7. பத்தினியன் நாகம்மா, 67
8. தர்மலிங்கம் சுரேஸ்ரூபன், 23
9. துரையப்பா ரதீஸ், 15
10. வரதன் ராஜ்குமார், 16
11. வீரபத்திரன் பகவதிப்பிள்ளை, 67
12. ஏ.மயூரன், 21
13. விழிராசா மயூரன், 21



# விசுவமடுவில் உள்ள புன்னைநீராவியடியில் சிறீலங்கா விமானப்படையின் வான் தாக்குதலில் 15 வயது பாடசாலை மாணவி பலி – 17.04.2008

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடுவில் உள்ள புன்னைநீராவியடியில் வியாழக்கிழமை காலை 6:30 மணியளவில் இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு தாக்குதலில் 15 வயது சிறுமி கொல்லப்பட்டதாக தமிழீழ காவல்துறை தெரிவித்துள்ளது. விசுவமடு சந்தியில் இருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பிறமந்தன் ஆற்றில் உள்ள சிவிலியன் குடியிருப்பு மீது நான்கு விமானப்படை குண்டுவீச்சாளர்கள் 16க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசினர்.

விமானப்படை தாக்குதலில் கொல்லப்பட்ட 15 வயதான அஞ்சலஸ் சுலக்சனா, கிளிநொச்சி புனித பாத்திமா பெண்கள் பாடசாலையில் தரம் பத்தாம் மாணவி.

சுலக்சனா தவணை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் விசுவமடுவில் தனது உறவினர்களுடன் தங்கியிருந்தார்.

எட்டுக்கும் மேற்பட்ட வீடுகள் மீது வெடிகுண்டுகள் விழுந்து வெடித்ததில் வீடுகள் சேதமடைந்தன.



**இந்த உலகமானது**
**மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகின்றது. மனித உரிமை, மக்கள் உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்த நலன்களே இன்றைய உலக ஒழுங்கைமைப்பை நிர்ணயிக்கின்றன.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# பாதுகாப்பு வலயத்தின் மீதான சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்; பல பொதுமக்கள் படுகொலை – 15.04.2009

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதியில் இருந்து இரட்டை வாய்க் கால் சந்தியை இலக்கு வைத்து சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் ஈடுபட்டனர். இரட்டைவாய்க்கால் சந்திப்பு அருகே, பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் நுழைவாயிலுக்கு அருகில் கடுமையான சண்டை இடம்பெற்றது. முள்ளிவாய்க் காலில் தாக்கிய மல்டி பீப்ரல் ரொக்கெட் லாஞ்சர் (எம்பிஆர்எல்) குண்டுகள் பாதுகாப்பு வலயத்தை உலுக்கியதால், சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் காலை வேளை யில் குறைந்தது 6 தடவைகள் இப்பகுதியைத் தாக்கியதுடன், மாலையில் ஹெலிகாப்டர் துப்பாக்கிக் கப்பல்கள் ராக்கெட்டு களைச் சுடுவதைக் காண முடிந்தது. இறந்த பொதுமக்கள் அவர்கள் தாக்கப்பட்ட இடத்தில் புதைக்கப்பட்டதால், காய மடைந்த 83 பொதுமக்கள் மட்டுமே மாலை 5:00 மணி வரை புதுமாத்தளனில் உள்ள மருத்துவமனைக்குச் செல்ல முடிந்தது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த 12 நோயாளிகள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படாமல் செல்லும் வழியில் இறந்துவிட்டதாக மருத்துவ வட்டாரங்கள் முன்னதாக தெரிவித்தன. எறிகணைத் தாக்குதல் நிறுத்தப்பட்டதையடுத்து, மருத்துவமனை ஆம்புலன்ஸ்களை முள்ளிவாய்க்காலுக்கு அனுப்பியது. மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட 83 பேரில், 6 பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந் ததாக மருத்துவ அதிகாரிகள் மாலை 5:00 மணியளவில் தெரிவித்தனர்.

இதனிடையே வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட சிவஞான மூர்த்தி பிரசிதா என்ற 2 வயது பெண் குழந்தை மருத்துவ மனையில் புதன்கிழமை உயிரிழந்தது. ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் வயிற்றுப்போக்கால் பல குழந்தைகள் பாதிக்கப்பட் டுள்ளனர். தேவைகளுக்கு ஏற்ப மனிதாபிமான பொருட்கள் கொண்டு வரப்படாததால் நிலைமை மோசமடைந்து வருவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.



மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் வார்டு காயம் மற்றும் நோயாளிகளால் நிரம்பியது.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டரை மாத குழந்தை சகிலாவின் உயிரை மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. குழந்தை செவ்வாய்க்கிழமை இறந்தது.

மேலும், வார்டில் அறுவை சிகிச்சைக்குப் பின் 4 நோயாளிகள் இறந்தனர்.













# உயர் பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல்; 57க்கும் மேற்பட்டடோர் படுகொலை – 16.04.2009



முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறீலங்கா படைகளின் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் வியாழன் அன்று பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் 57 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வன்னியில் உள்ள செய்தியாளர் தெரிவித்தார். வியாழன் அன்று சிறீலங்கா இராணுவத்தால் ஏவப்பட்ட எறிகணைகள்; நிருபரால் கிட்டத்தட்ட 1,500 ஷெல் வெடிப்புகள் பதிவு செய்யப்பட்டன, அவற்றில் சுமார் 600 குண்டுகள் பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியதுடன், சுமார் 150 பீரங்கி குண்டுகள் கடற்கரையைத் தாக்கின.

காயமடைந்த பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

காலை 9:30 மணி முதல் 12:30 மணி வரை முள்ளிவாய்க்கால் மற்றும் இரட்டை வாய்க்கால் மீது தீவிர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. பொக்கனைப் பகுதியும் சிறீலங்கா படையினரின் எறிகணைகளால் தாக்கப்பட்டது.

நாள் முழுவதும் துப்பாக்கிச் சூடு பரிமாற்றம் தொடர்ந்து நடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வியாழன் அன்று புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனையில் 130 பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர், அவர்களில் 107 பேர் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் காயமடைந்துள்ளனர் மற்றும் 23 பேர் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூடு காரணமாக துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். நோயாளிகளில் 7 பேர் அனுமதிக்கப்பட்ட பிறகு இறந்தனர். காயமடைந்தவர்களில் 60 பேர் பொக்கனை பிரதேசத்தில் இருந்து வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர்.

அறுவை சிகிச்சைக்குப் பின் 5 நோயாளிகள் மருத்துவமனையில் உயிரிழந்ததாக புதுமாத்தளன் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட 13 வயது நபர், 52 வயதான நீரிழிவு பெண் மற்றும் 71 வயதுடைய ஆண் ஒருவரும் நோயறிதல் இல்லாமல் மருத்துவமனையில் வியாழக்கிழமை உயிரிழந்தனர்.

300க்கும் மேற்பட்ட படுகாயமடைந்துள்ளனர்.

















# முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்தில் மக்கள்




















# மாத்தளன் மற்றும் பொக்கனைப் பகுதியில் பல நூறு பொதுமக்கள் படுகொலை - 20.04.2009

20.04.2009 அன்று மாத்தளன் மற்றும் பொக்கனையில் நூற்றுக்கணக்கான சடலங்கள் மற்றும் காயமடைந்த பொது மக்கள் இன்னும் கிடத்தப்பட்டுள்ளனர், மேலும் 600 இற்கும் மேற்பட்ட படுகாயமடைந்தவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள பாடசாலையில் இயங்கும் தற்காலிக வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை முழு வதும் கொண்டு வரப்பட்டுள்ளனர். 60 காயமடைந்தவர்கள் மட்டுமே புதுமாத்தளனில் உள்ள மருத்துவமனைக்குச் சென்றனர்,
















# யுத்த காலப்பகுதியில் வைத்தியர் வரதராஜா துரைராஜா 20.04.2009

“மாத்தளனில் ஆமியாம்”

“ஆஸ்பத்திரியடியில் நிக்கிறானாம்” “நிறைய சனம் செத்தும் போச்சாம்” சனம் நிறைய உள்ளே போயிட்டுதாம்,” என்று எம் செவிகளுக்கு கிடைத்த அந்தச்செய்தியோடு 2009, ஏப்பிரல் 20 ஆம் திகதி விடிந்தது. “முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைக்கு நானும் மதியும் ஓடிப்போனோம். காயப்பட்டவர்களை கடலால் இறக்கி, அங்கிருந்து வாகனங்களில் கொண்டு வந்திருந் தார்கள்.” காயமடைந்தவர்களை இறக்கி இறக்கி என்னால ஏலாது.

முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் இடம்போதாமையால் முன்பக்க காணியில் உள்ள மரங்களுக்கு கீழே தரப்பாள் விரிக்கப்பட்டு அதில் காயமடைந்தவர்களை கிடத்தினோம்.

அன்று காலையில் எம்மால் எந்த விபரங்களையும் எடுக்கக் கூடிய நிலையில் நாங்கள் இல்லை. அன்று மாலையில் எம் மால் முடிந்த வரையில் காயமடைந்தவர்களின் விபரங்கள் மற் றும் இறந்தவர்களின் விபரங்களைச் சேகரித்தோம். முழுமை யாக விபரங்களை பத்திரிகையில் வெளியிடமுடியவில்லை. முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு அருகருகே அமைந்துள்ள முள்ளி வாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர்மடம், அம்பலவன் பொக்கனை புதுமாத்தளன் ஆகிய கடற்கரைக்கிராமங்களே 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தகாலப்பகுதியில் பெருமளவு தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட பிரதேசங் களாகும். இன்றையநாளில் , ஏப்பிரல்-20,2009 அன்று 1983 இற்கு பின்னர் ஒரே நாளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை சிறீலங்கா படையினர் படுகொலை செய்திருந்தனர். எறி கணைத்தாக்குதலில் காயமடைந்தவர்களை மீண்டும் சுட்டும், பதுங்குகுழிகளில் இருந்த மக்கள் மீது கைக்குண்டுகளை வீசியும் படுகொலை செய்த இன்றைய நாளில் நான் சந்தித்த முதலாவது மிகப்பெரிய அவலம் இதுவேயாகும். இன்று ஏப்பிரல் -20. அதன் நினைவுகளோடு தான் இன்று நான் வேலைக்குப் போனேன். ஏதாவது எழுதுவம் என்று நினைக்கும் பொழுது தான் “வைத்தியர் வரதராஜா துரைராஜா அவர்களின் நினைவு வந்தது”.






“படையினர் புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு மிகக்கிட்டிய தூரத்தில் நிற்கும் போது அவரும் இன்னொரு மருத்துவபணி யாளரும் வலைஞர்மடம் பகுதியில் இருந்து கடற்கரை வழியாக புதுமாத்தளன் வைத்தியசாலைக்குச் சென்று அங்கிருந்தவர் களையும் முக்கியமான மருந்துப்பொருட்களையும் மீட்டு வந்தவர்”. அவரிடம் இன்று பேசியபொழுது மருத்துவபணி யாளர்களின் அர்ப்பணிப்பான பணிகளையும் அவர்கள் தங்கள் குடும்பங்களை பற்றி நினைக்காமல் காயமடைந்துவரும் மக் களுக்கு சிகிச்சை அளித்த அத்தனை பேரும் மதிப்புக்குரிய வர்கள் என்று சக மருத்துவ பணியாளர்களின் பெயர்களை சொல்லி பல விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

அவருடைய முழுமையாக பகிர்வு பிறிதொரு சமயத்தில் வெளி வரும். அன்றைய நாளில் நடந்தது என்ன? வைத்தியர் வரதாராஜா... “படையினர் எங்களைக் கண்டுவிட்டனர். எங்களை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். நான் வாகனத்தில் இருந்து இறங்கி ஓடி, பனைமரங்களுக்குள் ஒளித்து ஒளித்தே புதுமாத்தளன் வைத்தியசாலைக்குள் ஓடினேன்.” இவ்வாறு இறுதியுத்தகாலப்பகுதியில் மருத்துவ பணிகளில் ஈடுபட்ட வைத்தியர் வரதராஜா துரைராஜா இன்று தெரிவித்துள்ளார்.

இவரே முல்லைதீவு மாவட்ட பிராந்திய சுகாதாரசேவை பணிப் பாளராக அந்நேரத்தில் கடமையாற்றியவர். தற்பொழுது வட அமெரிக்காவில் வசித்து வரும் இவர் எம்முடன் அன்றைய நாட்களில் நடந்த கொடூர நினைவுகளை பகிர்ந்து கொண்டார். “வலைஞர்மடம் பகுதியில் தான் நாங்கள் தங்கியிருந்தோம். எங்களுக்கு அன்று காலை “மாத்தளனில் ஆமி வந்திட்டான் என்றும் நடக்கக்கூடிய நோயாளர்கள் மற்றும் பல மருத்துவ பணியாளர்களும் ஆமிக்குள்ள போயிட்டினமாம்” என்று தகவல் வந்தது. “நான் வெளிக்கிட்டன். அங்க ஒருக்கா போவம் என்று” என்னை ஒருதரும் விடவில்லை. “காலை 9.30 மணிக்கு தான் எப்படியாவது போய்ப்பார்ப்பம் என்று நானும் இன்னொரு மருத் துவபணியாளரும் கடற்கரை வழியாக புதுமாத்தளன் பகுதிக்குச் சென்றோம். வைத்தியசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கை யில் வாகனத்தை செலுத்திக்கொண்டிருக்கும் பொழுது திடீ ரென்று படையினர் எம்மை நோக்கி சராமரியாக எம்மை நோக்கி சுட்டனர்.

“நாங்கள் வாகனத்தை விட்டு இறங்கி அருகில் உள்ள பனை மரங்களுக்குள் ஒளித்து ஒளித்து வைத்தியசாலைக்குள்ளே ஓடிட்டம்.” அங்கே பலரது உயிரற்ற உடல்களுக்கு மத்தியில் காயப்பட்டவர்களின் முனகல் சத்தங்கள் ஒருபுறம் மறுபுறத்தே இடையிடையே சண்டையும் நடைபெறுகிறது. வைத்திசாலை ஜன்னலால் எட்டிப்பார்த்தால் நூறு மீற்றரில் ஆமி நிக்கிறான்.

வைத்தியசாலையில் இருந்த காயமடைந்தவர்களுக்கு சரியாக சிகிச்சை அவ்விடத்தில் வழங்கமுடியவில்லை. அவர்களை எம்முடன் வரவிரும்பியவர்களையும் முக்கியமான மருந்துப் பொருட்களையும் வைத்தியசாலையில் இருந்த பிறிதொரு வாகனத்தில் ஏற்றினோம். வாகனம் வெளியே எடுத்தால் ஆமி தாக்குதல் நடத்துவானோ அல்லது இல்லையோ எங்களுக்கு தெரியாது. ஏதோ! கண் இமைக்கும் நேரத்தில் வாகனத்தை வைத்தியசாலை முன்புறமாக செலுத்தி அருகில் உள்ள ஒழுங்கை ஊடாக கடற்கரைக்கு சென்று முள்ளிவாய்க்கால் சென்றடைந்தோம். அன்றைய நாளில் மக்களுடைய இழப் புத்தொகையை என்னால் சரியாக சொல்லமுடியாமல் இருக் கிறது. எல்லா இடமும் காயமடைந்தவர்கள் மற்றும் இறந் தவர்கள். அன்று எங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடி நிலையிலும் மிகுந்த சிரமப்பட்டு பலரது உயிர்களை காப்பாற்றியிருப்பது மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது...!

குறிப்பு: பதிவு





# முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலயத்தில் சிறீலங்காப் படைகளின் தாக்குதல்கள் – 27.04.2009

சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் முள்ளிவாய்க்கால் மீது 23 முறை கடுமையான குண்டுவீச்சுகளைத் தொடர்ந்தனர், கனரக ஆயுதங்களை நிலைநிறுத்துவதை நிறுத்துமாறு தனது ஆயுதப்படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாக கொழும்பு அரசாங்கத்தின் அறிவிப்பை முற்றிலும் புறக்கணித்தது. பல திசைகளில் இருந்து கொத்துக் குண்டுகள், மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர் (எம்பிஆர்எல்) தீ மற்றும் கனரக மோட்டார் குண்டுகள் பொருத்தப்பட்ட பீரங்கி குண்டுகளை எஸ்.எல்.ஏ சுடத் தொடங்கியபோது, இரவு 7:00 மணி முதல், முள்ளிவாய்க்கால் பகுதியை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தினர் கடுமையாக சரமாரியாக தாக்கியதாக அன்றைய தகவல்கள் தெரிவிக்கின்றன. முள்ளிவாய்க்காலின வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுகின்றது, இலங்கை கடற்படையின் பீரங்கிப் படகுகளும் மாலையில் சுட ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.



திங்கட்கிழமை நண்பகல் வானொலி செய்திகள் மூலம் கொழும்பின் அறிவிப்பு அவர்களுக்கு எட்டப்பட்டதால் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பொதுமக்கள் சிறிது நேரம் நிம்மதியடைந்தனர். ஆனால், சிறீலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் பாதுகாப்பு வலயத்தின் மீது பறந்து, மண்டலத்தின் தெற்குப் பகுதியை 4 முறை மதியம் 12:40 மணியளவில், 2 முறை மதியம் 1:10 மணியளவில் தாக்கியதால், அவர்களின் எதிர்பார்ப்பு குறுகியதாக இருந்தது. மற்றும் 3 முறை சுமார் 3:45 பி.ப.

சிறீலங்கா விமானப்படையினர் காலை 9:00 மணியளவில் 6 முறையும், 10:00 மணியளவில் 8 முறையும் இறக்கி, இரண்டு முறை வான்வழித் தாக்குதல்களை நடத்தினர்.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வலைஞர்மடத்திலும், தெற்கில் வட்டுவாகலிலும் பலத்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை மாலை, 139 நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் சரிபார்த்தன, சில நோயாளிகள் தங்கள் காயங்களுக்கு கட்டுப்பெட்டு வெளியேறினர். காயமடைந்தவர்களில் 19 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இறந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படவில்லை. மருத்துவ ஊழியர்கள் தங்களிடம் மருந்துகள் இல்லை என்றும், காயம் அடைந்தவர்களுக்கு கட்டு போடுவதாகவும், பலத்த காயம் அடைந்த நோயாளிகள் தற்காலிக மருத்துவமனை வளாகத்தில் தங்கி இருப்பதாகவும் புகார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு வலயத்தில் பட்டினி நிலவுகிறது. குழந்தைகளுக்கு பால் பவுடர் இல்லை. பெரும்பாலான மக்கள் கூழ் மற்றும் பருப்பை நம்பியிருக்கிறார்கள். யாராலும் மீன் பிடிக்க முடியவில்லை.

3-4 நாட்களுக்குள் உணவு வழங்கப்படாவிட்டால் பல முதியவர்கள் இறந்துவிடுவார்கள் என்று மருத்துவமனையின் மருத்துவர்கள் தெரிவித்தனர். அவர்களில் பலருக்கு கடந்த 3-4 நாட்களாக உணவு இல்லை.

பாதுகாப்பு வலயத்தை அடைய வேண்டிய மனிதாபிமான வினியோகக் கப்பல் கொழும்பு அரசால் யாழ்ப்பாணத்திற்கு திருப்பி விடப்பட்டது. உணவுப் பொருட்களை இறக்குவதற்கு எந்தவிதமான பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லை என்று காரணம் கூறப்பட்ட போதிலும், பாதுகாப்பு வலயத்திற்குள் பொதுமக்கள் பட்டினியால் வாடுவதால் கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பு











# உயர் பாதுகாப்பு வலயத்தில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை – 28.04.2009

சிறீலங்கா இராணுவம் மாலை 6:00 மணி முதல் குறைந்தது 2,600 Multi-Barrel Rocket Launcher (MBRL) ராக்கெட்டுகள், 1,000 க்கும் மேற்பட்ட பீரங்கி குண்டுகள் மற்றும் குறைந்தது 2,000 கனரக மோட்டார் குண்டுகளை வீசியது. திங்கட்கிழமை காலை 11:00 மணி வரை, வன்னியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். முள்ளிவாய்க்கால், தாழம்பன், ஒட்டைப்பனையடி மற்றும் இரட்டைவாய்க்கால் பகுதிகளில் உள்ள சிவிலியன் தங்குமிடங்களை சிறீலங்கா இராணுவத்தினாலல் ஏவப்பட்ட பெரும்பாலான குண்டுகள் தாக்கின. விடுதலைப்புலிகளினால் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட பொதுமக்களின் புள்ளிவிவரங்களை வெளியிட்டனர். மேலும் மூன்று மருத்துவ மையங்கள் நூற்றுக்கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளித்தன. நாள் முழுவதும் காயமடைந்த பொதுமக்கள். சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுக்கள் ஒட்டைப்-பனை மற்றும் இரட்டைவாய்க் கால் பகுதிகளில் கொத்து குண்டுகளை வீசி தாக்கியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவர்கள், முதலுதவி வசதிகளுடன் கூடிய இரண்டு திலீபன் மருத்துவ நிலையங்கள் மற்றும் இரு மாவட்டங்களின் RDHS ஆல் நடத்தப்படும் முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனை, கடந்த 3 நாட்களுக்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக விடுதலைப் புலிகள தெரிவித்தனர்.

நாள் முழுவதும் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால், உயிரிழப்பு புள்ளிவிவரங்களை சுயாதீனமாக சரிபார்ப்பது சாத்தியமில்லை.









# வடக்கு முள்ளிவாய்க்கால் பகுதியில் 160 பொதுமக்கள் படுகொலை 29.04.2009

சுமார் 120,000 பொதுமக்களுடன் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் 5 கிலோமீற்றர் நீளமும் 1.5 கிலோமீற்றர் அகலமும் கொண்ட குறுகிய நிலப்பரப்பில் சிறீலங்கா இராணுவத்தினர் தாக்குதல்கள் பொதுவாக அதிகாலையில் தொடங்கும். சிறீலங்கா கடற்படையின் கடற்படைக் கப்பலில் இருந்து 100 மி.மீ கனரக பீரங்கி மற்றும் இயந்திர துப்பாக்கிச் சூடுகள் மாலை 4:00 மணியளவில் தொடங்கியது.



முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே புதன்கிழமை காலை 160 பொதுமக்களின் சடலங்களை மீட்புப் பணியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

மாலை 4.00 மணிக்குப் பிறகு சுமார் 150 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும். புதன்கிழமை, மீட்புப் பணியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

மாலை 4.00 மணியளவில் சிறீலங்காப் படையினரின் பீரங்கி மற்றும் பீரங்கித் துப்பாக்கிச் சூட்டில் மருத்துவமனை தாக்கியதில் 9 நோயாளிகள் கொல்லப்பட்டனர் மற்றும் 15 பேர் காயமடைந்தனர் என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியில் 15,000 முதல் 20,000 பொதுமக்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர் என்று சிறீலங்கா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதன்கிழமை தெரிவித்தார். முன்னதாக, இந்தியாவில் ராஜபக்சேவும் அவரது போர் கூட்டாளிகளும் பாதுகாப்பு வலயத்தில் மொத்தம் 70,000 பேர் மட்டுமே இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். எனினும் புதனன்று ராஜபக்ச பிடிபட்ட பொதுமக்களின் எண்



ணிக்கை மட்டும் 180,000 என்று கூறினார்.

“திரு. ராஜபக்சவின் பொய்கள் சர்வதேச கவலைகளை மழுங்கடிப்பதையும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் எஞ்சியுள்ள பொதுமக்களை பட்டினி கிடப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன” என்று வன்னியில் உள்ள அரச சார்பற்ற


JATHU
KITCHEN & RENOVATION
உங்கள் கனவுகளை
அடைய நாங்கள்
உதவுகிறோம்..
வீடு சீரமைப்பு
சேவைகளுக்கு
அழையுங்கள்
Custom Kitchen
Kitchen Counter Top
Kitchen Cabinets
Plumbing
Washroom Full Work
Electrical
Pot Light
Painting
Ground Moulding
Basement
Flooring
Free!
ESTIMATES
Stairs
Tiles
Windows
Garage Door
Patio Door
Carpet
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...? (Door & Windows)
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த புவனேகபாகு வெளியிட்ட முரகப் பொருமானைக் குறிக்கும் அரிய நாணயங்கள்

யாழ்ப்பாண அரசு கால நாணயங்கள் பற்றி ஆராய்ந்த பலரும் அவர்கள் சேது என்ற மங்கல மொழி பொறித்த நாணயங்களை மட்டுமே வெளியிட்டனர் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் எமது தொல்லியல் ஆய்வின்போது கண்டுபிடித்த நாணயங்களில் இருந்து யாழ்ப்பாண மன்னர்கள் சேது மொழி பொறித்த நாணயங்களுடன் கந்தன், ஆறுமுகன் ஆகிய பெயர்கள் பொறித்த நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. வடஇலங்கையில் இவ்வகை நாண யங்கள் பிறராலும் கண்டுபிடிக்கப்பட்டமைக்கு அல்லது சேகரிக் கப்பட்டமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. 1982 இல் நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த காலத்தில் இவ் வகை நாணயங்கள் சிலவற்றை ஈவ்லின் இரத்தினம் ஆய்வு நிறுவத்தின் சேகரிப்பில் இருந்ததைப் பார்த்துள்ளேன். அவை பேராசிரியர் இந்திரபாலாவின் சேகரிப்பாக இருக்கவேண்டும். அண்மையில் இந்நாணயங்கள் தொடர்பான எனது ஆய்வுக் கட்டுரையைப் படித்த தென்னிலங்கை நாணயவியல் அறிஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நகைக்கடையொன்றில் இருந்து வாங்கியதாகக் கூறி இந்நாணயங்களின் புகைப்படங்களை அனுப்பியிருந்தார். இவற்றை நோக்கும் போது இந்நாண யங்கள் வடஇலங்கையில் புழக்கத்தில் இருந்தன என்பது மேலும் தெரியவருகின்றது.

இந்நாணயங்களின் எடை, வடிவமைப்பு, அவற்றில் பொறிக் கப்பட்டுள்ள சின்னங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இருவகையாகப் பிரிக்க முடிகின்றது. அவற்றுள் முதலாவது வகை, நாணயத்தில் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ள மயில் சின்னம். ஏனைய நாணயங்களில் மயிலின் வாயில் பாம்புச் சின்னம் காணப்படுகின்றது. ஆனால் இந்நாண யத்தில் உள்ள சின்னம் பாம்பு உருவத்திலிருந்து சற்று வேறுபட்ட உருவமாகக் காணப்படுகின்றது. மயிலுக்கு மேலே விளிம்பை ஒட்டியவாறு பிறைச்சந்திரன், சூரியன் என்பன காணப்படுகின்றன. நாணயத்தின் பின்புறத்தில் வேல் சின் னத்துடன் தமிழில் ‘கந்’(தன்) என்ற பெயர் காணப்படுகின்றது. இதன் கீழ், கால்களைக் குறிக்கும் இரு கோடுகள் காணப் படுகின்றன. இரண்டாவது வகை நாணயத்தில் உள்ள மயில், இடப்புறம் பார்த்த நிலையில் காணப்படுவதுடன் அதன் வாயில் காணப்படும் பாம்பும் தெளிவாகத் தெரிகின்றது. நாணயத்தின் பின்புறத்தில் ‘ஆ’ என்ற எழுத்துக் காணப்படுகிறது. இதனுடன் இணைந்த நிலையில் முதலாவது நாணயத்தில் வருவது போல் மனித வடிவில் அமைந்த கால் உருவங்கள் காணப்படு கின்றன. இதற்கு இடது, வலது புறமாக முதலாவது நாணயத் தில் வரும் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வகை நாண யங்கள் வடஇலங்கையைத் தவிர இலங்கையின் ஏனைய பாகங்களிலோ தென்னிந்தியாவிலோ இதுவரை கண்டுபிடிக் கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்நாணயங்களில், தமிழக அரசவம்சங்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் முக்கிய சின்னமாக இடம்பெறும் அரச இலச்சினைகள் எவையும் காணப்படவில்லை. இதனால் இந்நாணயங்கள் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்டதெனக் கூறமுடியும். இக்கருத்தை உறுதிப்படுத்தும் மேலும் சில ஆதாரங்களும் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இரு நாணயங்களில் ஒன்றில் மயில், வேல் சின்னத்தோடு ‘கந்’ என்ற பெயரும், மற்றையதில் இதே சின் னங்களுடன் ‘ஆ’ என்ற எழுத்தும் இடம் பெற்றுள்ளன. இரு நாணயங்களிலும் உள்ள மயிலின் தோற்ற அமைப்பு, சின்னங் களிடையே காணப்படும் ஒற்றுமைகள், நாணயங்களின் வடி வமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பிட்ட காலப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு வம் சத்தால் அல்லது மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் என்பது தெரிகின்றது. இரு நாணயங்களிலும் மயில், வேல் ஆகியவை முக்கிய சின்னங்களாக இடம் பெற்றிருப்பதைக் கொண்டு, இந்நாணயங்களை வெளியிட்ட மன்னர்களும் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட மக்களும் முருகவழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது. சேது மொழி பொறித்த நாணயங்கள் வெளியிப்பட்ட காலத்திலும் யாழ்ப்பாண அரசில் முருகவழிபாடு முக்கியத்துவம் பெற் றிருந்ததை எமது ஆய்வில் கண்டுபிடித்த நாணயங்கள் உறுதி செய்கின்றன. அந்நாணயங்களில் நந்திக்கு முன்னால் முருக வழிபாட்டை அடையாளப்படுத்தும் மயில் சின்னம், சிறிய வடிவமாகக் காணப்படுகின்றது. ஆனால் இந்நாணயங்களில் மயில் சின்னம், வேல் சின்னத்துடன் முக்கிய சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள ‘கந்’, ‘ஆ’ என்பவை கந்தன், ஆறுமுகன் ஆகிய தெய்வப் பெயர்களின் குறுக்கமாகக் காணப்படுகின்றன. அப்பெயர்கள் இறைவனின் தலைப்பாகத்தையும், கீழ் உள்ள பாகம் இறைவனின் உடற் பாகத்தையும் குறிக்கின்றன. இம்மரபில் நாணயங்கள் வெளி யிடும் முறை இடைக்காலத் தென்னிந்தியாவிலும் இருந் துள்ளது. இதற்கு, சேரமன்னர் நாணயங்களில் பயன்படுத்திய



புவனேகபாகு வெளியிட்ட
முருகப் பெருமானைக் குறிக்கும் நாணயங்கள்.

‘ச’ என்ற எழுத்தையும் (Mitchiner 1998 : 160 - 1) மூன்றாம் வல்லாள மன்னன் ஆட்சியில் (கி.பி.1292 - 1345) வெளியிட்ட நாணயங்களில் வரும் ‘ப’ என்ற எழுத்தையும் உதாரணங் களாகக் குறிப்பிடலாம். இங்கே ‘ஆ’ என்ற எழுத்திற்கும் ‘கந்’ என்ற பெயருக்கு கீழே நடுவில் உள்ள பகுதி, இறைவனின் இடுப்புடன் இணைந்த காற்பகுதியாகத் தோன்றுகின்றது. இதை ‘ஆ’ என்ற எழுத்துப் பொறித்த நாணயங்களில் தெளிவாகக் காணமுடிகின்றது.

இந்த இடத்தில், யாழ்ப்பாண அரசு காலத்தில் நல்லூரில் அமைக் கப்பட்ட கந்தன் ஆலயம் தொடர்பாக கைலாயமாலையில் வரும் குறிப்பை மேற்கூறப்பட்ட நாணயங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இந்நாணயங்களை வெளியிட்ட மன்னன் யார் என்பது ஓரளவுக்குத் தெரியவரலாம். கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள், நல்லூரில் கந்தன் ஆலயத்தையும் யாழ்ப்பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக் கூறுகின்றது. இச்செய்யுள் குறிக்கும் காலத்தைச் சக வருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக்கொண்டு, பத்தாம் நூற்றாண் டில் வாழ்ந்த தமிழ் மந்திரி புவனேகபாகு காலத்தில் அரசும் கந்தன் ஆலயமும் தோன்றியதாக முதலியார் இராசநாயகம் அவர்கள் கூறுகின்றார். ஆனால் இக்கூற்றை ஏற்கக் கூடிய அளவுக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. இலங்கையில் புவனேகபாகு என்ற பெயரில் 7 மன்னர்கள் ஆட்சி புரிந்துள் ளனர். இவர்களுள் 6 ஆம் பராக்கிரமபாகு தென்னிலங்கையில் ஆட்சி செய்த காலத்தில், அவன் வளர்ப்பு மகனாகிய சபுமால் குமரயா என்ற மலையாள இளவரசன், (செண்பகப்பெருமாள்) 1540 இல் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சிபுரிந்துள்ளான். இதை யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியில் கிடைத்த இவனது காலத் தமிழ்க் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது. இக்கல்வெட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் இருந்த தேநீர் சாலையில் வாசல் படியாகப் பயன்படுத்தப்பட்ட கற்தூணில் எழுதப்பட் டிருந்தது. 25 வரிகளில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில், 15 வரிகளே ஓரளவு தெளிவாகக்காணப்பட்டன. 1968 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியற்திணைக்களம் இக்கல்வெட் டைப் படியெடுத்திருந்தாலும், 1969 ஆம் ஆண்டு பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் மீளப்படியெடுத்து அவரால் வாசிக்கப் பட்டதன் பின்னரே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் வெளிச்சத்திற்கு வந்தது. அக்கல்வெட்டிலிருந்து யாழ்ப்பாண வைபமாலை, கைலாயமாலை முதலான நூல்கள் குறிப்பிடும் புவனேகபாகு கி.பி.15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிந்த செண்பகப்பெருமாள் என்பதும், அவனே கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகுவின் பெயரில் இக்கல்வெட்டை வெளியிட்டான் என்பதும் தெரியவந்துள்ளது. மேலும்

இக்கல்வெட்டு ஒரு கட்டிடத்தின் பாகமாக இருப்பதால் அது புவனேகபாகு கட்டிய நல்லூர் கந்தன் ஆலயமாக இருந்திருக்கலாம் எனப் பேராசிரியர் இந்திரபாலா கூறுகின்றார்.

இந்நாணயங்கள் சேதுமொழி பொறித்த நாணய மரபில் இருந்து வேறுபட்டு இருப்பதைக் கொண்டு யாழ்ப்பாண அரசை ஆட்சி புரிந்த செண்பகப்பெருமாளே இந்நாணயங்களை வெளியிட்டுள்ளான் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இம்முடிவைப் பொருத்தமானதெனக் கூறியுள்ள பேராசிரியர் பத்மநாதன் இந்நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய தனது கருத்தையும் அண்மைக்கால ஆய்வொன்றில் பின்வருமாறு கூறுகிறார்:

‘கந்’ என்ற எழுத்துக்கள் கந்தசாமியினது பெயரையும், ‘ஆ’ என்ற எழுத்து ஆறுமுகசுவாமியினது பெயரையுங் குறிப்பனவாதல் வேண்டும். அவ்வாறாகில் இந்த நாணயங்கள் கந்தக் கடவுளின் பெயரால் வழங்கப்பட்டவை. அவற்றைச் செண்பகப் பெருமாள் வெளியிட்டான் என்று கொள்ள முடிகின்றது. ஆதியான கந்தசாமி கோயிலை அவனே அமைத்தான் என்பது பல நூற்றாண்டுகாலமாக நிலவி வரும் ஐதீகம் என்பது குறிப்பிடற்குரியது. இந்த அடிப்படையில் நோக்குமிடத்து யாழ்ப்பாண தேசத்தவரது சமய வழிபாட்டு மரபுகளுக்கும் மொழி வழக்கிற்கும் ஏற்றவகையிலேயே தனது பதவிக்கும் அதிகாரத்திற்கும் உரிய சின்னங்களை அமைத்துக் கொண்டான் என்பது தெளிவாகிறது. அது பிரமிக்கத்தக்கவொன்று. அது குடியாட்சி அரசியல் நெறி புரிந்துணர்வின் வழி ஏற்பட்ட நல்லெண்ணத்தின் அடையாளம். நல்லெண்ணத்திற்கு நல்லதொரு உதாரணம்”(பத்மநாதன், சி.2011).



சேது நாணயங்கள்




கைலாயமாலை

Image source - tamil.wiki

## ஸ்ரீபுவனேகபாகு பெயரில் செண்பகப்பெருமாள் வெளியிட்ட நாணயங்கள்

அண்மைக்காலத்தில் வட இலங்கையில் மேற்கொள்ளப்பட தொல்லியல் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துப் பொறித்த நாணயங்கள் யாழ்ப்பாண அரசு பற்றிய ஆய்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்தவையாகக் காணப்படுகின்றன. அவற்றுள் நந்தி உருவம் பொறித்த நாணயங்களின் பின் பக்கத்தில், தேவநாகரி எழுத்துப் பொறிப்புள்ளவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவ்வெழுத்துக்களின் வரி வடிவமைப்பை நோக்கும் போது அவை மேலே குறிப்பிட்ட ஸ்ரீசாவக என்ற பெயர்களை ஒத்ததாகவே முதலில் தோன்றியது. ஆனால் 2017 இல் கட்டுக்கரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் மேலும் இவ்வகையான நாணயங்கள் கிடைத்தன. அவற்றின் எழுத்துக்கள் இடையே சில வேறுபாடுகள் காணப்பட்டதனால் இவ்வெழுத்துக்களை வாசிப்பதில் புலமையுடைய தமிழகத் தொல்லியற் துறையின் ஓய்வு பெற்ற மூத்த கல்வெட்டு அறிஞரான கலாநிதி இராஜகோபால் அவர்களுக்கு அவற்றின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன். அவர், மைசூர் சாசனவியலாளர் - அறிஞர் கலாநிதி முனிரத்தினம் அவர்களுடன் இணைந்து, நாணயங்களில் உள்ள எழுத்துக்களை நந்தி நாகரி என அடையாளப்படுத்தி அதில் பொறிக்கப்பட்ட பெயரை ‘ஸ்ரீபுவனேகபாஹு’ என வாசித்துள்ளார். இந்த வாசிப்பையே தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டுப் பேராசிரியரான இராஜவேலு அவர்களும் பொருத்தமானதென உறுதிப்படுத்தி உள்ளார். இலங்கை வரலாற்று ஆய்வாளர்களுக்கு நன்கு பரிச்சயமான ‘ஸ்ரீபுவனேகபாஹு’ என்ற பெயரைத் தமிழக அறிஞர்கள் அதிகம் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இந்நிலையில், நாணயத்தில் உள்ள எழுத்துக்களை வைத்து இப்பெயர் வாசிக்கப்பட்டமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இந்நாணயங்களின் வடிவமைப்பு, நாணயத்தின் முன்பக்கத்தில் உள்ள நந்தியின் தோற்ற அமைப்பு, யாழ்ப்பாண அரசு கால வரலாற்றுப் பின்னணி என்பவற்றை வைத்துப் பார்க்கும் போது இந்நாணயங்கள் யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்டதாகத் தோன்றுகின்றது. இதில் உள்ள பெயரை ‘ஸ்ரீபுவனேகபாஹு’ என வாசித்துள்ளமை பொருத்தமாகவே தோன்றுகின்றது. ஏனெனில் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு சார்பாக அவனின் வளர்ப்பு மகனும், மலையாள இளவரசனுமான செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்தது பற்றி ‘கோகில சந்தேஸய’ என்ற சிங்கள இலக்கியம் கூறுகின்றது. இவன் இலங்கை வரலாற்றில் செண்பகப்பெருமாள் என்ற பெயருடன் சபுமல்குமாரயா, புவனேகபாகு என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டான். யாழ்ப்பாண அரசு தொடர்பாக, பிற்காலத்தில் எழுந்த யாழ்ப்பாண வைபவமாலையும், கயிலாயமாலையும் புவனேகபாகு என்னும் அமைச்சனே நல்லூர் நகரத்தையும் நல்லூர்கந்தசாமி கோவிலையும் கட்டுவித்தான் எனக் கூறுகின்றன. இதை நல்லூர் ஆலயத்தில் இன்றுவரை ஓதப்பட்டு வரும் கட்டியம் மேலும் உறுதிசெய்கின்றது. இவனே 1450 தொடக்கம் 1467 வரை யாழ்ப்பாண அரசில் ‘புவனேகபாஹு’ என்ற பெயரில் ஆட்சி செய்த செண்பகப்பெருமாள் என்பதை பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் யாழ்ப்பாண பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் உறுதிசெய்துள்ளார். இக்கூற்றையே ‘புவனேகபாஹு’ வெளியிட்ட நாணயங்கள் மேலும் உறுதிசெய்வதாகக் கூறலாம்.

செண்பகப்பெருமாள் கோட்டை மன்னன் சார்பாக, யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ‘புவனேகபாஹு’ என்ற பெயருடன் ஆட்சி செய்த போதும், அவன் தனது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த தமிழ் மக்களின் மத நம்பிக்கைகளையும், பண்பாட்டையும் பெரிதும் அனுசரித்து ஆட்சி செய்த மன்னனாகவே காணப்படுகின்றான். இதனை இவன் வெளியிட்ட தமிழ்க் கல்வெட்டும் கந்தன், ஆறுமுகன் பெயரில் வெளியிட்ட நாணயங்களும் உறுதிசெய்கின்றன. மேலும், யாழ்ப்பாண இராசதானியைத் தோற்றுவித்த, பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகளின் அரச இலச்சினையாக நாணயங்களில் பயன்படுத்திய நந்தியை, ‘புவநேகபாஹு’ தனது நாணயங்களிலும் பயன்படுத்தியதன் மூலம் இது மேலும் உறுதியாகின்றது. ஆயினும் சேது மொழி பொறித்த நாணயங்களுக்கும் ‘புவனேகபாஹு’ வெளியிட்ட நாணயங்களுக்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்த வேறுபாடுகள் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய நாணய மரபை நினைவுபடுத்துவதாகவே உள்ளன. ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் அறிமுகப்படுத்திய நாணயங்களில் நந்திக்கு கீழே ‘சேது’ என்ற மங்கல மொழி காணப்படுகின்றது. ஆனால் ‘புவனேகபாகபாஹு’ வெளியிட்ட நாணயங்களில் சேது மொழிக்குப் பதிலாக நந்திக்கு கீழே மங்கலத்தைக் குறிக்கும், மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடம் காணப்படுகின்றது. இப்பீடம் இலங்கையில் தமிழ் - சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் தனித்துவமான அம்சமாகும். அம்மரபு யாழ்ப்பாண இராசதானி காலத்திலும் தொடர்ந்ததற்கு ‘புவனேகபாஹு’ வெளியிட்ட நாணயங்களை ஆதாரமாகக் கொள்ளலாம்.

சேது மொழி பொறித்த எல்லா நாணயங்களிலும் படுத்திருக்கும் நந்தி வலப்பக்கம் பார்த்த நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் ‘புவனேகபாஹு’ வெளியிட்ட நாணயங்களில் உள்ள நந்தி வலப்பக்கமாக மட்டுமன்றி இடப்பக்கமாகவும் பார்த்த நிலையில் காணப்படுகின்றது. இம்மரபு யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர், வடஇலங்கையில் இருந்த அரசுகளால் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் காணப்படுகின்றது. இதனால் இம்மரபை ‘புவனேகபாஹு’ தான் வெளியிட்ட நாணயங்களிலும் பின்பற்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. சேது மொழி பொறித்த நாணயங்கள் தமிழ் மொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் ‘புவனேகபாஹு’ நாணயம் வடமொழியில் வெளியிடப்பட்டுள்ளது. சமகாலத்தில் தென்னாசியாவில், கல்வெட்டுக்கள் சுதேச மொழியில் வெளியிட்டாலும் நாணயங்களை வடமொழியில் வெளியிடும் மரபே பெரும்பாலும் காணப்பட்டது. இதற்கு, பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களைத் தமிழில் வெளியிட்ட சோழர், நாணயங்களை வடமொழியில் வெளியிட்டதை உதாரணமாகக் காட்டலாம். இவர்களைப் பின்பற்றியே சிங்கள மன்னர்களும் கல்வெட்டுக்களைச் சிங்கள மொழியில் வெளியிட்டபோதும் நாணயங்களை வடமொழியில் வெளியிட்டுள்ளனர். இதற்கு, நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் வடமொழி பொது மொழியாக இருந்ததே காரணம் என அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த நோக்கத்திலேயே ‘புவனேகபாஹு’ வும் தனது நாணயங்களை வடமொழியில் வெளியிட்டான் எனக் கருத இடமுண்டு.

நன்றி: பரமு புஷ்பரட்ணம், எழுநா முகநூல்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு

தொடர்புகளுக்கு 437.345.4203


வீரவணக்கம்
லெப். கேணல் கலையழகன்
சிவபாதசுந்தரம் ஞானசீலன்
02.09.1976 - 18.04.2007
(யாழ் மாவட்டம்)
லெப். கேணல் காந்தன்
(வீ. நாள் 28.01.2009)
மேஜர் இளந்தி
(வீ. நாள் 11.03.2009)
லெப். கேணல் உமாசுதன்
(வீ. நாள் 09.03.2009)
மேஜர் வழுதி
(வீ. நாள் 11.03.2009)
லெப். கேணல் எழில்செல்வன்
(வீ. நாள் 11.03.2009)
கப்டன் கலையழகன்
(வீ. நாள் 30.03.2009)
எம்மிடையே வாழ்ந்த தேசத்தின் தூண்களைத் - தாய்
மண்ணிடை விதைத்தோம் விடுதலைப் பயணத்தில்
விண்ணிடை ஏகிய எங்கள் இன்னுயிர்த்தோழரை
மீண்டும் பிறந்திடவைப்போம் ஈழம்மீட்பதன் மூலம்.
லெப். கேணல் தமிழ்மணி
(வீ. நாள் 22.03.2009)
லெப். செவ்வேள்
(வீ. நாள் 15.10.2008)
லெப். கேணல் அசோக்
(வீ. நாள் 02.04.2009)
2ம் லெப். மாதுளன்
(வீ. நாள் 11.10.2008)
2ம் லெப். குறட்பருதி
(வீ. நாள் 16.10.2008)
லெப். ஈழவேந்தன்
(வீ. நாள் 07.03.2009)
லெப். ஈழச்செல்வன்
(வீ. நாள் 16.10.2008)
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் – The Thirst of Tigers is the Homeland of Thamileelam"

# பிரித்தானியாவின் தடை உணர்த்துவது?

06.04.2025

பிரித்தானியா இலங்கையில் போர்க் காலத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதில் சம்பந்தப்பட்ட நான்கு பேருக்கு தடை விதித்திருக்கிறது. இதுவரை காலமும் கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் தடை விதித்திருக்கின்றன. பிரித்தானியா இவ்வாறு தடை விதித்திருப்பது இதுதான் முதல் தடவை.

முதலில் இந்த தடை வெளிவந்திருக்கும் பின்னணியைப் பார்க்கலாம். 58 ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் இன்று முடிவடைகிறது. அக்கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்திலேயே பிரித்தானியாவின் தடை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரு கிழமைகளுக்கு முன்பு ஜெனிவா கூட்டத் தொடரின் பின்னணியில், அல்ஜசிராவின் "ஹெட் டு ஹெட்" நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. அந்த நிகழ்ச்சியும் இப்பொழுது வெளிவந்திருக்கும் பிரித்தானியாவின் தடையும் ஏறக்குறைய ஒரே நோக்கத்தை கொண்டவை. சீன இடதுசாரி மரபில் வந்த ஜேவிபியை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு இரண்டு வரையறைகளை உணர்த்துவதே இந்தத் தடை மற்றும் அல்ஜசீராவின் நேர்காணல் இரண்டினதும் நோக்கம் எனலாம். முதலாவது வரையறை இந்த அரசாங்கம் சீனாவை நோக்கிச் சாய்வதில் உள்ள வரையறை. இரண்டாவது இனப்பிரச்சினை தொடர்பில் பொறுப்புக்கூறாமல் தப்புவதில் உள்ள வரையறை. இதை இன்னும் அறுத்துறுத்துச் சொன்னால், பொறுப்புக்கூறல் என்ற கவர்ச்சியான தலைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தை தமது செல்வாக்கு மண்டலத்துக்குள் வைத்திருப்பதற்கான அழுத்தங்கள்.

பிரித்தானியாவின் தடை நான்கு பேர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் மூவர் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்த அரச படைப்பிரதானிகள். ஒருவர் தமிழ்த் தரப்பில் ஒரு தளபதியாகவிருந்து பின்னர் அரச தரப்புடன் இணைந்த கருணா. இந்த நால்வரும் இலங்கைத்தீவின் சிவில் யுத்தத்தில் செய்த குற்றங்களுக்கு எதிராகவே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பிரித்தானிய அரசின் வெளிவிவகார, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையில், கருணாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த காலமும் பின்னர் அரச தரப்போடு இணைந்து செயல்பட்ட காலமும் உள்ளிட்ட சிவில் யுத்த காலகட்டத்தில் செய்த குற்றங்கள் என்றுதான் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த உத்தியோகபூர்வ குறிப்பில் கருணா தொடர்பாக கூறப்படுகையில் "பயங்கரவாதக் குழுவான விடுதலைப் புலிகள் இயக்கம்" என்ற சொற்பிரயோகம் உண்டு.

நாலாம் கட்ட ஈழப்போரில் கருணா அரச தரப்புடன் இணைந்து செயல்பட்டதை வைத்து இந்த தடை அரசு படைப்பிரதானிகளுக்கும் அரசாங்கத்தோடு இணைந்து செயல்பட்ட கருணாவுக்கும் எதிரானது என்றுதான் ஒரு பொதுவான தமிழ் விளக்கம் காணப்படுகின்றது. ஆனால் அது முழு உண்மையல்ல. இந்தத் தடைக்குள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளும் உண்டு. ஏற்கனவே ஐநாவின் அறிக்கைகளில் "போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புக்களுக்கும்" எதிராக என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கு தொகுத்துக் கவனிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக பயனபடுத்தப்பட்ட வார்த்தைகளிலும் "மனித உரிமை மீறல்கள், மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள்" போன்ற வார்த்தைகள்தான் காணப்படுகின்றன. இன அழிப்பு என்ற வார்த்தை இல்லை. அதாவது பிரித்தானியாவின் தடையானது நடந்தது இனஅழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த 15ஆண்டுகளாக ஐநாவின் அறிக்கைகளிலும் அதுதான் காணப்படுகின்றது. அங்கேயும் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்றவை இனஅழிப்பு என்று உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதில் ஒப்பீட்டளவில் கனடாவில் நிறைவேற்றப்பட்ட இரு தீர்மானங்கள் இன அழிப்பு என்பதனை ஏற்றுக்கொள்கின்றன. தீர்மானங்களில் இன அழிப்பு என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது கனடாவின் இலங்கை தொடர்பான வெளியுறவு அணுகுமுறைகளில் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை. அதாவது ஒரு இராஜதந்திர முடிவாக அது நடைமுறையில் இல்லை.

எனவே கடந்த 15 ஆண்டுகளாக மேற்கத்திய நாடுகளும் ஐநாவும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளைத் தொகுத்துப் பார்த்தால் அங்கே ஒரு பொதுத் தன்மையைத் தமிழர்கள் கண்டுபிடிக்கலாம். அது என்னவென்றால் இலங்கைத் தீவில் இடம்பெற்றது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வ வெளியுறவுக் கொள்கை நிலைப்பாடாக மேற்கு நாடுகள் இதுவரை எடுத்திருக்கவில்லை. ஐநாவும் அது இனப்படுகொலை என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. இது முதலாவது.

இரண்டாவது, கடந்த 15 ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடைகளை எல்லா நாடுகளும் தொடர்ந்து பேணுகின்றன. தாயகத்தில் செயல்படாத ஒரு அமைப்புக்கு எதிராகத் தடையைத் தொடர்ந்து பேணுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்த முற்படும் வரையறைகள் எவை?

மூன்றாவது, ஐநாவில் இலங்கை இனப்பிரச்சினையானது வரையறுக்கப்பட்ட ஆணையைக் கொண்ட ஐநாவின் உறுப்பாகிய மனித உரிமைகள் பேரவைக்குள்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் பேரவையானது ஐநாவின் 8 உறுப்புகளில் ஒன்று. பாதுகாப்புச் சபை, பொதுச் சபை போன்று அதிகாரம் மிக்கதல்ல. ஒரு நாட்டுக்கு எதிராக படையினரை அனுப்புவதற்கோ அல்லது பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கோ தேவையான ஆணை மனித உரிமைகள் பேரவைக்குக் கிடையாது. சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மட்டுமே மனித உரிமைகள் பேரவை அந்த நாட்டில் இறங்கி வேலை செய்யலாம்.

குறிப்பாக 2021 ஆம் ஆண்டிலிருந்து ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் ஓர் அலுவலகம் இயங்கி வருகிறது. இலங்கைத்தீவின் போர்க்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம் அது. அப்படி ஒரு பொறிமுறை வேண்டும் என்று 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்த்தேசியக் கட்சிகள் கூட்டாக ஒரு கடிதத்தை எழுதின. அந்தப் பொறிமுறையானது மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே பொறுப்பு கூறலைக் கொண்டு போகவேண்டும் என்பது கடிதத்தின் சாராம்சம் ஆகும். மேலும் அந்தப் பொறிமுறைக்கு ஒரு கால வரையறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கூட்டுக் கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கோரிக்கைகளில் பெரும்பாலானவை ஐநாவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 2021ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அந்தப் பொறிமுறையானது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு உட்பட்ட ஓர் அலுவலகமாகத்தான் உருவாக்கப்பட்டது. அதாவது பலவீனமான ஆணையை கொண்டது.

இதுதான் ஐநாவில் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடியவற்றின் வரையறை. இவ்வாறு கடந்த 15 ஆண்டு காலமாக மேற்கை மையமாகக் கொண்ட, அல்லது ஐநாவை மையமாகக் கொண்ட நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தின் விளைவுகளைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் சித்திரம் கிடைக்கும்.

மேற்கு நாடுகள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் அதே சமயம் நீதிக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அதோடு தமிழ் மக்களுக்கு அனைத்துலக அளவில் இருக்கக்கூடிய இராஜதந்திர வாய்ப்புகளின் வரையறைகளையும் அவை உணர்த்துபவைகளாகக் காணப்படுகின்றன.

எனினும் 15 ஆண்டுகளின் பின்னரும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்ட வழியில் தமிழ் மக்கள் மெதுமெதுவாக முன்னேறி வருகிறார்கள் என்பதனை பிரித்தானியாவின் தடை உணர்த்துகின்றது. குறிப்பாக நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் பெற்ற ஆகப்பிந்திய வெற்றியாகவும் அதைக் கூறலாம். அண்மையில் கனேடிய உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் அத்தகையதே. கனடாவில் நிறைவேற்றப்படட இனஅழிப்பு அறிவூட்டடல் தீர்மானத்திற்கு எதிரான வழக்கில், கனேடிய உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டுவது.

இவை யாவும் வரையறைக்குட்பட்ட வெற்றிகள்தான். நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் மேலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் விதித்திருக்கும் தடைகளும் குறிப்பாக கனடாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உற்சாகமூட்டுபவை. அதேசமயம் மேற்கு நாடுகளின் மேற்படி நகர்வுகள் யாவும் அந்தந்த நாடுகளின் பூகோள இராணுவ அரசியல் பொருளாதார நலன்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகள் தான் என்பதையும் தமிழர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அதை அவர்கள் தமிழ் மக்களின் பெயரால் "பொறுப்புக்கூறல்" என்ற தலைப்பின் கீழ் இராஜதந்திரமாக முன்னெடுக்கின்றார்கள்.

இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் மட்டுமல்ல இந்தியா, சீனா, ஐநா முதலாக உலகில் எந்த ஓர் அரசுக் கட்டமைப்பும் இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் அவ்வாறுதான் முடிவுகளை எடுக்கும். அரசுகள் எப்பொழுதும் தங்களுடைய இராணுவப் பொருளாதார அரசியல் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். ஏன் கடவுளுக்கு ஓர் அரசிருந்து அங்கு முடிவு எடுக்கப்பட்டாலும் அப்படித்தான் அமையும்.



General Shavendra Silva



Admiral Wasantha Karannagoda



Lt. General Jagath Jayasuriya



Karuna

இதில் தமிழர்கள்தான் தங்களுடைய நலன்களும் வெளி அரசுகளின் நலன்களும் இடை வெட்டும் ஒரு பொதுப் புள்ளியைக் கண்டுபிடித்து அங்கிருந்து தொடங்கி தமக்குக் கிடைத்திருக்கும் இராஜதந்திர வாய்ப்புகளை எப்படி முழு வெற்றியாக மாற்றுவது என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். அதாவது தமிழ் மக்கள் உலக அளவில் தங்களுக்குள்ள வரையறைகளையும்

வாய்ப்புகளையும் நன்கு விளங்கி வைத்திருக்க வேண்டும். கிடைத்திருக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி வரையறைகளை எப்படிக் கடப்பது அல்லது உடைப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும்.




| Name(s) |
|---|
| Primary Name: Vinayagamoorthy , MURALITHARAN<br>Alias: Colonel Karuna, AMMAN |

| Contact Details |
|---|
| |

| Individual Information | |
|---|---|
| - D.O.B: 22/06/1966 - Nationality(/ies): Sri Lanka - Gender: Male - Town of birth: Kiran - Country of birth: Sri Lanka | |

| UK Statement of Reasons |
|---|
| Vinayagamoorthy Muralitharan, also known as Colonel Karuna Amman, is an involved person within the meaning of the Global Human Rights Sanctions Regulations 2020 on the basis that he has been and remains responsible for an activity that amounts toserious violations and abuses of an individual's right to life and right not to be subjected to torture or cruel, inhuman or degrading treatment or punishment. Specifically, LTTE forces and a breakaway pro-government fraction of the LTTE 'Karuna Group', under Vinayagamoorthy Muralitharan's command, were directly involved in illegal killings and torture or cruel, inhuman or degrading treatment or punishment, during Sri Lanka's 26-year-long armed conflict. |

கடந்த 15 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட தடைகளும் தீர்மானங்களும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு கிடைத்த உற்சாகமூட்டும் வெற்றிகளாகும். தமிழ் மக்கள் யாருக்கு எதிராக நீதியைக் கேட்டு போராடுகிறார்களோ அவர்கள் அங்கு தண்டிக்கப்படுகிறார்கள். மேற்கு நாடுகளின் தடைகள் ஒருவிதத்தில் தமிழ் மக்களுக்கும் வரையறைகளை உணர்த்துபவைதான். என்றாலும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக அதன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்திகளாக அவை காணப்படுகின்றன. இந்த விடயத்தில் மேற்கு நாடுகள் தங்களோடு முழுமையாக இல்லை என்று கருதி தமிழ் மக்கள் அவற்றுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கத் தேவையில்லை. தடைகள் விடயத்தில் மேற்கும் ஐநாவும் அரைவாசி அளவுக்கு தமிழ் மக்களுக்குச் சாதகமாக நிற்கின்றன. எனவே தமக்கு கிடைத்திருக்கும் பாதியளவு சாதகமான இராஜதந்திர வாய்ப்புகளை முழு அளவு சாதகமானவைகளாக எப்படி மாற்றுவது என்றுதான் தமிழ்த் தரப்பு சிந்திக்க வேண்டும்.

வெளியரசுகள் அவற்றின் நலன் சார்ந்து எடுக்கும் நகர்வுகளை எப்படி ஈழத் தமிழர்கள் தமது நலன் சார்ந்து வெற்றிகரமாகக் கையாளலாம் என்று சிந்திக்க வேண்டும். இதைத் தொகுத்துச் சொன்னால் தமிழ் மக்கள் ஓர் அரசு போல சிந்திக்க வேண்டும். ஒரு அரசு இன்னொரு அரசோடு கொள்ளும் உறவுகளில் இரண்டு தரப்புக்கும் பொதுவான நலன்கள் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளியில்தான் உறவுகள் விருத்தி அடைகின்றன. எனவே ஈழத் தமிழர்கள் ஓர் அரசு போல சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். இராஜதந்திரத்தில் நலன்கள்தான் முக்கியம். அறம்; தர்மம்; நீதி போன்றவை அங்கே கிடையாது. தொப்புள்கொடி உறவு; இதயமும் இதயமும் கலக்கும் உறவு; என்பவையெல்லாம் கிடையாது. நலன்களும் நலன்களும் இடை வெட்டும் புள்ளிகளைத் தீர்க்க தரிசனமாகக் கையாள்வதுதான் இராஜதந்திரம். எனவே ஓர் அரசுபோலச் சிந்தித்து ஈழத் தமிழர்கள் முடிவெடுக்க வேண்டும். பிரித்தானியாவின் தடை தமிழ் மக்களுக்கு அண்மையில் கிடைத்திருக்கும் ஒரு வெற்றி. அந்த வெற்றி முழுமையானது இல்லை. அதை எப்படி ஒரு முழுமையான இராஜதந்திர வெற்றியாக மாற்றுவது என்பது ஈழத் தமிழர்கள் ஓர் அரசுபோலச் சிந்தித்து முடிவெடுப்பதில்தான் தங்கியிருக்கின்றது. ஆனால் ஓர் அரசு போல் சிந்திப்பதென்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள வேண்டும்.

நன்றி: நிலாந்தன்





# "ஆனந்தபுரம்" எமது விடுதலைப்போராட்டத்தில் வீர வரலாறு!

முப்பதாண்டு கால ஆயுத விடுதலைப் போராட்டத்தின் அசை வியக்கத்தை உலுப்பிவிட்ட நிகழ்வாக, 2009 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தின் தொடக்கத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தி லுள்ள ஆனந்தபுரம் கிராமத்தில் நிகழ்ந்த சமர் கணிக்கப் படு கின்றது.

விடுதலைப்புலிகள் எதிர்பார்த்தற்கு மாறாக - பாரிய ஆள் இழப் புக்களுக்கு பின்னரும் - தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான சிங்கள தேசத்தின் படைவீரர்கள் களத்திற்கு அனுப்பப் பட்டிருந் தனர். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கான படைக்கல வளங்கள் தமிழீழ கடற்பரப்பினூடாக தாயகத்திற்கு கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கான முழுமையான "கடற்தடுப்புச் சுவரை" வல்லாதிக்க அரசுகளின் உதவியுடன் சிங்கள தேசம் அமைத்திருந்தது.

அத்தோடு பாரிய படைக்கல பிரயோகத்துடனும் வல்லாதிக்க அரசுகளின் புலனாய்வு தகவல்களையும் உள்வாங்கியவாறு சிங்கள தேசத்தின் இராணுவ பூதம் தமிழீழ தாயகத்தை முழுமை யாக அழிக்கும் வகையில் தனது ஆக்கிரமிப்பு நடவடிக் கையை மேற்கொண்டது.

வரையறுக்கப்பட்ட போர்த் தளபாடங்களுடனும் ஆட்பல வளத் துடனும் போரிட்ட தமிழர் சேனை வன்னிப்பெருநிலத்தின் பெரும்பகுதியை கைவிட்டு பின்வாங்கியிருந்தது. எனினும் இறுதிவரை ஏதோ ஒரு இடத்திலிருந்து மீண்டும் - ஆக்கிரமித்து வரும் படைகளை தடுத்து - முறியடிப்பு தாக்குதலை செய்து தமிழீழ தாயகத்தை மீட்டுவிடலாம் என்றே அனைத்து மக் களும் நம்பியிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசம் சிறீலங்கா படைகளிடம் வீழ்ந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அசாத்திய பலத்தை முழுமை யாக நம்பிய மக்களும் விடுதலைப் புலிகளும் தங்களுக்கு ஒரு சிறிய இடைவெளி கிடைத்தாலும் அதனை சாதகமாக பயன் படுத்தி வெற்றியை பெற்றுவிடமுடியும் என்றே முழுமையாக நம்பியிருந்தனர்.

அந்தவகையில் தான் ஆனந்தபுரம் பகுதியில் - இறுதியாக அறிவிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பு வலயத்திற்கு வெளிப்புறமாக - விடுதலைப்புலிகளின் இறுதிப்போருக்கான அவசர போரரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டது.

தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகள் பலரும் அடங்கலாக தளம் அமைத்து பெருமளவிலான முறியடிப்பு தாக்குதல் ஒன்றை திட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் பிரதான போர்க்கலங்கள் அனைத் தையும் உள்வாங்கி திட்டமிடப்பட்ட இத்தாக்குதலுக்காக பெருமளவு விடுதலைப் புலிகளும் நிலைப்படுத்தப்பட்டிருந் தனர். தொலைதூர தாக்குதலுக்கேயென வடிவமைக்கப்பட்ட போர்க்கலங்கள் அனைத்தும் குறுந்தூர தாக்குதலுக்காக நிலைப்படுத்தப்பட்டு இருந்தது.

விடுதலைப்புலிகளின் இத்திட்டமிடலை ஏதோ ஒரு வகையில் அறிந்துகொண்ட சிறீலங்கா படையினர் எத்தனை இழப்பை சந்தித்தேனும் தடை செய்யப்பட்ட போர் ஆயுதங்களை பயன் படுத்தி என்றாலும், அத்தாக்குதலை முறியடிக்க முடிவெடுத் திருந்தார்கள்.

அதன்படி ஆனந்தபுரம் பகுதியை சுற்றிவளைத்து அப்பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தி முற்றுகை பாணியிலான தாக்குதலை சிறீலங்கா படைகள் முன்னெடுத்தன.

தமிழீழ தேசிய தலைவரை பாதுகாப்பாக பின்னகர்த்திய விடு தலைப் புலிகள், சிறீலங்கா படைகளின் முற்றுகையை முறியடிப் பதற்காக உறுதியுடன் போர் செய்துகொண்டிருந்தார்கள்.

இத்தளத்தில் நிலைகொண்டு இறுதிவரை உறுதியோடு போரிட்டு பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் ஆதவன் / கடாபி, பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா உட்பட விடுதலைப் புலிகளின் பல முக்கிய தளபதிகள் உட்பட பல நூற்றுக்கணக்கான போராளிகள் மாவீரர்களாக ஆனந்தபுரம் மண்ணில் வீழ்ந்து தமிழீழ தாயகத்தின் விடி வெள்ளிகளாக போனார்கள்.

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் தீபன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு ஒப்புயர்வற்ற தளபதி. ஜெயசிக்குறு போர்க்களத்தில் சிறீலங்கா படைகளுக்கு சிம்ம சொப்பனமாக அறியப்பட்ட தளபதி பிரிகேடியர் தீபன். வவுனி யாவிலிருந்து முன்னேறி, கிளிநொச்சியிலுள்ள படைகளுடன் இணைப்பை செய்து, வன்னி பெருநிலத்தை கூறுபோடும் திட்டத்துடன், முன்னேறிய சிறீலங்கா இராணுவத்தை, புளியங் குளத்தில் - 1997 ஆம் ஆண்டில் - தடுத்துநிறுத்தி புளியங் குளத்தை புலிகளின் புரட்சிக்குளமாக்கிய தளபதிதான் பிரிகேடியர் தீபன்.

புளியங்குளத்தை சுற்றிவளைத்து அதற்கான வழங்கல் பாதை களை துண்டித்தபோதும், தளராமல் நாங்கள் "இங்கேயே சமைத்து சாப்பிடுவோம். ஆனால் ஒரு போதும் பின்வாங் ககூடாது." என உறுதியோடு கூறி அங்கேயே நிலைகொண் டிருந்து முன்னேறிவந்த டாங்கிகளையும் தகர்த்து ஒரு துருப்புக்காவி கவசவாகனத்தையும் கையகப்படுத்தினார்.




அதற்கு பின்னர் நடைபெற்ற ஓயாத அலைகள் - 2 நடவடிக் கையிலும் போர்த்தளபதி பிரிகேடியர் தீபனின் தந்திரோபாய மான படைநகர்த்தல் மிகப்பிரசித்தமானது.

சிறீலங்கா படைகள் இன்றுவரை அமைத்த முன்னரங்க பாது காப்பு நிலைக் கட்டமைப்புக்குள், மிகவும் பாதுகாப்பானதும் அதற்குள் ஊடுருவி தாக்குதலை செய்வது என்பது சாத்தியமற் றது என்ற நிலையிலான பலமான பாதுகாப்பு அரணாக அன்றைய கிளிநொச்சி சிறீலங்கா இராணுவ தளம் இருந்தது.

அப்படியான இறுக்கமான தளத்தை கைப்பற்றும் சமரை வழி நடத்தியவர் தளபதி தீபன் அண்ணை. அதற்கு பின்னர் ஓயாத அலைகள் - 3 படைநடவடிக்கையின்போது பரந்தன் படைத் தளத்தை கைப்பற்றும் நடவடிக்கையின்போது பட்டப்பகலில் மரபுவழி இராணுவமாக தமிழர் சேனையை வழிநடத்தி பல மூத்ததளபதிகளின் பாராட்டை பெற்றவர்.

ஆனந்தபுரம் தளத்தை தக்கவைக்கவேண்டும் அல்லது அங் கேயே வீரமரணம் அடையவேண்டிவரும் என்பதை தெளிவாக தெரிந்துகொண்டு இறுதிவரை உறுதியுடன் போரிட்ட தளபதி யின் இறுதி மூச்சும் ஆனந்தபுரம் மண்ணில் அமைதியாய் போனது.

பிரிகேடியர் ஆதவன் அல்லது கடாபி அவர்கள் விடுதலைப் புலிகளின் இன்னொரு முக்கிய தளபதி. சிறீலங்கா இராணுவத் தினருக்கு எதிராக தமிழீழ தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான கரும்புலி தாக்குதல்களை திட்டமிட்டு நெறிப்படுத் திய சிறப்புநடவடிக்கைக்கான தளபதி.

தமிழீழ தேசிய தலைவரின் பாதுகாப்பு பணிகளுக்காக தனது போராட்ட வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவழித்த இத் தளபதி, படைக்கட்டுமானங்களான தொடக்கப்பயிற்சி கல்லூரி களையும் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிகளையும் நிர்வகித்து வந்திருந்தார்.

தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில், குறைந்தளவு ஆளணி வளங்களுடன் சமரை வெல்வதற்காக, தமிழீழ தாயகத்திலிருந்த எதிரிகளின் தளத்திற்குள், ஆழ ஊடுருவி மேற் கொள்ளப்படும் கரும்புலித்தாக்குதல்கள் பெரும்பாலும் இவரது நெறிப்படுத்தலிலேயே நடந்திருக்கிறது.

நவீன மரபு வழிக்கட்டமைப்புகளுக்கு அமைவாக சிறப்பு இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்திய இத்தளபதி புதிய போராளிகளை உருவாக்கும் பயிற்சிக் கல்லூரிகளையும் நேரடி யாக கண்காணித்துவந்தார்.

வன்னியில் போர் இறுக்கமான கட்டத்தை அடைந்தபோது கள முனையிலிருந்தே நேரடியாக படை நகர்த்தலை மேற்கொண்ட இத்தளபதியும் ஆனந்தபுரம் சமரில் விழுப்புண் அடைந்தார். பின்னர் களமுனையிலிருந்து இவரை அகற்றுவதற்கு போரா ளிகள் பலத்த முயற்சிகள் மேற்கொண்டபோதும் அது முடியாமல் போக தமிழீழ தாயகத்தை விடுவிக்கும் போரில் தன்னுயிரை யும் அர்ப்பணித்துக்கொண்டார்.

விடுதலைப்புலிகளின் போராட்டவலுவை அடுத்த கட்ட பரிணாமத்திற்குள் நகர்த்திய மோட்டார் பீரங்கிகளும் ஆட்லறி பீரங்கிகளும் தான், ஆட்லறி பீரங்கிப்படையணி தளபதி பிரி கேடியர் மணிவண்ணனின் போராட்ட வாழ்க்கையாக இருந் தது.

"ஜஞ்சிஞ்சி" என செல்லமாக அழைக்கப்பட்ட 120 மிமீ பீரங்கிகள் தான் ஓயாத அலைகள் - ஐ நடவடிக்கையின் போது பாரிய படைக்கல சக்தியாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தது.

முல்லைத்தீவில் கைப்பற்றப்பட்ட 122 மிமீ ஆட்லறிகளுடன் ஆரம்பமான விடுதலைப்புலிகளின் கேணல் கிட்டு ஆட்லறி படையணி வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்பட்ட இன் னும் பல ஆட்லறிகளுடன் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

இரண்டு ஆட்லறிகளுடன் ஆரம்பித்த ஆட்லறிபடையணி பல பத்து ஆட்லறிகளை கொண்டதாக வளர்ச்சியடைந்தபோதும், அதனை சரியான முறையில் பயன்படுத்தி தமிழீழ போராட் டத்தை முழுமையான மரபு வழி இராணுவமாக்கி முழுமைப் படுத்திய பெருமை இத்தளபதிக்கு சேரும்.

மரபுவழியான முறையில் ஆட்லறிகளை பயன்படுத்தினாலும் நேரடிச் சூடுகளை வழங்கி எதிரிகள் மீது திகைப்புத்தாக்குதலை நடத்தி தரைவழியாக முன்னேறும் புலிகளுக்கு காப்பரணாக ஆட்லறிகளை பயன்படுத்தியமை இப்படையணியின் சிறப் பாகும்.

ஆனந்தபுரத்தில் நடைபெற்ற அந்தச்சமரின்போது ஆட்லறிப் படையணியை உருவாக்கி வளர்த்தெடுத்த பிரிகேடியர் மணி வண்ணன் அவர்களும் தமிழீழ காற்றோடு காற்றாக கலந்து போனார்.

தமிழீழ பெண்களின் போர்முகத்தை உலகத்திற்கு காட்டிய விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகளின் மூத்த தளபதிக ளான 2ஆம் லெப்ரினன்ற் மாலதி படையணியின் சிறப்பு தளபதியுமான பிரிகேடியர் விதுசா அவர்களும், மேஜர் சோதியா சிறப்பு படையணியின் சிறப்புத்தளபதியான துர்க்கா அவர்களும் விடுதலைப்புலிகளின் பெரும்பாலான அனைத்து போரங்குகளி லும் தமது படையணிகளை நேரடியாக வழிநடத்தியிருந் தார்கள்.

ஆனையை அடக்கிய அரியாத்தை என வரலாறு தேடிக்கொண் டிருக்கும் எம்மவர் மத்தியில் அரியாத்தைகளையே உருவாக்கி காட்டிய பெருமை இவ்விரு தளபதிகளையுமே முக்கியமாக சேரும். ஆண் போராளிகளுக்கு நிகராக பெண் போராளிகளை யும் போர்க்களத்தில் நகர்த்திய இப்போர்த்தளபதிகள், தமிழீழ தேசிய தலைவரின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து, உலகப் பெண்களுக்கு முன்னுதாரணமாக தமிழீழ பெண்களை உருவாக்கினார்கள்.

ஆனந்தபுரம் சமரின்போது இவர்களும் ஆனந்தபுரத்தின் விடி வெள்ளிகளாக தமிழீழ விடுதலைக்காக தம்முயிரை அர்ப் பணித்து வீரகாவியம் படைத்தார்கள்.

ஆனந்தபுரம் சமரில் மூத்த தளபதிகள் பலரையும் களமுனைத் தளபதிகள் பலரையும் நூற்றுக்கணக்கான போராளிகளையும் இழந்த அந்தச்சமர் தமிழ் மக்கள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

தமிழீழ விடுதலைப் போரினை வழிநடத்திய தலைவனையும் போராளிகளையும் உலுப்பிவிட்ட, அந்த இழப்பு தமிழீழ விடு தலைப் போராட்டத்தின் இராணுவ சமநிலையை எதிரிக்கு சாதகமாக்கி விடுதலைக்காக விரைந்த பயணத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிட்டது.

ஆனாலும் தர்மத்தின் அடிப்படையில் பயணித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் மீண்டும் எழுச்சியோடு புதிய பரி ணாமத்தில் புதுவீச்சோடு பயணிக்க தோள்கொடுப்போம் என உறுதியெடுப்போம்.

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

MY EVERYDAY SHOPPING



**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.














WWW.MYEVERYDAYSHOPPING.COM



# கூண்டுக்கிளி

**-மணலாறு விஜயன்-**

செல்லக்குட்டியண்ணன் ஆர்மோனியப் பெட்டிக்கு முன் அமர்ந்திருந்தார். இப்போதல்ல, எப்போதும் அவர் இசையினையும், இசைக்கருவிகளையுமே காதலித்தார். இசையைப் பற்றி அவர் எதுவுமே படிக்கவில்லை. ஆனால் அனைத்து இசைக்கருவிகளையும் இனிமையோடு இசைக்கக்கூடிய வல்லமையை தமிழன்னை அவருக்குக் கொடுத்திருந்தாள். பதிலுக்கு அவருடைய பிள்ளைகளை தன் விடுதலைக்காக எடுத்துக் கொண்டாள்.

செல்லக்குட்டியண்ணனின் விரல்கள் சுருதியை வருடின. அவருடைய நினைவுகளோ தொலை தூரத்திற்கு பறந்து சென்றது.

கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில். அதனருகே சிறிய மலைக் குன்று; குன்றின் சாரலில் வயல்வெளிகள்; வயல் வெளிகளின் நடுவே அமைந்திருந்த ஓலைக்குடிசை.

அழகான இடம்; சுகமான காற்று; ஆற்றுப் படுக்கையைத் தொட்டுத் தழுவிவரும் குளிர்காற்றையும் பொருட்படுத்தாது அந்தக் குடிசை கலகலப்பாக இருந்தது, வேறொன்றுமில்லை, அன்று தைப்பூசம். தைப்பூசம் வருடா வருடம் வருவதுதானே. அதற்காக இத்துணை மகிழ்ச்சியா?



வருடா வருடம் வரும் தைப் பூசத்தை விட மூன்று ஆண்டுகளுக்குப் பின் மூத்த மகன் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் என்ன வெளிநாட்டிலிருந்தா வந்திருந்தான்? இல்லை. இந்த மண்ணின் விடுதலைக்காக களத்தில் நின்றான். மகனைக் கண்ட மகிழ்ச்சி ஒருபுறமும், தைப் பூசநாளில் அனைவரும் வீட்டில் நிற்கின்ற மகிழ்ச்சி ஒருபுறமுமாக இரட்டிப்பு மகிழ்ச்சி அங்கு நிலவியது.

செல்லக்குட்டியண்ணன் வயலுக்குச் சென்று புதிரெடுத்து வெள்ளைத்துணியால் சுற்றிக் கொண்டு வந்தார். வரும் வழியில் கொட்டுக் கிணத்தானுக்கும் ஒருபிடி கதிர் வைத்துவிட்டுத்தான் வந்தார்.

புதுப்பானையில் புதிர்ப் பொங்கல் நடந்தது. நான்கு பிள்ளைகளுமே அன்று தான் வீட்டில் ஒன்றாக இருந்து புதிர்ப் பொங்கல் உண்டனர். மனைவியுடன் பிள்ளைகளையும் சுற்றி இருத்திவிட்டு சாதத்தை கவளமாக்கி கைகளில் கொடுத்தார் செல்லக்குட்டியண்ணன். அன்று அவர் மனம் அளவற்ற மகிழ்ச்சியில் இருந்தது. எல்லோரும் கூடி உண்டு மகிழ்ந்த பூசம் அதுதான். அதன் பின்னர் ஓராண்டில் மகனை மாவீரர் இல்லத்தில் மட்டுமே தரிசித்தார். மூத்த மகன் மட்டுமல்ல, இன்று இரண்டாவது மகனும் அங்குதான் துயில்கின்றான்.

“அப்பா, பள்ளிக்கூடம் விட்டு வரேக்கை இந்தியனாமி வழியில மறிச்சு சப்பாத்துக் காலால் அடிச்சுப் போட்டானப்பா! பள்ளிக் கூடத்துக்குப் போறதுக்கும், வாறதுக்குங்கூட சுதந்திரமில்லாமல் செய்து போட்டாங்களப்பா” என்று அழுதழுதுகொண்டே வந்து சொன்னான் இரண்டாவது மகன். அன்றிலிருந்துதான் அவர் இரண்டாவது மகனையும் காணமுடியாமல் போயிற்று; மூன்று ஆண்டுகளுக்குப் பின் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரகாவியமான செய்தி வந்தது. செல்லக்குட்டியண்ணனும் அவரது மனைவியும் கலங்கவில்லை. அவர்கள் கலங்கமாட்டார்கள். ஏனெனில் பசுமையான வயல்வெளிகளின் நடுவே இருந்து அவர்களின் குடிசை கண்முன்னாலேயே இராணுவத்தால் தீயிடப்பட்டது. அனைத்தையும் இழந்து இன்று




அகதி என்ற முத்திரையோடு இருக்கின்றார்கள்.

கடந்துபோன நினைவுகள் அவர் நெற்றியிலும், கன்னத்திலும் வியர்வைத்துளிகளாய் அரும்பி நின்றன. துவாய்த் துண்டினால் துடைத்துக் கொண்டார். கடந்துபோன நினைவுகளை விட நேற்று நடந்து முடிந்த சம்பவங்கள்தான் அவரை நிலை குலைய வைத்தது.

■ ■ ■

கலையரங்கத்தினுள் கிளியொன்றைக் கொண்டுவந்து கூட்டினுள் அடைத்து வைத்திருந்தார்கள். இரண்டு நாட்களாக உணவு உதையும் அது உண்ணவில்லை. தன் உறவுகளுக்கு குரல் கொடுத்து அழுதுகொண்டேயிருந்தது. தன் துயரக் குரல் தன் இனத்துக்குக் கேட்கும்; அவை எப்படியும் தன்னை வந்து காக்கும் என்ற ஒரு நம்பிக்கை அதற்கிருந்தது.

“அந்தக் கிளியை சுதந்திரமாக வாழவிடவேண்டும். அதனைத் திறந்து விடங்கள்” என்று அங்குள்ள அனைத்துக் கலைஞர்களையும் செல்லக்குட்டியண்ணன் கெஞ்சிக் கேட்டுவிட்டார். அவருடைய வேண்டுதலுக்கோ அல்லது கிளியின் துயரக் குரலுக்கோ எவரும் செவி சாய்க்கவில்லை. பொழுது கவிழ்ந்தது செல்லக்குட்டியண்ணன் கிளிக்கூட்டினருகே சென்றார். தன்னுடைய விரல்களை கூட்டில் வைத்தார். தன்னுடைய சொண்டினால் அவருடைய விரல்களை கவ்விக் கவ்வி கண்ணீர் விட்டு அழுதது. மனந்தாங்கமுடியாத வேதனையோடு வீட்டுக்குச் சென்றார். இரவு முழுவதும் அவரால் தூங்கமுடியவில்லை.

விடிந்ததும் விடியாததுமாக கலையரங்கத்துக்கு விரைந்தார். அவருடை யமனதில் உறுதியான முடிவிருந்தது. கலையரங்கத்தினுள் மெதுவாக நுழைந்தார். அங்கு நிற்கின்ற நாய் தன் திட்டத்தைக் குழப்பிவிடுமோ என்ற ஐயத்தில் மனம் படபடத்தது. கிளிக்கூட்டை நெருங்கி விட்டார். ஓயாமல் அழுதுகொண்டிருந்த

கிளியின் குரலைக் காணவில்லை. அழுது களைத்து உறங்கி விட்டது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே கூட்டைத் திறந்தார். அங்கே தன் சிறகுகளை அகல விரித்தபடி... அது நிரந்தரமாக உறங்கிவிட்டது. கண்களில் வழிந்தநீர் காய்ந்து கிடந்தது. இனி அது பறக்காது...

இயக்கத்துக்கு போய்விடக் கூடாது என்பதற்காக அவர்களை எவ்வாறெல்லாம் வளர்த்தார். புதுச் சைக்கிள் கேட்டால் புதுச் சைபிக்கிள்; புது உடுப்புக் கேட்டால் புது உடுப்பு. கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தார். தேசவிடுதலைக்கு பிள்ளைகளைக் கொடுத்த தாய் தந்தையர்கள் பற்றி வாய்க்கு வந்தபடி விமர்சித்



தார்கள். "மற்றவர்கள் போல் நாங்கள் பிள்ளைகளை வளர்ப்பில் தாங்களே முன்னோடிகள் என்பதுபோல் பேசினார்கள். மண்கிண்டி சண்டையில் காயமடையும் வீரர்களுக்கு இரத்த தானமாவது கொடுப்போமெனச் சென்ற தமது பிள்ளைகளிரண்டையும் காலில் பிடித்து அழுதார்கள். "இயக்கத்துக்குப் போகவும் வேண்டாம். இரத்த தானம் கொடுக்கவும் வேண்டாம். அப்படிப் போவதாயின் எங்களது பிணத்தின் மேலாக ஏறித்தான் செல்ல வேண்டும்" என்றெல்லாம் தடுத்தார்கள். இன்று பிள்ளைகளின் பிணத்தின் மீது கிடந்து அழுகிறார்கள்.

செல்லக்குட்டியண்ணன் சில நிமிடங்கள் நெஞ்சை இறுகப் பிடித்துக் கொண்டார். நிலைப்படியில் சார்ந்தபடி இருந்துவிட்டார். கிளிக்காக அழுதுகொண்ட அவர் மனதை அதிகாலையில் வந்த சியாமசெட்டி விமானங்கள் திசை திருப்பின. வீட்டுக்குச் செல்லவோ அல்லது நிலையெடுத்துக் கொள்ளவோ அவகாசம் இருக்கவில்லை. அந்தளவு வேகமாக வந்து மளமளவென்க் குண்டுகளை வீசிவிட்டு அவை மறைந்துவிட்டன.

செல்லக்குட்டியண்ணன் வீடுநோக்கி அவசரமாக நடந்தார். அழுகுரல்கள் கேட்டன. யாருடைய வீடாக இருக்கும்?...

மணியத்தாரின் வீடுதான்.

மணியத்தாரும் மனைவியும் தலையில் அடித்து அழுவதும் விழுவதுமாக இருந்தனர். நடப்பதற்கு என்ன இருக்கிறது? மணியத்தாரின் இரண்டு மக்களும் சிதறிக்கிடந்தனர்.

நிலத்தில் படிந்த இரத்தக் கறைகளை எறும்புகள் மொய்க்கத் தொடங்கின. அந்தரத்தம் மண்ணில் ஊறிவிடக் கூடாது என்பதில் எறும்புகள் கவனமாக இருந்தன.

"இயக்கத்தில் போய் செத்திருந்தாலும் நாலுபேர் என்னைப் போற்றி இருப்பாங்களே... மாவீரரின் தாயென்று வரலாறு எழுதியிருப்பாங்களே..." என்று மணியத்தாரின் மனைவி அறிவு மயங்கிய நிலையில் புலம்பிக் கொண்டிருந்தாள்.

"இழந்தபின் கிடைத்த ஞானம்" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட செல்லக்குட்டியண்ணன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். ஏனோ அவ்விடத்தில் நின்று அனுதாபம் தெரிவிக்க அவருடைய மனம் விரும்பவில்லை. கூட்டில் இறந்து கிடந்த கிளி; வீட்டில் சிதறிக்கிடந்த மணியத்தாரின் பிள்ளைகள்; இரண்டுமே மாறி மாறி மனதில் எழுந்து நிற்க வீட்டினை அடைந்தார். அவருடைய மனம் அமைதியை விரும்பியது. மூடிக்கிடந்த "ஒகன்" இசைக்கருவியை தூக்கி மடியில் வைத்துக் கொண்டார். இரண்டு மூன்று தடவைகள் அது இசையெழுப்பியிருக்கும்.

பின்புறத்திலேயிருந்து இரண்டு மிருதுவான கரங்கள் அவரின் தோள்களைப் பற்றின. தனது மகள்தான் என்பது அவருக்குப் புரிந்தது. மெல்ல அவளின் கரங்களைப் பிடித்தவாறு அண்ணாந்து நோக்கினார்.

"அப்பா, நானும் இயக்கத்திற்குப் போகட்டுமா...? சும்மா இருந்தும் சாகிறதை விட நாட்டுக்காய் சாகலாமப்பா. அண்ணாக்களிரன இடைவெளியை என்னால நிரப்ப முடியுமப்பா. என்னப்பா?.... போகட்டுமோ?...

செல்லக்குட்டியண்ணனின் கண்கள் நிரம்பின. மகளின் முகத்தைக் கண்ணீர் மறைத்தது. கூண்டில் இறந்து கிடந்த கிளியை நினைத்தார். மணியத்தாரின் பிள்ளைகளை நினைத்தார். அவரை அறியாமலே அவரின் தலை அசைந்தது.

கண்ணீரைத்துடைத்து விட்டு மகளைப் பார்த்தார். அவள் அங்கு இல்லை. செல்லமாய் வளர்த்த கிளி. சுதந்திரத்துக்காய் தன் சிறகை விரித்துவிட்டது.

இப்போது அவருடைய மனதில் அமைதி ஏற்பட்டது. கூண்டில் இருந்த கிளியைதான் திறந்துவிட்டதாயும் அது சுதந்திரமாக பறந்துவிட்டதாயும் ஒரு பிரமை.

"அப்பா, முத்தையன்கட்டுக்கு இண்டைக்கு இசைநிகழ்ச்சிக்கு போகவேணுமெண்டு சொன்னீங்கலயேப்பா". கடைக்குட்டி மகனின் குரல் நேற்றைய நினைவுகளிலிருந்து இவரை திருப்பியது. மகனைப் பார்த்து சிரித்துக் கொண்டார். "இவனும் கூண்டுக்கிளியா? இல்லை. இவனுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை." என்று மனதுள் நினைத்தபடி புறப்பட்டத் தயாரானார் செல்லக்குட்டியண்ணன்.

களத்தில் 15.04.1994

இது
பண்பு சொரிகின்ற நிலம்
அன்னியர்கள்
விருந்தினராய் மட்டுமே
வந்து போகலாம்
வரவேற்கப்படுவார்கள்

ஆளும் நோக்கோ
அழிக்கும் நோக்கோ
யாருக்கும் வருமானால்
போருக்குள் நாங்கள்
புகுவோம்-இது
வீரம் சொரிகின்ற
நிலமெனும்

விளக்கம் கொடுக்கப்படும்
காலம் காலமாய்
ஈழமண்
ஆண்டவரெவரையும்
வாழ்ந்துவிட்டுப்போவெனச்
சாமரம் வீசவில்லை
அடிமையாய்க் கிடந்து
ஆலவட்டம் பிடிக்கவில்லை
வென்றோமோ தோற்றோமோ
அது வேறு விடயம்
பகையென்றால்
கொன்றே தீருவோமெனக்
கொடிபிடித்தோம்.

வல்லரசோ
சிற்றரசோ
எம்மை நெரிப்பவர்
எவரெனினும்
எதிர்ப்போம்
தலைவனின்
தாரகை மந்திரம்
இதுதான்
தமிழர் வாழ்வதின்
பாதையும் இதுதான்

விடுதலைக்காய்
உயிர்விடத்துடிப்பது
பிரபாகரன் தேசத்துப்
பிறவிக்குணம்

அன்னையும் அவ்வழியே...

பூவாய் இருந்து – ஈழத்
தாயாய் நிமிர்ந்து
தீயாய் எரிந்த
சாகாப்பெயர்
பூபதி...
பெண்மைக்குள்
ஒரு புயல்
தாய்மைக்குள்
ஒரு தணல்
சுறாவளியையே
சுழற்றிய தென்றல்

அவள்
யானைத் துதிக்கைக்குள்
ஏறிய எறும்பு
கோலியாத்தோடு
மோதிய தாவீது

ஆனையை
முன்பொருத்தி
அடக்கியதாய் அறிந்தோம்
அன்னை
பெரும் சேனையையே
முடக்கினாள்
பெண்மைக்குள் உள்ள
வன்மையைப் பறையடித்தாள்
ஈழத்தமிழ் நிலத்தில்
மானம் பெரிதெனும்
மரபை விளக்கினாள்

உதிர வெறியர்களை
உதரத்தால் தாக்கினாள்
அச்சுறுத்தல் தந்தவரை
அவமானப்படுத்தினாள்

உணவுக்கு மறுப்புச்
சொல்லி
உணர்வுக்கு மதிப்புக்
கேட்டு
உலகிற்கு உண்மை
சொன்னாள்.
காந்தி மகானின்
காலடி தொழுவோரை
நோன்பின் பலம்
நோக்க வைத்தாள்.

சாவைப் பிடித்திழுத்துச்
சாதனை செய்தாள்.

அமைதிப்படைகள் முன்
அமைதிகேட்டு
அகிம்சை நாட்டின் முன்
அகிம்சை பூண்டு
எரியாத தீபமாய்
ஒளியைக்கொடுத்தாள்.

பூமியின் மேலே
வெடித்துக் கொண்டது
பூகம்பம்
அமைதியாக
முழங்கிக்கொண்டது
இடி
மலரொன்றில் இருந்து
பிறந்து கொண்டது
மின்னல்

பூபதித்தென்றலின்
புயலின் துளிகளால்
அப்பிக்கொண்ட
கறைகள்-பாரதத்தின்
அகிம்சை முகங்களில்
அழியாமல் இன்னும்...

செந்தோழன்



# சாவை அணைத்துச் சாகாச்சுடர்

**ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில்; அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் போதெல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# காசாவில் ஜனாவின் 15 ஊழியர் படுகொலை! 2006இல் மூதூரில் 17 தொண்டர்கள் படுகொலை!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

07.04.2025

காசாவில் மனிதாபிமான உதவிக்குழு ஊழியர்கள் 15 பேரை படுகொலை செய்த இஸ்ரேல் படைகளின் கடைசி நிமிட வீடியோ வெளியாகி அம்பலம் ஆகியுள்ளது.

ஜநாவின் UNWRA சேர்ந்த ஊழியர்கள் 15 பேர் 2025 மார்ச் 23 ஆம் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் வேண்டும் என்றே உதவிக்குழுவினர் 15 பேரை படுகொலை செய்தது தற்போது அம்பலமாகியுள்ளது.

இன்று காசாவில் நடந்தது போல, அன்று 2006ம் ஆண்டு ஈழத்தில் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி மூதூரில் நடந்த படு கொலைச் சம்பவத்தில், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான அக்சன் பாம் (ACF) என்ற நிறுவனத்தில் பணி யாற்றிய 17 தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

கொலை செய்யப்பட்டு பல ஆண்டுகள் கழிந்தும், தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வேதனையுடன் தெரிவித்து வருகின்றார்கள்.

இந்த இரு நிகழ்வுகளும் மிலேச்சத்தனமான இரக்கமற்ற கொடூரமான செயல்களாகும். இதுவரை இத்தகைய கொடூர மான கொலை நிகழ்வுகளுக்கு உரித்தான நீதி கிடைக்க வில்லை என்பதே உண்மையாகும்.



### காசா மனிதாபிமான ஊழியர் கொலை:

கடந்த மார்ச் 23 ஆம் தேதி காசாவில் உள்ள ராவா நகரத்தில் அம்புலன்ஸ்களில் சென்று கொண்டிருந்த ஜநா உதவுக் குழு வினர் மீது இஸ்ரேல் இராணுவ வீரர்கள் தாக்குதல் நடத்தினர்.

காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்து வந்த ஊழியர்கள் இஸ்ரேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதில் பாலஸ்தீன சிவப்பிறை சங்கம் (ரெட் கிரசண்ட்) ஊழி யர்கள் எட்டுப்பேர், பாதுகாப்பு அவசரப்பிரிவை சேர்ந்த ஆறு உறுப்பினர்கள் மற்றும் ஜநாவின் UNWRA சேர்ந்த ஊழியர் ஒருவர் என மொத்தம் 15 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்கள் உதவிக்குழுவைச் சேர்த்தவர்கள் என்று தெரிந்தே இஸ்ரேல் வேண்டுமென்றே அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத் தியதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் சந்தேகத்திற்கிட மான முறையில் தங்கள் வீரர்களை நெருங்கி வந்த வாக னங்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரி வித்துள்ளது.

இந்நிலையில் அன்றைய தினம் நடந்த தாக்குதல் தொடர்பான, உயிரிழந்த உதவிக்குழுவில் இருந்த பாலஸ்தீனிய ஊழியர் ஒருவரின் கைத்தொலைபேசியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

### இஸ்ரேலின் பொய் முகத்திரையை கிழித்த வீடியோ:

நியூயார்க் டைம்ஸ் தற்போது வெளியிட்டுள்ள அந்த வீடியோ வில், ஊழியர்கள் பயணம் செய்த அம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்களில் அவசரநிலையை உணர்த்தும் விளக்குகள் எரிந்த நிலையில் இருப்பதும், இஸ்ரேலிய இராணுவத்தினர் வாகனங்களை நோக்கியும் உதவிக் குழுவினரை நோக்கியும் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியது பதிவாகி உள்ளது.

இதன்படி இஸ்ரேல் வேண்டும் என்றே உதவிக்குழுவினர் 15 பேரை படுகொலை செய்தது அம்பலமாகியுள்ளது. இதனால் சர்வதேச அளவில் கண்டங்கள் எழுந்து வருகின்றன. இந்த காணொளி குறித்து இஸ்ரேல் இன்னும் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

காசா மக்களுக்கு அத்தியாவசிய மனிதாபிமான உதவிகளை வழங்கி வந்த அப்பாவி ஊழியர்கள் இஸ்ரேல் இராணுவத் தினரால் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உலகள வில் கண்டன அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கொடூரமான தாக்குதலில் பாலஸ்தீன சிவப்பிறை சங்கம் (Palestinian Red Crescent Society) தன்னார்வலர்கள், பாது காப்பு அவசரப் பிரிவு உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணி முகமைக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனம் (UNRWA) ஊழியரே இரக்கமின்றி கொல்லப்பட்டனர்.

### இஸ்ரேல் வேண்டுமென்றே தாக்கியது:

உயிரிழந்தவர்கள் அனைவரும் பட்டினி மற்றும் நோயால் வாடும் காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வ தற்காக பாலஸ்தீன போர்க் களத்தில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் உதவி பணியில் ஈடுபட்டிருந்ததை அறிந்தும் இஸ் ரேல் வேண்டுமென்றே இந்த தாக்குதலை நடத்தியதாக சர்வ தேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

ஆரம்பத்தில், இஸ்ரேல் தரப்பில், சந்தேகத்திற்கிடமான முறை யில் தங்கள் இராணுவ வீரர்களை நெருங்கி வந்த வாகனங்கள் மீது தவறுதலாக துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக ஒரு பொய்யான அறிக்கையை வெளியிட்டது.

இந்நிலையில், இந்த வெறித்தனமான தாக்குதல் நடந்த அன்று, உயிரிழந்த மனிதாபிமான உதவிக்குழு ஊழியர்களில் ஒருவ ரான பாலஸ்தீனியரின் கைப்பேசியிலிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு அதிர்ச்சியூட்டும் வீடியோ தற்போது வெளியாகி இஸ்ரேலின் பொய் முகத்திரையை கிழித்துள்ளது.

நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், மனிதா பிமான ஊழியர்கள் பயணித்த ஆம்புலன்ஸ் மற்றும் தீய ணைப்பு வாகனங்களில் அவசரநிலையை குறிக்கும் பிரகாச மான சிவப்பு விளக்குகள் எரிந்த நிலையில் தெளிவாகத் தெரி கின்றன.

இருந்தபோதிலும், இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் அந்த வாகனங்களை குறிவைத்தும், வாகனங்களில் இருந்து வெளி யேற முயன்ற உதவிக்குழுவினரை நோக்கியும் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ள கொடூரமான காட்சிகள் அந்த வீடியோவில் துல்லியமாக பதிவாகியுள்ளன.

### மூதூரில் 17 தொண்டர்கள் படுகொலை:

ஈழப் போர் தீவிரம் அடைந்த காலத்தில் மூதூரில் அக்சன் பாம் (ACF) என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வும் அரச படைகளால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்ட படுகொலையாகும்.

2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி மூதூரில் நடந்த படுகொலைச் சம்பவத்தில், பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றிய 17 தொண்டர்களின் மரணம் அக்காலத்தில் மூடிமறைக்கப்பட்டது.

எனினும் தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற் கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர் களின் உறவினர்கள் தெரிவித்து போராடி வருகின்றார்கள்.

2006ம் ஆண்டு ஜூலை மாதம் 31ஆம் திகதியன்று வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத் துக்குச் சென்றிருந்த பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய





யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

குறித்த படுகொலைச் சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

## நீதியின் முன் குற்றவாளிகள் நிறுத்தப் படவில்லை?

மூதூரில் தொண்டர் நிறுவன ஊழியர்கள் 17 பேரைப் படு கொலை செய்தவர்களை நீதிக்கு முன்னால் இலங்கை அர சாங்கம் நிறுத்தவில்லை என, மனித உரிமைகள் கண்காணிப் பகம் நீண்ட காலமாக குற்றம்சாட்டியுள்ளது.

யுத்தக் குற்றம் மற்றும் தொண்டர்களின் கொலை தொடர்பில் வெளிநாட்டுப் பங்களிப்புடன் கூடிய விசாரணை உரிய முறை யில் நடக்க உறுதிசெய்ய வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது.

தொண்டு நிறுவன ஊழியர்களின் இந்தப் படுகொலைக்கு நீதி கிடைக்காமை, யுத்தத்தின் போது நடந்த கடும் குற்றச் செயல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதை உதாசீனம் செய்தமைக்கு முதல் சாட்சியாக இலங்கை உள்ளதென, மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதனாலேயே சர்வதேச யுத்தக் குற்ற நீதிமன்றத்துக்கு சர்வ தேசத்தின் பங்கு ஏன் தேவை என்பதை, 17 தொண்டர்களின் கொலைகள் தொடர்பில், நடந்த விசாரணை முறை எடுத்துக் காட்டியுள்ளது.

அத்துடன் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைக்கான சங்கம், தனது ஆய்வின் அடிப்படையில், அவ் விடத்தில் காணப்பட்ட அரச படையினரே இக்குற்றத்தை இழைத்ததாகக் கூறியிருந்தது.

**காசாவில் ஐநா ஊழியர் 15 பேரை மார்ச் 23இல் இஸ்ரேலிய படைகள் படுகொலை செய்தது போன்று, 2006ம் ஆண்டு ஈழத்தில் ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி மூதூரில் 17 தொண்டர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த இரு நிகழ்வுகளும் மிலேச்சத்தனமான இரக்கமற்ற கொடூரமான செயல் களாகும். இதுவரை கொடூரமான இக்கொலைகளுக்கு உரித்தான நீதி கிடைக்கவில்லை.**

இதில் பொலிஸ் கான்ஸ்டபிள்களும் இலங்கை கடற்படையின் விசேட படையினரும் நேரடியாகக் பங்கேற்றதாகவும் இச்சம் பவத்தை மூடிமறைப்பதற்காக பொலிஸ் அதிகாரிகளும் நீதித் துறை அதிகாரிகளும் உதவியதாக சங்கம் கூறியிருந்தது.

இறுதியாக இந்த விசாரணை ஆணைக்குழு, குற்றவாளிகளை இனங்காணப் போதிய சாட்சியங்கள் இல்லையெனக் கூறி, வழக்கிலிருந்து, இராணுவ மற்றும் கடற்படையினரை விடு வித்தது.

## யுத்தக் குற்ற விசாரணை:

மேலும் யுத்தக் குற்றங்களை விசாரிப்பதற்கான நீதிமுறைமை யில், ஒத்துக்கொண்ட விடயங்களை அரசாங்கம் மறுத்து வருகின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வெளிநாட்டுப் பங்குபற்றுதலை கோரியிருந்தனர். ஆனால் அரசாங்கம், ஜெனீவாக் கட்டுப்பாட் டுக்கு அமைய நடந்து கொள்ளும் எனத் தீர்மானிக்க முடியாமல் இருந்தது.

போர்க்குற்ற விசாரணையில் அரசாங்கம் அதன் சர்வதேச வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வேறு ஆட்களின் பங்குபற் றலுடன் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.




கொலையுண்ட 17 பணியாளருக்கும் வேற பாதிக்கப்பட் டோருக்கும் உண்மையான நீதி கிடைக்க சர்வதேச நீதிமன்றத் தில் விசாரணை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.





# கைபேசிச் சாட்சி

08.04.2025



முல்லைத்தீவு, சின்னசாளம்பன் கிராமத்தில் ஓர் ஆண் ஒரு பெண்ணைக் கதறக் கதற அடிக்கிறார். அதை ஒருவர் கை பேசியில் படம் பிடிக்கிறார். அக்காட்சி சமூகவலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டது. விளைவாக பொலிசார் அந்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சமூகவலைத் தளங்கள் எந்தளவுக்கு இது போன்ற விடயங்களில் வினைத்திற னோடு செயல்பட முடியும் என்பதற்குத் தமிழ்ச் சமூகத்தில் இது ஆகப் பிந்திய எடுத்துக்காட்டு. இதுபோன்று சிறுவர்களைத் தாக் கும் காட்சிகள், முதியவர்களைத் தாக்கும் காட்சிகள் இடைக் கிடை சமூகவலைத்தளங்களில் யாராலாவது பகிரப்படும். பெரும்பாலும் அவற்றுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக் கப்படும். இது ஒரு நல்ல போக்கு. அதே சமயம் இந்த போக்குக்கு பின்னால் உள்ள உளவியலையும் சற்று ஆழமாக ஆராய வேண்டும்.







பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிங்கள ஊடகவியலாளர் கொழும்பு டெலிகிராப் இணையதளத்தில் எழுதியிருந்தார் “மனிதன் இப்பொழுது நடமாடும் கமராவாக மாறிவிட்டான்” என்று. அது உண்மை. இதுபோன்ற அக்கிரமங்கள் நிகழும் போது மட்டுமல்ல ஒரு இனத்துக்கு எதிரான இன அழிப்புப் போரையும் கைபேசிக் கமராக்கள் வெளியே கொண்டு வருகின் றன. வேறு எங்குமல்ல. இலங்கையில்தான். முள்ளிவாய்க் காலில் இறுதிக்கட்டப் போரில், தமிழ்க் கமராக்கள் மிகச் சில தான் இருந்தன. அவை படையினரின் பகுதிக்குள் போக முடி யாத கமராக்கள். அவை தவிர செய்மதிக் கமராக்கள் இருந்தன. எனினும் சனல் நாலு போன்ற ஊடகங்களில் வெளிவந்த சான் றுகளில் பல தமிழ்க் கமராக்களால் பிடிக்கப்பட்டவை அல்ல. அவை அதிகமாக படைத்தரப்பினரின் கமராக்களால் கைப்பற் றப்பட்ட காட்சிகள். வெற்றிக் களிப்பில் தன்னிலை பறந்து, தற்காப்பு உணர்வை இழந்து அந்த குற்றச்செயல்களை புரிந்த படைத்தரப்பே படம் பிடித்த காட்சிகள். அதனால் நாடு இப் பொழுது ஐநாவில் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றது. அப் போரை வழிநடத்திய தளபதிகளுக்கு எதிராக இதுவரையிலும் மூன்று நாடுகள் தடைகளை அறிவித்துள்ளன. அண்மையில் பிரித்தானியா நான்கு பேருக்கு எதிராகத் தடைகளை அறி வித்தது. இப்படிப் பார்த்தால் தன் சொந்தக் கைபேசிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு நாடு இலங்கை எனலாம்.

அமெரிக்காவில் 2020இல் ஒரு கைபேசிக் கமராவில் படம் பிடிக் கப்பட்ட கொலைக் காட்சி கொல்லப்பட்ட கறுப்பினத்தவருக்கு நீதி யைப் பெற்றுக் கொடுத்தது. ஒரு கறுப்பினத்தவரை அமெரிக்கப் பொலிசார் நிலத்தில் குப்புறக் கிடத்தி கழுத்தில் முழங்காலை வைத்து நெரித்துக் கொல்லும் காட்சியை அந்த இடத்தில் நின்ற Darnella Frazier-டார்நெலா ஃப்ரேசியர் என்ற 17 வயதுடைய பெண் படம் பிடித்தார். அந்தக் காணொளி அமெரிக்கா முழு வதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அந்தக் காணொளிக்காக டார்நெலா ஃப்ரேசியர் புலிஸ்டர் விருது பெற்றார்.




எனவே தம் கண் முன்னே நிகழும் அநீதிகளை, அக்கிரமங் களை படம் பிடிக்கும் கமராக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பவை என்ற பொருளில் போற்றுதலுக் குரியவை. அதேசமயம் அந்தக் கமராக்களுக்கு பின்னால் உள்ள உளவியல் தொடர்பில் வேறு ஒரு வாசிப்பும் வாதப்பிரதி வாதங்களும் உண்டு. உலகப் பரப்பில் முக்கியமாக இரண்டு சம்பவங்கள் தொடர்பாக அவ்வாறான வாதப்பிரதிவாதங்கள் அதிகம் நிகழ்ந்தன.

முதலாவது சம்பவம் வியட்நாமில் 1972ல் இடம் பெற்றது. அங்கே அமெரிக்கக் குண்டு வீச்சு விமானங்கள் ஒரு கிராமத் தின் மீது தீக்குண்டுகளை வீசின. அக்குண்டுகளால் பற்றி எரிந்த கிராமத்திலிருந்து Phan Thi Kim Phuc-பான் தி கிம் என்ற சிறுமி நிர்வாணமாக ஓடி வருகிறாள். அதை அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்தைச் சேர்ந்த Nick Ut - நிக் உட் படம் பிடிக்கிறார். அந்தப் படம் உலகப் புகழ் பெற்றது. அது பின் னாளில் பல விருதுகளை வென்றது. வியட்நாமில் அமெரிக்கா






Nick Ut – நிக் உட்

நிகழ்த்திய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக ஒரு சான்றாக அது என்றென்றும் நிலைத்து நிற்கின்றது. அதே சமயம் அதில் சம்பந் தப்பட்ட சிறுமி பின்னாளில் ஐநாவின் சமாதானத்துக்கான தூது வர்களில் ஒருவராக கௌரவிக்கப்பட்டார். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவம் சோமாலியாவில் 1993இல் நிகழ்ந்தது. அங்கே பஞ்சத்தால் மெலிந்து எலும்புக்கூடாகிய ஒரு சிறுமியை ஐநாவின் நிவாரண மையம் ஒன்றை நோக்கி நடக்கச் சக்தி இல்லாமல் தவழ்ந்து போகிறாள். அவள் எப்பொழுது இறப்பாள், அந்த உடலை எப்பொழுது தூக்கிக்கொண்டு போகலாம் என்று ஆர்வத்தோடு அருகே ஒரு பிணந்தின்னிக் கழுகு காத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் காட்சியை. கெவின் கார்ட்டர் - Kevin Carter என்ற ஒளிப்படக் கலைஞர் படம் எடுத்தார். சோமாலியாவின் பஞ்சத்தை அந்தளவுக்கு வேறு யாரும் ஒளிப் படமாக வெளியே கொண்டு வரவில்லை. அந்தப் படத்துக்கும் புலிஸ்டர் விருது கிடைத்தது.



இந்த இரண்டு சம்பவங்களும் கைபேசி காலத்துக்கு முந் தியவை. அந்த இரண்டு சம்பவங்களின் மீதும் அறம் சார்ந்த ஒரு விவாதம் நடந்தது. என்னவெனில், வியட்நாமில் தீக்காயங் களோடு ஓடி வந்த அந்த சிறுமியை காப்பாற்றாமல் அந்த ஊடக வியலாளர் படம் எடுப்பதில் கவனமாக இருந்தது ஒரு மனி தாபிமானப் பிரச்சினையாக விவாதிக்கப்பட்டது. அதுபோலவே சோமாலியாவிலும் பிணந்தின்னிக் கழுகு ஆர்வத்தோடு பார்த் துக் கொண்டிருந்த அந்தச் சிறுமியின் பசிக்கு உணவைக் கொடுக்காமல், பிணந்தின்னிக் கழுகைத் துரத்தாமல், நிதான மாக அதைப் படம் எடுத்த அந்த ஒளிப்படக் கலைஞரின்

மனிதாபிமானம் பற்றிய கேள்வி.



இந்த இரண்டு கேள்விகளிலும் நியாயம் உண்டு. ஆனால் கமராவை ஃபோகஸ் செய்வது ஒரு தேர்ந்த கலைஞருக்கு பல நிமிட வேலை அல்ல. அவர் அதனை மிகக் குறுகிய காலத்துக்குள் செய்து விடுவார். எனவே ஒளிப்படம் எடுப்பதில் செலவழித்த நேரத்தில் அந்தச் சிறு பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்கியிருக்கலாம் என்ற விவாதம் ஏற்புடையது அல்ல. அதைவிட முக்கியமான வாதம் என்னவென்றால், அந்தப் படங்கள்தான் அந்தப் பிள்ளைகளுக்கும் அவர்கள் சார்ந்த சமூகத்துக்கும் நீதியை, நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க உதவிய சான்றுகளாகும். அந்த இடத்தில் ஒளிப்படக் கலைஞரின் தொழில் சார்ந்த தர்மம் என்று பார்க்கும்பொழுது அவர் அந்த படங்களை எடுத்தது சரி. அந்தப் படங்களை எடுத்த பின் அவர் அந்தச் சிறு பிள்ளைகளுக்கு உதவியிருக்கலாம். இதில் இரண்டாவது சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஒளிப்படக் கலைஞர் புலிஸ்டர் விருது கிடைத்த நான்கு மாதங்களில் தற்கொலை செய்து கொண்டார்.

மேற்கூறிய இரண்டு சம்பவங்களையும் இப்பொழுது இக்கட்டுரையில் தொடக்கத்தில் கூறப்பட்ட சம்பவங்களோடு பொருத்திப் பார்க்கலாம். மூர்க்கமாகத் தாக்கப்படும் ஒரு பெண்ணைக் காப்பாற்றாமல் அந்தக் காட்சியைப் படம்பிடித்துக் கொண்டிருந்தது சரியா என்ற கேள்வி சமூக வலைத்தளங்களில் எழுப்பப்படுகிறது. ஆனால் யாரோ ஒருவர் அதைப் படம் எடுத்ததாலதான் அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைத்திருக்கிறது.

படம் எடுப்பதும் அந்த அக்கிரமம் தொடர்பாக சமூகவலைத்தளங்களில் எழுதுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதோ ஒரு விகிதமளவுக்கு உதவுகின்றன. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே சமயம் அது சமூக வலைத்தள உளவியலையும் பிரதிபலிக்கின்றது. படம் எடுப்பதோடும் அது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பகிர்வதோடும் தமது பொறுப்பு முடிந்து விட்டது என்று கருதும் ஒரு மனோநிலை.

ஆனால் எல்லாச் சமூகங்களிலும் ஒரு பகுதியினர் அப்படித்தான் இருப்பார்கள். அவர்களால் முடிந்த நற்செயல் அவ்வளவுதான். அதைக் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஒரு சமூகத்தில் இருக்கும் எல்லாருமே சிறுமை கண்டு பொங்கும் போராளிகளாக இருப்பதில்லை. அதிகமானவர்கள் வாயால் பொங்கும் போராளிகள்தான். பொதுவாக மனிதர்கள் தியாகம் செய்யாமல் எப்படி மற்றவர்களுக்கு உதவலாம் என்றுதான் சிந்திப்பார்கள். இங்கு ஒரு கூர்மையான உதாரணத்தைச் சொல்லலாம். மோட்டார் சைக்கிள் ஓடும் பொழுது கவலையீனமாக ஸ்டாண்டைத் தட்டமறந்தால் எதிர்ப்படும் யாராவது ஒருவர் ஏதோ ஒரு சமிக்ஞையைக் காட்டி ஸ்டாண்ட் தட்டப்படவில்லை என்பதனை தமக்கு உணர்த்துவார்கள். அதில் ஒரு மனிதாபிமானம் உண்டு. அந்த உதவியைச் செய்வதனால் அவர்களுக்கு எந்த நட்டமும், இழப்பும் கிடையாது. ஆனால் அந்த உதவியினால் ஒர் உயிர் பாதுகாக்கப்படும்.



எனவே சமூகத்தில் பெரும்பாலானவர்கள் அவ்வாறான உதவி களைச் செய்பவர்கள்தான். அந்தப் பெண் தாக்கப்படுகையில் படம் எடுத்தவரையும் அப்படித்தான் பார்க்க வேண்டும். இந்த இடத்தில் நீதியின் அளவுகோல்களையும் தர்மத்தின் அளவுகோல்களையும் வைத்துக்கொண்டு அந்த கைபேசிக்காரரை விமர்சிக்கத் தேவையில்லை. அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைப் பதற்கான தொடக்கமே அந்தக் காணொளிதான்.

மேலும் அந்த படம் எடுத்த நபர் மட்டுமல்ல அங்கு சூழ்ந்திருந்த அனேக மானவர்கள் அந்த அக்கிரமத்தைத் தடுக்க முயற்சிக்க வில்லை. எல்லாருமே பார்வையாளர்களாகத் தான் தோன்று கிறார்கள்.

அவர்கள் ஏன் அந்த அக்கிரமத்தைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்? ஒரு மகத்தான போராட்டத்தை நடத்திய மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட அக்கிரமம் ஒன்று நிகழும் பொழுது, அந்தச் சிறுமை கண்டு பொங்கி எழ ஒருவர் கூட இருக்கவில்லையா? இதுபோன்ற விடயங்களில் சிறுமை கண்டு பொங்க வேண்டிய ஒரு மக்கள் கூட்டம் பார்வையாளராக நிற்பது எதைக் காட்டுகிறது?

இப்படித்தான் சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சியில் ஊடகவியலாளரான தமிழ்ச்செல்வனை அவர் எழுதிய ஒரு செய்திக்காக சிலர் தாக்கினார்கள். கண்டி வீதியில் பலர் பார்த்திருக்க அவர் தாக்கப்பட்டார். தாக்கியவர்களை யாரும் தடுக்கவில்லை. தமிழ்ச்செல்வன் எழுதிய செய்தி யாருடைய பிள்ளைகளை போதைப் பொருட்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கத்தை கொண்டதோ அதே மக்கள் அவர் தாக்கப்படுகையில் கையாலாகாத பார்வையாளர்களாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சுயநலம் அல்லது கோழைத்தனம் அல்லது பார்வையாளர் மனோநிலை என்பது பாரதூரமானது. வீரமும் தியாகமும் நிறைந்த மகத்தான ஒரு போராட்டத்தை நடத்திய மக்கள் பார்வையாளர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்களா?

மேலும், தாக்கப்பட்ட பெண் வெடிப்பொருட்களை அகற்றும் நிறுவனத்தில் வேலை செய்கிறார். அதாவது யுத்த களத்தோடு தொடர்புடைய ஒரு துறை. தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக அவர் ஏன் திருப்பித் தாக்க முயற்சிக்கவில்லை? மன்றாடாமல் திருப்பித் தாக்குவதில்தான் முன் உதாரணம் உண்டு. இது எல்லாப் பெண்களுக்கும் பொருந்தும். எறும்பு கூட தன்னை மிதிப்பவர்களைக் கடிக்கின்றது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பெண்கள் ஏதோ ஒரு விதத்தில் தம்மை தற்காத்துக் கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். சிறுமை கண்டு பொங்காது பார்வையாளர்களாக நிற்பவர்களின் தொகை அதிகரித்துவரும் ஒரு சமூகத்தில் பெண்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டும். தாக்குபவனைக் கும்பிடக் கூடாது.

நன்றி: நிலாந்தன்



# தாய்வானை சூழும் சீன ஆக்கிரமிப்பு: அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

05.04.2025

சீன அரசு மீண்டும் தாய்வானைச் சுற்றி கடந்த வாரம் பாரிய போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. தாய்வான் சுதந்திர நாடாகி, தேசிய சுயநிர்ணயம் பெறவும் நீண்ட காலமாக முயற்சியும் செய்து வருகிறது.

இன்றைய உலகில் நடக்கும் நிகழ்வுகளால் சீன அரசின் செயற் பாட்டை எவராலும் இலகுவாக கணிக்க முடியாமல் உள்ளது. அமெரிக்காவின் பிராந்திய நலன்களைப் பேணவும், சீனாவின்



ஒற்றையாட்சி அச்சுறுத்தல்களாலும் தாய்வான் மீதான பாரிய அழுத்தங்களாக உள்ளன.

## தனிநாடாக பிரிந்த தாய்வான் :

சீனாவிலிருந்து தனிநாடாக பிரிந்து சென்ற தங்கள் நாட்டின் மீது படையெடுக்க, எல்லையில் படைகளை குவித்து போர் பயிற் சியில் ஈடுபட சீனா தயாராகி வருவதாக தாய்வான் இராணுவம் மீண்டும் குற்றம்சாட்டியுள்ளது.

சீனாவின் கிழக்கு மற்றும் தெற்கு கரையோரப் பகுதிகளில் பயிற் சிகளை நடத்துவதாகக் கூறி சீனா படைகளை நிலைநிறுத் தலாம். மேலும் தாய்வானை சுற்றி வளைக்கும் நோக்கில் மேற்கு பசிபிக் பகுதிக்கும் சீனா போர்க்கப்பல்களை அனுப்ப வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா திட்டமிடு கின்றது. இதற்காக தாய்வான் அருகே அடிக்கடி போர்ப்பயிற்சி மற்றும் தாய்வான் எல்லைக்குள் போர் விமானங்களை அனுப்பி சீனா பதற்றத்தை தூண்டியும் வருகிறது.




இந்நிலையில் தாய்வான் எல்லைப் பகுதியில் சீனாவின் அத்துமீறல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் குற்றஞ்சாட்டி உள்ளது.

தாய்வானை அச்சுறுத்தும் வகையிலும், தாய்வானைச் சுற்றி யும் பாதுகாப்பு பயிற்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் தனது இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையை சீனா அனுப்பியுள்ளது.

இந்த பயிற்சியில் சீன கடற்படைக்கு சொந்தமான போர் கப் பல்கள் மற்றும் போர் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

## அரை நூற்றாண்டு பகை:






சீனா-தாய்வான் இடையே அரை நூற்றாண்டுக்கும் மேலாக மோதல் போக்கு நீடிக்கிறது.

பெரும்பாலான உலக நாடுகளின் அங்கீகாரம் இல்லாத போதிலும், தாய்வான் தன்னை தன்னாட்சி பெற்ற தனிநாடு என்கிறது, ஆனால் சீனாவோ தாய்வானில் அமைந்திருக்கும் அரசு, சட்டவிரோதமானது, தாய்வான் சீனாவிலிருந்து பிரிந்த ஒரு மாகாணப்பகுதி என்கிறது.



அவசியம் ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என தொடர்ந்து சீனா மிரட்டி வருகிறது. இந்த சூழலில் கடந்த சில வாரங்களாக சீனா-தாய்வான் இடையிலான ராணுவ பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

## தனிநாடக பிரிவினை :

சீனாவில், 1911-ம் ஆண்டு மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. 1927-ல் ஆளுங்கட் சிக்கு எதிராகச் சீன கம்யூனிஸ்ட் கட்சிப் போர்க்கொடி தூக்க, 1930-களில் உள்நாட்டுப் போர் வெடித்தது. 1949 வரை நடந்த இந்தப் போரில் தோல்வியுற்ற சீன தேசியக் கட்சியினர், தென் சீனக் கடலில் அமைந்திருக்கும் தீவான தாய்வானில் தஞ்ச மடைந்தனர். இதையடுத்து சீனாவிலிருந்து பிரிந்து தனித்தீவு நாடாகச் செயல்படத் தொடங்கியது தாய்வான்.

1975 வரை சீன தேசியக் கட்சியின் தலைவரான சியாங்கின் ஆட்சியிலிருந்த தாய்வான், அதன் பிறகு மெல்ல மெல்ல ஜன நாயகத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. நீண்டகாலமாகவே









தாய்வானைச் சொந்தம் கொண்டாடிய சீனா, 1981-ல் "ஒரு நாடு-இரண்டு அமைப்புகள்" என்ற ஆட்சி முறைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

இந்தத் திட்டத்தின்படி, 'எங்களுடன் தாய்வான் இணைந்து கொண்டால், ஹாங் காங் கில் இருப்பதுபோல உங்களுக்கும் தன்னாட்சி அதிகாரம் வழங்குகிறோம்" என்று சீனா ஆசை காட்ட, அதை மறுத்துவிட்டது தாய்வான்.

## சீனா படையெடுக்க சாத்தியமா ?

தொழில்துறை, தொழில்நுட்பத்துறைகளில் அசுர வளர்ச்சி பெற்று தாய்வான் பொருளாதாரத்தில் வேகமாக முன்னேறத் தொடங்கியது. இதைக் கண்டு அஞ்சிய சீனா, "தாய்வானில் இருப்பது சட்டவிரோதமான ஆட்சி. அது தனிநாடு அல்ல, எங்களிடமிருந்து பிரிந்த மாகாணம் மட்டுமே" என்று சொல்லி வந்தது.

2005-ல் தாய்வானைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பிரிவினை வாத தடுப்புச் சட்டத்தையும் கொண்டு வந்தது சீனா. அதன் பிறகு, இரண்டு நாடுகளுக்கும் இடையேயான மோதல் உச்சம் தொட்டது. 2013-ல் சீன அதிபரான ஜி ஜின்பிங், தாய்வானைச் சீனாவின் கட்டுக்குள் கொண்டுவருவதில் தீவிரம் காட்டினார்.

அதைத் தொடர்ந்து, 2016-ல் தாய்வான் சீன ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த சட்டங்களைக் கொண்டுவந்து, பாதுகாப்புத் துறையையும் மேம்படுத்தியது. வெளிநாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தத் தொடங்கியது.



அமெரிக்கவுடன் நீண்டகால நட்புறவை ஏற்படுத்திக்கொண்டதால், தாய்வானுக்குப் பல நவீன ஆயுதங்கள் கிடைத்தன. சர்வதேச ரீதியில் வத்திக்கானும், வேறு 13 நாடுகளும் தாய்வானை இறையாண்மைகொண்ட நாடாக அங்கீகரித்திருக்கின்றன.

சீனா, மீண்டும் தாய்வானை தன்னில் இணைத்துக்கொண்டு விட்டால், அது பசிபிக் பிராந்தியத்தில் தனது அதிகாரத்தைச் சுதந்திரமாகக் காட்ட வழிவகுப்பதுடன், குவாம் மற்றும் ஹவாய் வரையிலான அமெரிக்க இராணுவ தளங்களுக்கு அது அச்சுறுத்தலாகவும் அமையும்.

ஆனால் தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவுக்கரம் நீட்டி வருவதும், சீனாவின் எதிர்ப்பைப் புறந்தள்ளி வருகிறது.



# தமிழ்த்தேசியம் என்றால் என்ன...?

பலர் எம்மை பார்த்துக் கேட்கும் கேள்வி, பலர் சமூகவலைத் தளங்களில் முகநூலில் கேட்கும் ஒரு சொல்லாடல் இது.



தமிழ்தேசியம் என்பது என்ன என்பதை புரிந்துகொள்வது ஒவ்வொரு தமிழருக்கும் நல்லது. பொதுவாக தமிழ் இளை ஞர்கள் தமிழ் யுவதிகள் தமிழ் மாணவர்கள் ஏன் பெரியவர் களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்தேசியம் அரசியலுக்கான சொல் அல்ல ஆத்மார்க்கமான தமிழினத்தின் இருப்புக்கான குறியீட்டுச்சொல்.

தேசியம் என்பது, ஒரு இனம், தாம் வாழ்தல் பொருட்டு நீண்ட காலமாக ஒரு பாரம்பரிய நிலத்தில், தனியான மொழி, பண்பாடு, கலாசாரம், பொருண்மிய வளம் பொருந்தியதாக காணப் படுதலாகும்.

அதன் விரிந்த உண்மையான உட்பொருள் இன்னும் விசால மானது. குறித்த பாரம்பரிய நிலத்தில் அவர்களின் சொந்த நிலம், ஆகாயம், கடல், வளிமண்டலம், இயல் தாவரங்கள், விலங் குகள், பறவைகள், அவர்தம் பழக்க வழக்கம், வழிபாட்டு முறைமைகள் என்று அத்தனை விசேட அம்சங்களும் தேசியத்தின் அர்த்தக் கூறுகளாகும்.

அதன் மெய்ப்பொருள் உணர்த்துவதுதான் தமிழர்கள் தனி யான தேசிய இனமாக தம்மை வெளிப்படுத்துவதற்கு காரணம்.

இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழர்களின் மரபு வழித்தாயக பூமி எனப்படுவதன் அர்த்தம், மேற்சொன்ன அடையாளங்களின் பரிணாமப் படிமுறையாகும்.

அதாவது தமது அப்பன் அவனது அப்பன் அவனது அப்பன், ஆச்சி அவளது ஆச்சி அவளது ஆச்சி என பரம்பரையாக மேற் சொன்ன அடையாளங்களோடு வாழ்ந்து, அதனை உருக் குலையாமல் அடுத்தடுத்த தலைமுறையாக கடத்திவந்து நம்மிடம் சேர்த்திருப்பதுதான்.

எனவே தமிழர்கள் தமது மரபுவழி தாயக பூமியில், தமிழ் அடையாளங்களோடு தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதால் அவர்களை ஒரு தேசிய இனமாகக் கொள்ளுதல் அவசியம்.

தேசிய இனமென்றால்தான் சுயநிர்ணய உரிமையுடன் கூடியதான, அதாவது தங்களைத் தாங்களே நிர்ணயம் செய்து ஆள்வதிற்குரிய தகுதியுடன் பிரிந்து செல்லவோ சேர்ந்திருக் கவோ முடியும்.

## தமிழ்தேசியம்

ஒரு தொன்மை வாய்ந்த இலக்கியப் பாரம்பரியம் கொண்ட ஒரு மொழி, தனித்துவமான கலாசாரம், பொதுவான பொருளா தாரம், ஒரு தொடர்ச்சியான வாழ்நிலப்பகுதி இவற்றைக் கொண்டதுதான் ஒரு தேசிய இனம்!

இது உலகம் ஏற்றுக்கொண்ட வரை முறை! ஒரு தேசிய இனத்தின் உணர்வுரீதியான அடையாளம் அதாவது உயிர் மூச்சுதான்.

தேசியம் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் என்போர் தமது மதங்களுக்குரிய தனித்தனி பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருந்த போதும் பொதுவான தமிழ் பண்பாட்டு அம்சங் களால் பிணைக்கப்பட்டுள்ளனர்.

அதை உணர்ந்த தந்தை செல்வா தமிழர்கள் என்பதை "தமிழ்பேசும் மக்கள்" என ஒரு ஒற்றுமை கருத்தியலை வெளிப் படுத்தினார்.

முக்கியமாக பொதுவான கலை இலக்கிய விழுமியங்கள் உள்ளன. இப்படியான நிலையில் தமிழ் தேசியம் பற்றிய குழப்பம் ஏற்பட வேண்டியதில்லை.

## தேசம் என்றால்...

ஒரு நிலப்பகுதியில் ஒரு பொது மொழியும், பொதுப் பொருளாதார வாழ்வும், பொதுப்பண்பாடும், அப்பண்பாட்டில் உருவான உளவியல் உருவாக்கமும் கொண்டு வாழ்ந்து வரலாற்றில் நிலைத்துவிட்ட ஒரு சமூகமே ஒரு தேசம் என்றார் அறிஞர் ஜே.வி.ஸ்டாலின்.

ஒரு தேசத்திற்கு நான்கு அடிப்படை தேவைகள் வேண்டும்-

1. முதல் தேவை தாயக மண்.
2. இரண்டாவது தேவை பொது மொழி...
3. மூன்றாவது தேவை பொதுப் பொருளியல்..
4. நான்காவது தேவை பொதுப் பண்பாட்டில் உருவான நாம் நம்மவர் என்ற தேசிய இன ஒருமை உணர்வு.

ரசியப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய தலைவர்களில் ஒருவரான ஜே.வி.ஸ்டாலின் தேசம் குறித்துச் சொன்ன மேற் கண்ட வரையறைகள் பொதுவாக உலகு தழுவிய பொருத்தம் உடையது.

இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு.

பொது மொழி உருவாகாத நாகர்கள் தாயகம், பொருளியல், பண்பியல் அடிப்படையில் தேசிய இனமாகவும் நாகாலாந்து அவர்கள் தேசமாகவும் விளங்குகிறது.

இது போன்ற சில விதி விலக்குகளும் உண்டு. ஈழத்தமிழர் களாகிய நாம் பாராம்பரியப்பண்பாட்டு தமிழ் கலாசார வாழ் வுரிமைக்கான அத்தனை குண அம்சங்களையும் கொண்ட தனித்துவமான ஒரு இன அடையாளத்தை கொண்ட மக்கள் எமக்கான சுதந்திரம் ஆளும் வர்க்கமான சிங்கள ஆட்சி யாளர்கள் தொடர்ச்சியாக பிரித்தானியரிடம் இருந்து 1948, பெப்ரவரி, 4, ம் திகதி இலங்கை சுதந்திரம் அடைந்த போது உண்மையிலேயே தமிழ்பேசும் மக்களுக்கு குறிப்பாக தமிழ் தேசிய மக்களுக்கு அந்த சுதந்திரம் கிடைக்கவில்லை.

இதனால்த்தான் தந்தைசெல்வாவால் தொடங்கிய அகிம்சைப் போர் தலைவர் பிரபாகரானால் ஆயுதப்போராட்டமாகமாறி தற்போது களத்திலும், புலத்திலும் இராஜதந்திர செயல்பாட்டு அரசியலாக சர்வதேசம் நோக்கி வளர்ச்சியடைந்துள்ளது.

"தமிழ்தேசியம்" என்றால் எமது பறப்புரிமையுடன் கூடிய சுவாசம் என்பதை உணர்ந்து எமது ஒற்றுமை மூலம் எமக் கான நீதி நியாயம் உரிமை சுதந்திரவாழ்வுக்காக சோரம் போகாமல் தமிழர்கள் தமிழ்தேசிய மக்கள் என்ற என்ற உணர்வுடன் ஒன்றுபடுவோம்.

விடுதலை கிடைக்கும் வரை நாம் நாமாக தமிழன் தமிழனாக வாழ்வோம்.

காலத்துக்கு காலம் இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் எல்லாம் எமது தமிழ்த்தேசிய பலத்தை ஒற்றுமையாக வெளிக் காட்டுவோம்.

நன்றி: -பா.அரியநேத்திரன்-
25.04.2024

**சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம், பொருளாதார வாழ்வில் தன் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும். அத்தகைய இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க இயலுமென்பது நியதியாகும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# நூல் வெளியீடு
# BOOK LAUNCH

சாள்ஸ் அன்ரனியோடு
செயற்பட்ட போராளிகள் மற்றும்
ஏனைய துறைப் போராளிகளாகக்
களமாடியவர்களின் எழுத்துகளைத்
துளசிச்செல்வன் அவர்கள் தொகுக்க,
உலகத்தமிழர் உரிமைக்குரல்
வெளியிடும் நூல்

## பிரபாகரன்
## சாள்ஸ் அன்ரனி




Book compiled by Thulasiselvan, featuring the writings of those who fought alongside Charles Antony and other sectoral fighters, to be published by Voice of Global Tamil Rights

## Prabakaran
## Charles Antony



**இடம்** 90 Littles Road, Scarborough, Ontario, M1B 5E2

**May 3rd 2025**

**5.00PM to 8.00PM**

தொடர்புகளுக்கு:
மகாஜெயம் 647.262.5587
ஜெயந்தன் 647.853.2918

Voice of Global Tamil Rights — VOICE — உலகத்தமிழர் உரிமைக்குரல்

# சரியான நேரத்தில் சரியான கூட்டு?

03.04.2025



"அனுரவின் அரசாங்கத்தை வலுவான முறையில் எதிர்கொள் வதற்கும், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்கும் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை" என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந்திரக்குமார் இந்திய ஊடகவிய லாளரான மீரா சிறீனிவாசனுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் கூறியிருக்கிறார்.

புதிய யாப்பு ஒன்று உருவாக்கப்படுமிடத்து அந்த யாப்பை நோக்கி கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. தமிழர்கள் ஒரு தரப் பாகத் திரண்டு நின்றால்தான் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை பலமாக வெளிப்படுத்தலாம். மிகக் குறிப்பாக சுமந் திரனும் அவருடைய கூட்டாளிகளும் இணைந்து முன்பு தாங்கள் தயாரித்த "எக்கிய ராஜ்ய" என்கிற இடைக்கால வரைவை மீண்டும் மேசைக்கு எடுப்பதைத் தடுப்பது என்றால் தமிழ்த் தரப்பு ஐக்கியப்படுவது தவிர்க்கமுடியாதது.

அதேசமயம் யாப்பை நோக்கி மட்டும் தமிழ்த் தரப்பு ஐக்கியப் படக்கூடாது, மாறாக தேர்தல்களை நோக்கியும் சமயோசித மான, தந்திரோபாயமான கூட்டுக்களுக்குப் போகவேண்டும். அல்லது குறைந்த பட்சம் போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை களுக்காவது போகவேண்டும் என்பதனை நான் தொடர்ச்சி யாகச் சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன்.

அதற்கு ஒரு அடிப்படைக் கோட்பாட்டு விளக்கம் உண்டு. தேர் தல் கூட்டுகள் பெரும்பாலும் தந்திரோபாயமானவை. ஆனாலும் தமிழ்மக்கள் ஒரு தரப்பாக தங்களை பலப்படுத்த வேண்டும் என்று சிந்தித்தால், தேர்தலுக்கும் அங்கே ஒரு பங்கு உண்டு. தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு தரப்பாகத் தோற்கும் பொழுது பின்னர் நாடாளுமன்றத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்பு பலமாக நின்று பேச முடியாது. எனவே ஒரு தரப்பாக தமிழ் மக்களைப் பலப்படுத்துவது என்று பார்த்தால் அது நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்று எல்லாத் தேர்தல் களங்களிலும் தமிழ் தரப்பை ஆகக்குறைந்த பட்சம் தந்திரோபாய நோக்கத் தோடாவது ஒருங்கிணைக்க வேண்டும்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாய கூட்டுக்களுக்குத் தயாராக இல்லை. அவர்கள் கொள்கை வழிக் கூட்டுக்களுக்கே தயாராக இருப்பதாகக் கூறிக்கொள்கிறார்கள். கடைசியாக இயங்கிய உள்ளூராட்சி சபைகளின் கடைசி கட்டத் தில் காரைநகரில் ஒரு பிரச்சினை வந்தது. அங்குள்ள சுயெட் சைக் குழு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து ஆட்சி அமைக்க விரும்பியது. அது தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு நான் உரையாடினேன். அவர்கள் எந்த விதமான நிபந்தனையும் இன்றி குறிப்பிட்ட சுயேட்சைக் குழு வுக்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். அதேசமயம் அந்த உரை யாடலின் போது, செல்வராசா கஜேந்திரன் என்னிடம் சொன் னார், "அண்ண இது போன்ற விடயங்களில் நீங்கள் என்ன கேட்டாலும் நாங்கள் செய்வோம். ஆனால் ஐக்கியத்தைப் பற்றி மட்டும் கேட்டு விடாதீர்கள்" என்று.

அந்தளவுக்கு அவர்களுக்கு ஐக்கியம் அலர்ஜிக்காக இருந்தது. இருக்கலாம். அரங்கில் நம்பிக் கூட்டுச்சேர முடியாத சக்திகளே அதிகமாக இருக்கலாம். ஆனால் இங்கே பிரச்சனை என்ன வென்றால், ஒரு தரப்பாக தமிழ் மக்களை பலப்படுத்துவது



என்று சொன்னால் அதனை தந்திரோபாயமாகத்தான் செய் யலாம். அதுவும் தேர்தல் வழியில் தந்திரங்கள்தான் அதிகம்.

நான் திரும்பத்திரும்பக் கூறும் ஓர் உதாரணம் உண்டு. சுத்த மான தங்கத்தை வைத்து ஆபரணங்களைச் செய்ய முடியாது. தங்கத்தில் நகை செய்ய வேண்டுமானால் குறிப்பிடத்தக்க அள வுக்கு செப்பைக் கலக்க வேண்டும் வேண்டும். இந்த பூமியிலே பெரும்பாலான விடயங்கள் அப்படித்தான். அதிலும் அரசியலில், குறிப்பாக தேசியவாத அரசியலில், அதுதான் நடைமுறைச் சாத்தியமானது.

அரசியலில் புதுமையானது, நீதியாயானது, புனிதமானது, சரியானது, பிழையானது... போன்ற அனைத்துமே சார்புக் கணியங்கள்தான். ஒப்பீட்டு முடிவுகள்தான்.நடைமுறை வாழ் வில் முழுப் புனிதமானது எதுவும் இல்லை. முழுத் தூய்மை யானது எதுவும் இல்லை. இரண்டாம் உலகப்போரில் ஹிட் லரையும் முசோலினியையும் தோற்கடிப்பதற்காக இரண்டு கொள்கை எதிரிகள்தான் கூட்டுச் சேர்ந்தார்கள். அதாவது முத லாளித்துவமும் கொம்யூனிசமும் கூட்டுச்சேர்ந்தே இரண்டாம் உலகப்போரை முடிவுக்கு கொண்டு வந்தன. கொள்கைப்படி பார்த்தால் அது ஒரு பிழையான கூட்டு. ஆனால் அது உலகப் போரை நிறுத்திய கூட்டு.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்பொழுது உருவாக்கியிருக்கும் கூட்டில் இருப்பவர்களில் அநேகர் முன்பு வெவ்வேறு கூட்டுக்களில் இருந்தவர்கள் வெவ்வேறு தரப்புக ளோடு சேர்ந்து உழைத்தவர்கள். இறந்த காலத்தைக் கிண்டி னால் யாருமே புனிதரில்லை. ஏன் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியும் தான். கஜேந்திரக்குமாரின் தகப்பனார் குமார் பொன் னம்பலம் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் பின்னணி யில் 1980களின் இறுதிக் கட்டத்தில் கொழும்பில் உள்ள தனது இல்லத்தின் பாதுகாப்புக்கு புளொட், டெலோ ஆகிய இயக்கங் களின் ஒத்துழைப்பைப் பெற்றிருந்தார். அவருடைய வீட்டுக்கு பாது காப்பு பணிக்காகச் சென்ற தமது அனுபவத்தை ஏற்கனவே சிவாஜிலிங்கம் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார். புளொட் இயக்கத்தின் சிவநேசனும் அவ்வாறு கூறியுள்ளார். ஆனால் அதற்காக பின்னாளில் குமார் சிந்திய இரத்தத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. அதுதான் அரசியல்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தந்திரோபாயமாகக் கூட்டுக்களை வைத்துக் கொள்வதற்குத் தயாராக இல்லை. கொள்கை வழிக் கூட்டுக்கே தங்கள் தயார் என்று திரும்பத் திரும்பக் கூறிவருகின்றது. தங்கள் கொள்கையில் வழுக் காதவர்கள் என்று கூறுவதன் மூலம் மற்றவர்களை கொள்கை களில் வழுக்கியவர்கள் என்று முத்திரை குத்தி வந்தது. அதன் விளைவாக கடந்த 15 ஆண்டுகளாக அவர்களால் தாங்கள் முன்வைக்கும் இலட்சியத்தை நோக்கி அவர்களுடைய சொந் தக் கட்சியையும் கட்டியெழுப்ப முடியவில்லை; தமிழ் மக்களை யும் கட்டியெழுப்ப முடியவில்லை.

இப்பொழுது யாப்புருவாக்க முயற்சியில் தமிழ் மக்கள் பேரவை யின் முன் மொழிவின் அடிப்படையில் ஒன்றுசேர வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் பேர வையை செயல்படாத நிலைக்கு தள்ளியதில் அவர்களுக்குப் பொறுப்பு இல்லையா? அவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் பேரவையை அதன் அடுத்தகட்டக் கூர்ப்புக்குக் கொண் டுபோய் இருந்திருக்கலாம். பேரவை என்ற தாயின் முடிவுக்குக் காரணமாக இருந்து கொண்டு அந்தத் தாய் ஈன்ற பிள்ளை யாகிய முன்மொழிவை இப்பொழுது காவுகின்றார்கள்.

அப்படித்தான் பொது வேட்பாளரின் விடயத்திலும் முன்னணி அந்த கூட்டுக்குள் இணைந்து இருந்திருந்தால் நிலைமை வேறு விதமாகப் போயிருக்கும். கடந்த நாடாளுமன்றத் தேர் தலில் நிகழ்ந்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆனால் தொடக்கத்தில் இருந்தே பொது வேட்பாளரை முன்னணி எதிர்த் தது. மட்டுமல்ல, பொது வேட்பாளருக்கு ஆதரவானவர்களை இந்தியாவின் ஏஜென்ட்கள், முதுகெலும்பில்லாதவர்கள் என்று கூறியது. பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் சந்திப்புகளின் போது குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை நோக்கி கஜேந் திரன் பின்வருமாறு சொன்னார் "இந்த முயற்சியில் நீங்கள் வெற்றிபெற்றால் நாங்கள் இப்பொழுது வைத்திருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்று எங்களுக்குத் தெரியும். அதை நன்கு தெரிந்து கொண்டுதான் உங்களை எதிர்க்கிறோம்" என்று.

ஆனால் பொது வேட்பாளருக்கு முன்னணியின் தீவிர ஆதர வாளர்கள் பலரும் வாக்களித்தார்கள். தேர்தல் முடிவுகளின் பின் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை கஜேந்திரக் குமார் தமிழ்த்தேசியத் தன்மை மிக்க வாக்குகள் என்று கூறி னார். அதெப்படி வெளிநாட்டின் ஏஜென்ட்கள் தமிழ் தேசிய தன் மைமிக்க வாக்குகளைத் திரட்டலாம்? கெட்ட கூட்டு எப்படி நல்ல விளைவைத் தரும் ?

தமிழ் மக்கள் பேரவையின் சிதைவுக்குக் காரணமாக இருந்த ஒரு தரப்பு கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளின் பின் அதே பேரவையின் முன் மொழிவை கையில் எடுத்திருப்பது எதைக் காட்டுகின்றது? ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எடுத்த முடிவு தீர்க்கதரிசனமற்றது என்பதைத்தானே? பொது வேட் பாளரைத் தவறு என்று கூறிவிட்டு அவர் பெற்ற வாக்குகளைத் தேசியத் தன்மை மிக்கவை என்று கூறுவது எதைக் காட்டு கின்றது? எட்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் எடுத்த முடிவு தவறானது என்பதைத்தானே? பொது வேட்பாளருக்காக முன் னணியில் நின்று உழைத்த ஒரு சிவில் சமூகச் செயற்பாட்டாளர் கூறுவதுபோல "முன்னணியானது சரியான வேளைகளில் பிழையான முடிவை எடுக்கிறது. பிழையான வேளைகளில் சரியான முடிவை எடுக்கின்றது" என்பது சரியா ? இப்பொழுது முன்னணி எடுத்திருக்கும் முடிவானது சரியான வேளையில் எடுக்கப்பட்ட சரியான முடிவா? கடந்த 15 ஆண்டுகால அனுபவத் திலிருந்தும் கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் முன் னணி அப்படி ஒரு முடிவை எடுத்திருக்குமாக இருந்தால் அதை வரவேற்க வேண்டும்.

ஒப்பீட்டளவில் பெரிய கூட்டை முன்னணி உருவாக்கியிருக் கிறது. அதை வளர்த்தெடுக்க வேண்டும். ஒப்பீட்டளவில் யார் தேசத்தைத் திரட்டும் நம்பிக்கைகளை பலப்படுத்துகின்றார் களோ, அந்த நம்பிக்கைகளுக்காக உண்மையாக உழைக்கின் றார்களோ, அவர்களை தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும். பொது வேட்பாளருக்குப் பின் மீண்டும் ஒப்பீட்டளவில் குறிப்பிட் டுச் செல்லக்கூடிய ஒரு கூட்டை முன்னணி உருவாக்கியிருக் கிறது. அது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட சரியான முடிவு என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல் லாக் கட்சிகளுக்கும் உண்டு. குறிப்பாக வாக்களிக்கப் போகும் மக்களுக்கு உண்டு.

நன்றி: நிலாந்தன்


ஏப்ரல் 19 2025
ஈகைச்சுடர் அன்னை பூபதி
அவர்களின்
37ஆம் ஆண்டு நினைவில்
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
Annai Poopathy Kanapathipillai
கிரான், மட்டக்களப்பு
தமிழீழம்
மண்ணில்: 03.11.1932
ஈகைச்சாவு: 19.04.1988
உண்ணா நோன்பு போராட்டத்தில் ஈகைச்சாவைத்
தழுவிக்கொண்ட முதல் பெண்மணி
Annai Poopathy was the first woman to embrace
martyrdom in the fasting struggle for Thamileelam
முல்லைத்தீவு ஆனந்தபுரப்பகுதியில் சிறீலங்கா சிங்களப்படைகளின்
முற்றுகை உடைப்புச்சமரின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
மூத்த தளபதிகள் மற்றும் ஏனைய மாவீரர்களின்
16ஆம் ஆண்டு
வீரவணக்கம்
பிரிகேடியர்
துர்க்கா
பொன்னுத்துரை கலைச்செல்வி
வலிகாமம், யாழ்
(24.03.1971 - 03.04.2009)
பிரிகேடியர்
மணிவண்ணன்
அழகரத்தினம் துசியந்தன்
பருத்தித்துறை, யாழ்
(31.12.1970 - 03.04.2009)
பிரிகேடியர்
கடாபி
ஆறுமுகம் விநாயகமூர்த்தி
கொற்றாவத்தை - வதிரி, யாழ்
27.02.1968 - 04.04.2009
பிரிகேடியர்
விதுசா
கந்தையா ஞானபூரணி
கரவெட்டி, யாழ்
(29.09.1969 - 04.04.2009)
பிரிகேடியர்
தீபன்
வேலாயுதபிள்ளை பகீரதகுமார்
கண்டாவளை, கிளிநொச்சி
(08.01.1966 -05.04.2009)
சங்கத்தமிழ்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் - The Thirst of Tigers is the Homeland of Thamileelam"